58902

பிரபஞ்சத்தை
அலிலக
மனிடர் முன்னேற்றம்

Y
N23

58902

# பஞ்ச தாரை

அல்லது

# மானிடர் முன்னேற்றம்

[illegible] இராயப்பேட்டை வெஸ்லியன் கலாசாலை

சரித்திர போதகாசிரியரும்

“உலக சரித்திரம்” நூலாசிரியருமான

வை. சூரியநாராயண சாஸ்திரி, [illegible]

எம். ஏ. [illegible]

அவர்களால் இயற்றப்பெற்றது.

சூ. வை. வெ. சகோதரர்களால்

பிரசுரஞ் செய்யப்பெற்றது.

1923

All Rights Reserved
Copy Right Reserved.

| | Rs. | A. | P. |
|---|---|---|---|
| Calico binding | 1 | 4 | 0 |
| Stiff cover | 1 | 0 | 0 |
| Paper cover | 0 | 12 | 0 |

To be had of the Author or S. V. V. Brothers

c/o

30, Mount Road, Madras.

69

N 23

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் ஆகஸ்ட் வருடம் 1998
செப்பனிட்டு முடித்த
மாதம் ஆகஸ்ட் வருடம் 1998
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்.

# பிரபஞ்ச தாரை

அல்லது

## மானிடர் முன்னேற்றம்.

சென்னை இராயப்பேட்டை வெஸ்லியன் கல்லூரிச்
சரித்திர போதகாசிரியரும்
"உலக சரித்திரம்" நூலாசிரியருமான
வை. சூரியநாராயண சாஸ்திரி,
எம். ஏ., எல். டி.,
அவர்களால் இயற்றப்பெற்றது.

சு. வை. வெ. சகோதரர்களால்
பிரசுரஞ் செய்யப்பெற்றது.
1923

All Rights Reserved
Copy Right Reserved.

| | Rs. | A. | P. |
|---|---|---|---|
| *Calico binding* | 1 | 4 | 0 |
| *Stiff cover* | 1 | 0 | 0 |
| *Paper cover* | 0 | 12 | 0 |

To be had of the Author or S. V. V. Brothers
c/o
CURZON & CO., Mount Road, Madras.

58902

# பிரபஞ்ச தாரை

அல்லது

# மானிடர் முன்னேற்றம்.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| (1) | நூன்முகம் | 1—11 |
| (2) | உணவு | 11—22 |
| (3) | உறக்கம் | 23—29 |
| (4) | உறைவிடம் | 29—36 |
| | பாத்திரம் | 36—38 |
| (5) | தற்காப்பு | 39—44 |
| (6) | அக்கினி | 44—51 |
| (7) | உடையும் அலங்காரமும் | 51—61 |
| (8) | விவாகம் | 61—71 |
| (9) | இல்வாழ்க்கை | 71—82 |
| (10) | பிழைக்கும் வழி | 82—92 |
| (11) | கைத்தொழில் | 93—102 |
| (12) | வியாபாரம் | 103—114 |
| (13) | ஊழியம் | 114—143 |
| (14) | சமூகவாழ்க்கையும ஆட்சிமுறையும் | 124—136 |
| (15) | பாஷைகளும் எழுத்துக்களும் | 136—144 |
| (16) | கல்வி | 144—156 |
| (17) | மதம் | 156—170 |

பக்கம் 114 அத்தியாயம் (12) (13)

# பிரபஞ்ச தாரை

அல்லது

## மானிடர் முன்னேற்றம்.

---

### நூன்முகம்.

உலக சரித்திரத்தை நாம் உற்று நோக்குங்கால் மானிடர் முன்னேற்றமே பிரபஞ்ச தாரை என நமக்கு நன்கு புலப்படும். இத்தொடரின் கருத்தை ஆராயுமுன்னர் உலக சரித்திரம், மானிடர் முன்னேற்றம், பிரபஞ்ச தாரை, என்னும் இம்மூன்று தொடர்மொழிகளின் பொருள்களை நாம் அறிந்து கொள்வதவசியமாகும். முதற்றொடரின் பொருளை அப் பெயர் பூண்ட நூலில் யான் வெளியிட்டிருப்பதையே எடுத்திங்குரைப்பது குற்றமாகாதென நினைக்கின்றனன். அது பின்வருமாறு:—

"உலக சரித்திரம்" என்பதற்கு இப்பூவுலகின் சரித்திரமென்றே பொருள் கொள்வது சாதாரண வழக்கு. ஆனால், உலகமென்பது நங்கண்ணுக்குப் புலப்படும் யாவுமே. நாம் வசிக்கும் பூமி, அதனகத்திலும் புறத்திலுந் தோன்றியிருக்கும் பொருள்கள், அதைச் சுற்றியிருக்குஞ் சமுத்திரம், அதற்கு வெகுதூரத்திற் காணப்படும் வானம், அவ்வானத்தின் கண்ணமைந்துள்ள சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலியனவாகிய இவைகளெல்லாம் ஒன்றுகூடியது தான் உலகம்.

சரித்திர மென்பதோ, ஒரு தேயத்திலுள்ள ஜனங்களின் வரலாறு; அதாவது, அவர்களின் உற்பத்தி, நிலைமை, நாகரிகம், ராஜாங்கமுறை முதலானவை யெனக் கொள்வது சாதாரண வழக்கே. ஆனால் சரித்திரமென்பது ஜனங்களின் வரலாறு மட்டு மன்று; தேயத்தின் இயற்கையமைப்பு, அதற்குள்ளடங்கிய தாதுவர்க்கங்கள், மேற்பரப்பிலுள்ள புற் பூண்டு செடி கொடி மரம் முதலிய தாவர வர்க்கங்கள், ஊர்வன நடப்பன பறப்பன முதலிய ஜங்கமவர்க்கங்கள் ஆகிய இவைகளின் விருத்தாந்தங்களென்றே பொருள் கொள்ளல்வேண்டும். ஏனெனில், மானிட வாழ்க்கையும் மேற்கூறிய ஒவ்வொரு விஷயமும் ஒன்றோடொன்று பொருந்தியும் ஒன்றை மற்றொன்று பற்றியும் நிற்கின்றது.

இரண்டாவது தொடரின் பொருள் விளம்பாமலே விளங்கும். முன்னேற்ற மெனப் படுவது ஒரு பொருளின் நிலைமை பெருகிப் பெருகி அடுத்தடுத்து மேன்மேற் செல்லா நிற்றல். இதை ஆங்கிலமொழியான "பிராக்ரஸ்" (Progress) என்பதற்கு மொழி பெயர்ப் பெனக்கூறல் தகும்; ஆதலால் மானிடர் முன்னேற்ற மென்பது அவர்களது அபிவிருத்தியாகும்.

மூன்றாவதான பிரபஞ்சதாரை என்கிற தொடரில் பிரபஞ்சம் என்பது முன் விவரிக்கப்பட்டிருக்கும் உலகந்தான். ஆனால் தாரையென்பதோ ஆங்கிலத்தில் "கரெண்ட்" (Current) என்பதற்கு ப்பிரதிபத மெனலாம். இவ்வார்த்தையைச் சற்று விவரித்தல் மிகையன்றெனத் தோன்றுகின்றது. நிற்காமல் சென்றுகொண்டிருக்கும் நீர் ஓட்டம்



வடமொழியில் "தாரை" எனப்படும். எந்தத்திரவபதார்த்தத்தின் ஓட்டத்தையும் தாரையெனச் செப்பலாம். இதை ஆகு பெயராய் உபயோகிக்கின் நம்மனத்தில் விடாமல் தோன்றிக்கொண்டிருக்கும் ஒரே விஷயத்தைப்பற்றிய எண்ணத்தை "மனோ தாரை" எனக்கூறலாம். இவ்வாறே விடாமல் அடுத்தடுத்து மேன்மேற் சென்றுகொண்டிருக்கும் இவ்வுலக கதி பிரபஞ்சதாரை யென வழங்கற்பாலது.

இனி, மானிடர் முன்னேற்றமே எங்ஙனம் பிரபஞ்ச தாரையாகும் என்பதை விசாரிப்பாம். இவ்வுலகில் உற்பத்தியாயிருக்கும் பிராணிகள் அனைத்தும் ஊர்ந்திடினும் நடந்திடினும் பறந்திடினும் இயல்பாய் முன்னோக்கியே செல்கின்றன. ஏனெனின் சரீரவமைப்பு அத்தகைய கதிக்குத் தக்கதாகவேயிருக்கின்றது. விருக்ஷங்களும் மேனோக்கியே வளர்கின்றன. கொடிகளும் முன்னோக்கியாவது மேனோக்கியாவது படர்கின்றன. மேலும் மானிடர்கள் "போனது போகட்டும், சென்றது திரும்பாது, இனி மேற்காரியத்தைத் தொடங்குவாம்" என 'இறந்தது விலக்கி எதிரது போற்றுவதும்' சான்றும். டார்வின் (Darwin) முதலிய பரிணமவாதிகள் கொள்கைப்படி ஜீவராசிகளின் உற்பத்திக்கிரமமும் வளர்ச்சி முறையும் அவைகளின் முன்னேற்றத்தையே நிரூபிக்கின்றன. ஆனால் மானிடர் முன்னேற்றம் என்பதியாது? அதன் விதி என்னை? என்கின்ற கேள்விகளுக்கு மேனாட்டார்களின் விடைகள் பலவிதமாய் நிற்கின்றன. ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) போன்ற தத்துவசாஸ்திரிகள் அனேக வியாசங்களும் விவரணங்களும் வரைந்திருந்தும் இற்றைக்கும் முற்கூறப்பட்டகேள்விகளுக்குத் திருப்திகரமான முடிவு

ஏற்பட்டதாய்த் தோன்றவில்லை. மனிதன் தனக்குவேண்டிய சுகத்தைப் பலமார்க்கமாய்த் தேடி அதை மேன்மேல் பெருக்கி, முடிவில்லாமல் இத்தனைதான் தனக்கு வேண்டியவை என்ற வரையில்லாமல் புதிய புதிய வஸ்துக்களை உற்பத்தி செய்தும் திருப்தி யடையாமல் "இன்னும் தேவை இன்னும் தேவை" என ஆசைக்கோரஎவின்றி மனம்போன போக்காய்ப் போய்க்கொண்டே யிருப்பது முன்னேற்றமா? அல்லது தனக்கு இன்றியமையாத உடற்றொழில்களைச் சாதாரணமாய் டாம்பிகமின்றிப் புரிந்து அவசியமாய்த் தேவையானவுணவு முதலிய பொருள்களைக்கொண்டு மனச்சமாதான மடைந்து சரீரயாத்திரையை நடத்தித் திருப்தியாய் வாழ்வது முன்னேற்றமா? என்பன தர்க்கத்திற்குத் தாய்வீடு. மேனாட்டார் சம்பந்தம் நமக்கு ஏற்படுமுன் மேற்கூறப்பட்ட இரண்டு அபிப்பிராயங்களுள் பிந்தியதையே நம்நாட்டினர் பின்பற்றிவந்தனர் எனப்பொதுவாய்ச் சொல்லலாம்; ஆனால் தற்காலத்தில் ஜனங்களின் வரலாற்றைப் பரிசோதிக்கின் கிராமாந்தரங்களிலும் மேனாட்டு நடையுடைபாவனைகளை யாதரிக்கத் தொடங்கியதுமன்றி பழையவழிகளைத் தவறென்று சிலர் நினைக்கின்றனர். "உள்ளதைக்கொண்டு திருப்தியடைவது வேதாந்தப் போக்கு; அதனால்தான் உலகப்போக்குக்குறித்தான செல்வத்திலும் அதிகாரத்திலும் குன்றி இந்தியர்கள் மேனாட்டுக்கடிமையாயினர்கள். ஜப்பானியர்கள் முதலியவர்கள் மேனாட்டுவழிகளைப்பின்பற்றியே அமெரிக்காவையும் நடுங்கச் செய்கின்றனர். இவ்வாறே நாமும் அத்தகைய முன்னேற்றத்தை யடையவேண்டும்" என்று சிலருரைக்கின்றனர். ஆதலால் உண்மையைக்கண்டு கொள்ள மேனாட்டு முறைப்



படி பிரபஞ்சத்தின் நாகரீகத்தைப்பரிசோதித்துப்பார்ப்போமாக.

உலகசரித்திரத்தால் நாம்தெரிந்துகொள்வதுயாதெனின் இப்பிரபஞ்சம் இன்றடைந்திருக்கும் நிலைமை அது தோன்றியகாலம் முதல் தொடர்ச்சியாய்ப் பெருகிக்கொண்டு வந்திருக்கும் எல்லாவரலாறுகளின் பயனிலேயேயாகும் என்பதே. அஃதாவது தற்காலம் நமதனுபவத்திற் கெட்டியிருக்கும் ஒவ்வொன்றும் நம் முன்னோர்களின் ஒவ்வொரு தலைமுறையோரும், அவர் எத்தேயத்தினராயினுமாகுக, தமக்கெட்டியவைகளைத் தம்மாற் கூடியவரை விருத்தி செய்து, தமக்கு அடுத்த தலைமுறைக்கு முன்விடுத்ததேயாகும். இதன் பொருளை இருளையகற்ற உபயோகிக்கப்படும் பற்பல கருவிகள் விளக்கும்.

தற்காலத்தில் உபயோகப்படுத்தி வரப்படும் விளக்குகளுள் மின்சாரசக்தியினால் அமைக்கப்பெற்ற ஒளி மிகப் புதுமையுற்றது; சுமார் ஐம்பதாண்டுகட்கு முந்தித்தான் வெளிக்கிளம்பலாயிற்று; ஒளியில் அதிகமானது; பார்வைக்கு நேர்த்தியானது; அற்புத இயந்திரவன்மையினால் சூக்ஷ்மமாய் இமைப்போழ்தில் குபீரெனப்பிரகாசத்தை யளித்துத் தூண்டுகோலின்றி, காற்றின் வயப்படாமலும், அசையாமலும் ஒரேநிலையாயும் இதர தீபங்களை மின்மினிப்பூச்சிகள் போல் மங்கவைத்து விசாலமான தலத்தை யளாவிப் பரவி வெளிச்சந் தரக்கூடிய "சூரியன் குஞ்சு" என்று அதைப்பெயரிட்டழைத்தல் மிகையாகாது.

இம்மாதிரியான ஒளி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் பத்தொன்பதாவது நூற்றாண்டி னாரம்பத்தில், முதலில்

"காஸ் லைட்" (Gas light) என்கிற புகையொளி விளக்குப் பிரசாரத்திலிருந்தது. அது நிலக்கரியினின்று உற்பத்தியாக்கப்பட்ட புகையின் சக்தியால், குழாய்களின் வாயிலாய்த் தண்ணீர் அளிக்கப்படுவது போலவே, வீடுகளிலும் வீதிகளிலும் வேண்டிய பொழுது விளக்கேற்றிக்கொள்ள உபயோகப்படுத்தப்பட்டது. மேலும் "மண் எண்ணெய்" எனச் சாதாரணமாய் வியவகரிக்கப்படும் "கெரசின்" (Kerosine) தைலத்தினின்று காற்றினது வன்மையினால் ஒருவிதமான வாயு உற்பத்தியாக்கப்பட்டு, சிறிய துவாரங்கொண்ட கம்பியின் நுனியிலுள்ள வர்த்தி (Mantle)யில் தங்கி எறியும்படி செய்யுமுறை கண்டுபிடிக்கப்பட்டது. இதை நம்நாட்டில் காந்தவிளக்கென்பர் சாமானிய ஜனங்கள்.

அதற்கு முந்தி வெகுநூற்றாண்டுகளாய் ஆமணக்கு, புங்கன், எள், தேங்காய் முதலிய பல வித்துக்களினின்று உற்பத்தியாக்கப்பட்ட எண்ணெய்களிட்ட விளக்குகள் பற்பல தேசங்களில் உபயோகத்திலிருந்தன. மெழுக்கு வர்த்திகளும் கொழுப்பு வர்த்திகளும் நடைபெற்றுவந்தன. அதற்குமுன் மானவர்கள் இந்நிலவுலகில் தோன்றி வாழத்தொடங்குங்கால் இயற்கையொளியில்லாத தருணத்தில் இருளில் தட்டித் தடுமாறிக் கொண்டிருந்தமையால் காட்டுத்தீயினின்று காய்ந்த இலை, கொடி, கிளை, கொம்பு, மரம் முதலியவைகளினால் வெளிச்சமுண்டாக்கிக் கொண்டு அதை அணையவொட்டாமல் மேன்மேல் வளர்த்துக்கொண்டிருந்தனர்போலும்.

இக்காலத்திலும், நமது நாட்டில் கிராமாந்தரங்களில் தென்னோலை, முசுட்டைக்கொடி முதலியவைகளால் சுளுந்



துகட்டி, எரிப்பந்தங்களை ஜனங்கள் ஏந்திப்போவதைக் காணலாம். இங்ஙனஞ்செய்வதில் கஷ்டங்கள் பல உள. முக்கியமாய் மாரிக்காலத்தில் நனையாமல் சருகுகள் முதலியவைகளை ஏராளமாய்க் காப்பாற்றிவைத்தல்வேண்டும். அச்சருகுகளைக் கூட்டிவைக்க இடம் விசாலமாய்த்தேவை. மேலும் கூரையிட்ட குடிசைகளில் தீபற்றிக்கொள்ளக்கூடும். சருகுகளை மூட்டி விட்டுவிடாமல் கொளுத்திக்கொண்டேயிருக்கவேண்டும். காற்று அதிகரித்தால் சருகுகள் அதிகஞ் செல்லும். மழைபெய்தால் அவிந்துபோம்.

பிறகு, வித்தின் எண்ணெயை உபயோகிக்கத் தொடங்கினகாலத்தில் எண்ணெய்க்கு ஆதாரமான பாத்திரங்களைத் தேடிக்கொண்டிருக்கவேண்டியிருந்தது. ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொருவிதமான விளக்கு வழங்கிவந்திருந்தது என்று பண்டைக்காலத்திய சரித்திர சோதனாசிரியர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. சீனாதேசத்திலும் கிரீஸ் தேசத்திலும் செய்யப்பட்டிருந்த மண்விளக்குகள் வெகு பளபளப்பாயும் விசித்திரவேலைகள் செய்யப்பட்டவைகளாயும் காணப்படுகின்றன. நமது நாட்டில் மண் அகல்கள், மாக்கல்விளக்குகள், இரும்பு பித்தளை வெண்கலம் முதலிய தாதுக்களால் ஆக்கப்பட்ட கொத்துவிளக்குகள், சங்கிலிக் கொத்து விளக்குகள், அலங்காரதீபங்கள், சாவிளக்குகள், கிளைக்கொடிவிளக்குகள் போன்ற வேலைப்பாடுற்ற பலவித கருவிகள் இப்போழ்தும் இருக்கின்றன. விசேஷமாய் அவைகள் கோவில்களில் காணப்படுகின்றன.

இங்ஙனமே தேயந்தோறும் ஒவ்வொருவிதமாய் விளக்குகள் செய்யப் பட்டபோதிலும் விளக்கெரியும் வழி

ஒன்றாகவேயிருந்தது. இம்மாதிரியான விளக்குகளுக்குச் சில இடையூறுகளுண்டு. முக்கியமாய் எண்ணெய் விளக்குக்குச் சத்துரு விளக்குப் பூச்சிகள். அது காற்று அடித்தால் தாங்காது; எரிந்து கொண்டிருந்தாலும், தூண்டுகோல் போட்டுக்கொண்டேயிருக்கவேண்டும். அதில்புகையதிகம் கிளம்பும். எண்ணெய்க்குச் சுவபாவம் அழுக்கைச் சேர்த்துக் கொள்ளுவது. அன்றியும் விளக்கைத் தூண்டிவிட்டுப் பக்கத்தில் நேர்ந்தவற்றில் கையைத் துடைத்துக் கொள்ளுவது மனிதர்களுக்கு சகஜமாகும். ஆகையால் சுவர், கம்பம், முதலியன அசுத்தமாய் விடும். ஒளிக்கு அனேக விளக்குகள் தேவை. ஒளி சுவல்பமாயிருந்து இரவு முழுதும் விடிவிளக்கு எரிக்க வேண்டிடின் ஒரேநிதானமாய் எரியும்படி அடக்கிவைப்பதும் சிரமம். சிலசமயங்களில் எரிதிரியை எலி இழுத்துக் கொண்டு போய்க் கூரையிலும்வைக்கக் கூடும். அதன் பலன் சொல்லாமலே விளங்கும்.

மேலும், பனி நாடுகளிலும் இதர தேசங்களில் பனிக்காலத்தும் தைலங்கள் உறைந்து விடும். சீதமண்டலங்களில் கொழுப்பு வத்திகளும் உறைந்து போவதுண்டு.

இத்தகைய உபத்திரவங்களை நீக்கிக்கொள்ள ஒவ்வொரு தேசத்தார் ஒவ்வொருவிதமான முயற்சி செய்திருக்கின்றார்கள் என்று சரித்திரமூலமாய்த் தெரிகின்றது. கி. பி. 1783 ல் பாரிஸ் நகரத்திலிருந்த ஒரு புத்திமான், விளக்குகளின் வர்த்திகள் உருண்டையாய்த் திரிக்கப்படாமல் பட்டையாகவே செய்யப்பட்டு உபயோகபடுத்தப்பட்டால் ஒளி அதிகங்கொடுக்குமென்று "ஸ்குரு" (Screw)



அதாவது வர்த்தியைச் சுழற்றித் தூக்குமாறு தூண்டுகோலொன்றைப் புதிதாய்க் கண்டுபிடிக்கலாயினர். இங்கிலாந்தில் பிறந்த மேதாவிகள் இதைப் பின்பற்றிச் சுழற்றுந்தூண்டுகோலை நல்லமாதிரியாய்க் கற்பித்துப் பட்டைத் திரியை வட்டமாயும் குழாயிலிட்டுத் தூக்கும்படியாயும் எண்ணெய் வெளியிலேயே தெரியாமல் ஒரு குழாய்மூலமாய்த் திரிக்கு எட்டும்படியாயும் செய்து அதன்மேல் கண்ணாடிக்கூடுகளமைத்துக்கொண்டனர். கி. பி. 1807 வது ஆண்டில் லண்டனில் பால்மல் (Pall-mall) எனும் பாகத்தில் புகைவிளக்கிட்டார்கள். 1810 ல் வீடுகளிலும் அம்மாதிரி விளக்குகள் எரிக்கச் சங்கங்கள் ஏற்படலாயின. 1817 முதல் 1857 வரை புகைவிளக்குகளிலுள்ள குறைகளை நீக்கி ஒளியை விருத்திசெய்யச் சங்கங்கள் போட்டியிட்டுக் கிளம்பின. இம்மாதிரியே ஐரோப்பாவில் ஆஸ்டிரியா முதலிய விடங்களில் புது வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. முக்கியமாய் 1834 ல் தாதுவர்க்கத் தைலமும் (mineraloil) உபயோகப்படுத்தப்பட்டது. அதனால் ஏற்பட்ட ஆபத்துகளினாலும், எண்ணெய் அசுத்தமாயிருப்பதனாலுண்டான புகையினாலும் அந்தத் தைலத்தைச் சுத்தஞ்செய்து காந்தவெளிச்சம் என்பதைக் கண்டுபிடிக்கலாயினர். அதற்குப்பின் மின்சாரத்தின் சக்தி தட்டுப்பட்டமையால் அதனாலும் விளக்குகளுண்டாக்கப்பட்டன. மேலும் தற்காலம் தூமகேதுபோன்ற "ஸெர்ச்லைட்" (Search Light) என்பது அந்தகாரத்தை வெகுதூரம் நீக்கி நுட்பவஸ்துவையும் காட்டக்கூடிய ஒளியுடன் தோன்றியிருக்கின்றது. மேனாட்டார்கள் சென்றவிடங்

களில் மேற்கூறப்பட்ட நவீன மார்க்கங்களை முறையாய்ப் பரவச்செய்துகொண்டிருக்கின்றார்கள்.

இதுவரையிலுங் கூறப்பட்டவாலாற்றால் விளக்குகள் என்பவை எல்லாத்தேயங்களிலும் உபயோகப்படுத்திவரப் பெற்றதாயினும் இயந்திரங்களினாலும் சூட்சுமக்கருவிகளினாலும் அமைக்கப்பட்டவைகள் மேனாட்டினின்று வெளித்தோன்றலாயினவெனச் சரித்திரங்கூறாநிற்கும். மேற்கூறப்பட்டவண்ணம் கருவிகளில் குறைஏற்படஏற்படப் புதிய புதியவகைகள் கண்டுபிடிக்கப்பட்டனவெனச் செப்பினமையால் மின்சார விளக்குகள் முடிவு பெற்ற நிலைமையையடைந்து விட்டனவென நாம் கருதற்பாலதன்று. மின்சாரதாரைக்கும் இடையூறுகள் பலவுள. இயந்திரத்தில் ஆரம்பித்துக் கண்ணாடி விளக்கு இறுதியாய் இடையில் சம்பந்தப் பட்ட சகல பொருள்களும் ஒவ்வொரு விதமாய் விபத்தை விளைவிக்கக் கூடியனவே. அஃதாவது கண்ணாடியினுள் இயற்றப்பட்டிருக்கும் அமைப்பில் கெடுதியுண்டானால் தீ பற்றிக்கொள்ளலாம். அதைச் சேர்க்கும் கம்பிகளில் கெடுதி நேர்ந்தால் தீபற்றிக் கொண்டு முழுவதும் அறுந்து விழலாம். ஒரு வீட்டிற்குள் வெளிச்சந் தோன்றும்படி அமைக்கப் பட்டிருக்கும் முடுக்கு யந்திரத்திற்குப் பழுது ஏற்பட்டால் திடீரென வீடு இருளடையும். இவ்வண்ணமே மின்சார மூலசக்தி ஸ்தானத்திற்கு ஆபத்து நேரிடின் ஒரு ஊரே அந்தகாரத்தில் அமிழும். அக்காலம் பழைய விளக்குகளைத் தேடுவது நியாயமாகும். இம்மாதிரியான குறைகளை நீக்கி மின்சார விளக்கை இன்னும் மேன்மையாக்கவும் இதைக் காட்டிலும் சிலாக்கிய



மான முறையாய் விளக்குகளைக் கண்டுபிடிக்கவும் நவீன சாஸ்திரஞர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதைக் கூறவேண்டுவதில்லை.

நாம் ஈண்டுக் கவனிக்க வேண்டியது யாதெனின் பண்டைக் காலத்திய விளக்குகளைக் காட்டிலும் தற்காலத்திய விளக்குகள் அழகிலும் பிரகாசத்திலும் முன்னேற்றமடைந்தன வென்பதே.

இதுநிற்க முற்கூறிய விஷயங்களினால் விளங்குவதி யாதெனின் யாதாமோர் அவசியம் (necessity) ஏற்படில் நூதனவழிகளைத் தேடுவது மானிடரியல்பு. முதலில் வெளிச்சத்தைத்தரக்கூடிய கருவிகளின் குறைகளைக்கண்ட நம் முன்னோர்கள் மேன்மேல் புதிய வழிகளைத்தேட அவர்கள் பின்னோர்கள் அவைகளைக் கைப்பற்றி அதற்குமேல் சௌகரியமான கருவிகளை யமைத்துக்கொண்டனர். இங்ஙனம் இன்றியமையாப் பொருள்வேண்டல் சித்தியனைத்துக்கும் காரணமெனலாம். அதுவே மானிடர் முன்னேற்றத்திற்கும் ஏதுவென்பது போதுமான சான்றாம். இதைப் போன்ற இன்னும் பல உதாரணங்கள் நம் உள்ளத்தில் உதிக்கின்றன. அவைகளைப் பின்வரும் வியாசங்களில் ஆங்காங்குக் குறிப்பிடுவாம். அவைகளால் பிரபஞ்ச தாரை இத்தகைத்தெனத் தெள்ளிதிற் புலப்படும்.

---

## (2) உணவு

ஜீவராசிகளுக்கின்றியமையாத உடலின் தொழில்கள் பலவற்றுள் முதன்மையானது உண்ணலே. பசி உடலுக் கியல்பாதலால் புழுவாயினும் புள்ளாயினும்

மிருகமாயினும் மனிதனாயினும் அதைத் தீர்த்துக் கொள்ள முயல்வது இயல்பு. அதற்கு வேண்டிய பொருள்களுக்கு மூலாதாரம் இயற்கையில் தோன்றுவதே என நமக்குப் புலப்படுகின்றது. பிரகிருதி வஸ்துக்களாகிய பஞ்ச பூதங்களுள் வாயுவும் ஜலமும் சுலபமாய்க் கிடைக்கக் கூடியவை. நாம் இவைகளை மாத்திரம் உண்டாலும் நமது பசி தணியலாம் என்பதற்கு உலகில் ஆதாரங்கள்உள. நம் நாட்டில் பாம்புக்குப் பிரதிபதங்கள் பலவற்றுள் "பவனசனன்" என்ற பெயர் ஒன்று; அதன் பொருள் காற்றை யாகாரமாயுடையது என்பதே. இம்மாதிரி. யோகிகள் அனேக ஆண்டுகள் இருக்கக்கூடும் என்ற கொள்கை நம்நாட்டவர்க்குச் சர்வ சாதாரணமாய்த் தெரிந்ததாகும். தண்ணீரை மட்டிலருந்தும் யோகிகளுமுளர் என்றும் நம் நாட்டினர் சொல்வதுண்டு.

இஃதொருபுறமிருக்க, குழந்தைகளுக்குத் தாயின் பால் தானாய்ச் சுரக்கின்றது. விலங்கினங்களின் குட்டிகள் கர்ப்பத்தை விட்டு வெளிக் கிளம்பியவுடன் பால் குடிக்கத் துவக்குகின்றன. காய்கனிகளும் கந்த மூலங்களும் இயற்கையமைப்பு, சீதோஷ்ணஸ்திதி, தேசவளமை முதலிய சந்தர்ப்பங்களுக்கிணங்கப் பிரகிருதியில் தோன்றியவைகளன்றோ! மேலும் ஒவ்வொரு உயிருள்ள பிராணிக்கும் தன்னை நீக்கி எஞ்சியதைப் பக்ஷிக்கவும் இடமுண்டு. இவைகளிங்ஙனமிருக்க மானிடர் எங்ஙனம் உணவு முறையைக் கைக்கொண்டிருக்கின்றனர் என்பதை இனி விசாரிப்பாம்.

"சிறியமீனைப் பெரியமீன் விழுங்குவது உலகவழக்கு" என்கிற நியாயமொன்றுண்டு. அஃதாவது திமி என்கிற



ஒரு ஜாதி மச்சத்தைத் திமிங்கிலம் என்கிற பெரியமீனும் அதைத் திமிங்கிலகிலம் என்கிற மிகப்பெரியமீனும் புசித்து விடுகின்றன என்பதே. இவ்வண்ணம் பலமுற்றவர்கள் பலமற்றவர்களைக் கொன்றுதின்னும் மாக்கள் இன்றுமிருக்கின்றனரெனச் சரித்திரவாராய்ச்சியால் தெரிந்துகொள்ளலாம். (ஆனால் இப்பொழுது இவர்களது எண்ணிக்கை மிகக் குறைந்ததென நாம் சிறிது களிக்கலாம். ஆயினும் நரமாம்சபக்ஷணி ஒருவன் இருக்கினும் மானிடவாழ்க்கை குறைவுற்றதெனக் கூறுவது தவறாகாது). உலகில் மாந்தர்கள் முதன்முதலில் தோன்றியகாலம் முதல் பலநூற்றாண்டுகள் தம்மினத்தைப் புசித்ததுடன் சுலபமாய்க் கிடைக்கக்கூடிய எந்தச்சீவனையும், பலத்தில் தமக்கதிகரித்துத் தீங்குவிளைக்கும் விலங்குகளையும் வேட்டையாடி உண்டுவந்தனர்போலும். தவிர ஒவ்வொரு பருவத்திலும் கிடைக்கக்கூடிய காய்கனிகளையும் பொறுக்கிப் புசித்திருக்கலாம். தீயினுபயோகந் தட்டுப்படும்வரையில் பதார்த்தங்கள்யாவும் பச்சையாகவே உபயோகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கையமென்னை? இந்நிலைமையில் தங்கிய காட்டுமனுஷியர்கள் தற்காலம் மிகச்சிலரே.

வேட்டையாடி ஜீவனஞ்செய்பவர்களுக்குத் துன்பங்கள் பலஉள. எப்பொழுதும் விலங்குகளுடன் போராடிக் கொண்டேயிருக்கவேண்டும். பழிக்குப்பழிவாங்குவது மிருகங்களுக்குப் பிறவிக்குணம். ஆகையால் அவற்றை வேட்டையாடிக்கொல்லுவோர் அமைதியின்றிச்சதாகாலமும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள யத்தனஞ் செய்துகொண்டேயிருக்கவேண்டும். பிறந்தவிடத்தைவிட்டுச் சுவல்பதூரத்திற்குமேல்போகத் துணிவுறாத காட்டு மனிதர்கள் இனப்

பெருக்கினாலும் கல் கொம்பு முதலிய ஆயுதங்களினுதவி
யால் பிராணிகளை யதிகமாய்க் கொன்றுதின்ன ஆரம்பித்தத
னாலும் உணவுக்கான ஜந்துக்கள் குறைந்துவரும். (இதற்
குதாரணமாய் நசித்துப்போன மிருகவினங்கள் பலவற்
றின் எலும்புக்கூடுகள் பலதேசங்களில் பூமியினின்று
கிடைக்கின்றனவற்றைக் கூறலாம்) முக்கியமாய் மாமத்
(mammoth) என்கிற ஒருவித யானையைக்குறிப்பிடலாம்.
ஐரோப்பியர்கள் அமெரிக்காவைப் பார்த்தபோது ப்ரேயரி
(Prairi) புற்சமவெளிகளில் வாழ்ந்துகொண்டிருந்த பை
ஸன் (Bison) என்கிற காட்டெருமை இப்பொழுது
குறைந்துவருவதைக் கவனிப்போமாக. இவ்வாறு மனிதர்
களுடன் போராடி வெற்றிபெற்று வாழமுடியாமல் பல
மிருகஜாதிகள் அழிந்துவிட்டனவென்று சொல்வதற்குப்
பலகாரணங்களிருக்கின்றன.

மேலும், எல்லாப்பருவங்களிலும் புசிக்கத்தக்க பழவ
கைகள் கிடைக்கா. சிலவருஷங்களில் மழைக் குறைவால்
பழங்கள் குறைந்து விடலாம். காற்று மழை முதலியவை
அதிகரித்தாலும் பலம் அழிந்துவிடும். மாரிக் காலத்தில்
வெளியிலே கிளம்ப முடியாமல் பட்டினி கிடக்க நேரிடும்.
அதற்காக முன்ஜாக்கிரதையாய் உணவுப் பொருள்களை
முன்னாகவே சேமித்துவைக்க எண்ணந் தோன்றியிருக்க
வேண்டும். இதற்கு வேண்டிய வசதியும் தேடிக்கொண்டி
ருக்க வேண்டும். அவைகள் சத்துருக்களுக்குக் கிட்ட
வொட்டாமல் காப்பாற்றி வைக்கப்பட் டிருக்க வேண்டும்.
பதார்த்தங்களில் சில உணவுக் குபயோகமில்லாமற் போய்
விடுவதுமுண்டு. இத்தகைய பல இடையூறுகள் ஏற்ப்
பட்டமையாலும் தம் அனுபவங்களாலும் முதலில் இரு



ந்த இடத்தை விட்டு ஆகாரந் தேடப் புது இடங்களுக்
குச் சென்று புதிய அனுபவங்கள் ஏற்பட, அவ்விடங்களு
க்குரிய நூதனப் பொருள்கள் கிட்டியிருக்க வேண்டும்.
அவைகளைப் புசித்தும் போதாமல் புத்தி யுத்தியினால்
தாம் கண்டபண்டங்களை உற்பத்தி யாக்கவும் முயன்றி
ருக்க வேண்டும்.

இதற்குள் சிலபிராணிகள் மனுஷ்யனது ஆளுகைக்
குட்படுந் தன்மையினால் அவன் வயப் பட்டு வசிக்கத்
தொடங்கியிருக்கவேண்டும். ஆடுமாடுகளை முக்கியமாய்க்
குறிப்பிடுவாம். அவைகளுடைய சகாயத்தால் ஜீவனத்
திற்குப் புதுவழி ஏற்பட்டது போலும். எங்ஙனமெனின்
ஆடுமாடுகளின் பால் உணவுக்குப் போதுமான அம்சங்
களை யுடைத்து. நாடோடிகளாய் வசிக்கும் மங்கோலியர்
களது வாழ்க்கையைக் கண்ணாரக் கண்டவர்கள் அவர்களை
வெகுவாய்ப் புகழ்கின்றார்கள். நாம் இக்காலத்தில் பாலைப்
பலரூபமாய் மாற்றி உபயோகிப்பது ஆயர்தொழிலை
நடாத்திய நாடோடிகளிடமிருந்து தோன்றிய முறை
யென்று ஊகித்துக்கொள்ளலாம். வேட்டையாடுந் தொழிலி
லிருப்பவரினும் ஆடு மாடுகளைக் காப்பாற்றி ஜீவனஞ்
செய்பவர்கட்கு உணவு கட்டளையாயிருக்கும். அவை
கள் செல்வமாய் விளங்கும். ஆயினும் ஜீவராசிகளான
படியால் வியாதி முதலிய விபத்துகள் நேரிடுங்கால் கும்
பல் கும்பலாய் ஆடுமாடுகள் அழியும். அவைகளுக்குத்
தீனி சம்பாதிக்கப் புதிய இடங்களுக்குப் போக நேரிடுங்
கால் மாரிக் காலத்திலும் பனிக் காலத்திலும் பச்சைப்
புல் கிடைக்கு மிடங்களில் அவைகளைக் காப்பாற்றி வைத்

துக் கொண்டாலன்றி நஷ்டம் ஏற்படும். ஆதலால் சிலர் இத்தொழிலை மட்டும் புரிந்து கொண்டிராமல் பூமியைக் கொத்தி வெட்டி விதைகள் விதைக்கத் தெரிந்து கொண்ட காலவளவில் பூமியை உழுது வியவசாயஞ் செய்யு முறையும் சிறுகச் சிறுக வெளியாயிருக்க வேண்டும். அக்காலத்தில் ஓரிடத்தில் தங்கிப் பயிர் செய்து பலனையடைந்ததும் அதே இடத்தில் இனிப் பயிரிட முடியாதென நினைத்து இடம் மாறிக் கொள்வது வழக்கம் என்று தெரிகின்றது. குடும்பம் குடும்பமாய் வியவசாயத் திற்குரிய சாமான்கள் ஆடுமாடுகள் முதலியவைகளைத் தம்முடன் கொண்டு புது இடங்களுக்குச் சென்றார்கள் போலும்.

காலவளவில் புதியவிடங்களில் சீதோஷ்ண ஸ்திதிக்குத்தக்கவாறு புதியமாதிரியான பொருள்கள் கிட்டியிருக்க வேண்டும். அனுபவங்களும் அதிகரித்திருக்கவேண்டும். நாடோடிகளாய்த் திரியுங்கஷ்டத்தினால் ஒரேயிடத்தில் தங்கி அவரவர்கட்குக் கிடைத்த புலங்களைக் கைப்பற்றி உழுது புன்செய்த் தானியங்களையும், தண்ணீர்ப் பாய்ச்சி நன்செய்த் தானியங்களையும், தோட்டக்கால் பயிர்களையும் ஆரம்பித்து மரப்பொருள், கொடிப்பொருள், குழிப் பொருள் முதலான அநேக உணவுபொருள்களை உற்பத்தி செய்து அவைகளைப் பற்பலவிதமாய்ப் பக்குவஞ்செய்து நிலையாய் உணவுபண்டங்களைச் சேர்த்துவைத்துக்கொண்டு வாழஆரம்பித்தனர் என்று நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

இவைகளையெல்லாம் ஒரேயிடத்தில் ஒரே ஜாதியார்கள் ஒரேகாலத்திற்குள் தெரிந்துகொண்டிருக்கமுடியாதென்பது சித்தம். அனேகநூற்றாண்டுகள் ஓரிடத்தில் ஓரினத்தவ



ஒருவித உணவுப்பொருள்களை உபயோகித்துவருங்கால் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் அவரவர்களது காலதேசத்திற்குத் தக்கவாறு வேறுவிதப் பொருள்களை அபிவிருத்திசெய்துவந்ததைத் தெரிந்துகொண்டு அவைகளைத் தாமும் உற்பத்திசெய்பவாவது அல்லது மாற்றுப்பொருள் மூலமாய் அவைகளை அடைந்தாவது வாழ்நாட்களை நடத்தியிருக்க வேண்டும். இம்மாதிரி செய்துவந்தமையால் ஆகாரத்திற்குக் குறைவின்றி ஒருபொருள் கையிலில்லாவிடின் அதற்குப்பதிலாய் வேறுபொருள் கையிலிருக்க, ஜனங்களுக்கு நிலைபெற்ற ஜீவனஉபாயம் ஆரம்பித்ததென ஊகித்துக் கொள்வோமாக.

இதனிடையில் இயற்கையாய்க்கிடைக்கப் பெறும் பொருள்களை உற்பத்திசெய்து விருத்திசெய்து வந்தவைகளைப்பக்குவபேதஞ் செய்யத்தெரிந்துகொண்டனர் போலும். தற்காலத்தில் ஒவ்வொரு தேசத்திலும் வழங்கிவரும் ஆகார பேதங்கள் எண்ணிலாதவைகளில் சிற்சில சுவதேச பண்டங்கள், பலகாரங்கள், சிற்றுண்டிகள் என்றும் வேறு சில அந்நிய தேசத்திய சம்பந்தத்தினால் ஏற்பட்டவையென்றும் நமக்குப் பிரத்தியக்ஷமாய்த் தெரியும். நமது தேசத்தில் மேனாட்டார்களின் வரவு ஏற்பட்டகாலம் முதல் இக்கணம் வரை ஐரோப்பிய ஆகாரதினுசுகள் தோன்றியிருப்பவை கணக்கில. ஏற்கனவே இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் அவரவர் ஜில்லாவிற்கிணங்கத் தின்பண்டங்களைப் பக்குவஞ் செய்து சாப்பிட்டு வருங்கால் அவைகளும் போதாமல் அந்நியர்களின் பதார்த்தங்களையும் கைக் கொள்ளலாயினர். தென்னிந்தியாவில் உவர்ப்பும் கார்ப்பும் கூடிய சிற்றுண்டிகளதிகரித்து நிற்க

வட இந்தியர்களது தித்திப்புப் பதார்த்தங்களையும் தென்னிந்தியர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

ஆங்கிலேயர்கள் ரொட்டி சுட்டுத் தின்ன ஆரம்பித்தது எக்காலவளவில் ஆகாரபேதங்களை எங்ஙனங்கற்றுக் கொண்டனர் என்பதைப் பலவிதமாய்த் தெரிந்து கொள்ளமார்க்கமிருக்கின்றது. உணவு பண்டங்களின் பெயர்களே அப்பண்டங்கள் எந்த ஜாதியாருக்கு உரியனவாயிருந்து பிறகு பிறரால் கைக்கொள்ளப் பட்டனவெனத் தெளிவாய்க் காட்டும். நமது நாட்டினின்றும் சில பெயர்களை எடுத்துக் கொண்டிருக்கின்றனர். மிளகுதண்ணி, பஞ்ச், கீ (Ghee) முதலியன உதாரணங்களாம். சர்க்கரை அராபியர்கள் மூலமாய் கி. பி. பதின்மூன்றாவது நூற்றாண்டில் தான் மேனாட்டாருக்கு எட்டியதாம். மூன்றாவது ஹென்றி இங்கிலாந்தில் அரசாண்ட காலத்தில் ரோஜா வர்ண முள்ள சர்க்கரை உபயோகப்படுத்தப் பட்டது, கீழ்நாட்டுப் பொருளே. அதுவரை ஆங்கிலர்களால் தேன் தான் உபயோகப் படுத்தப் பட்டது. 1600ல் துர்க்கியிலிருந்து "காபி" (Coffee) என்பது பரவியது. 1636ல் கிரீஸ் தேசத்தவராகிய நர்தனில் கோனோபியாஸ் என்பவர் காபி சாப்பிட்டதைத் தாம் முதன் முதலில் பார்த்ததாய் எவலின் என்பவர் தமது தினசரியைக் குறிப்பில் வரைந்திருக்கின்றனர். இங்கிலாந்தில் 1650ல் காபி குடிக்கும் சிற்றுண்டிச்சாலைகள் புறப் பட்டன. 1666ல் ஆர்லிங்டன் பிரபு முதன் முதலில் டீபார்டி வைத்த போதிலும் தேயிலைப் பானம் பதினெட்டாவது நூற்றாண்டில் தான் அதிகமாய்ப் பரவலாயிற்று. இங்ஙனமே உருளைக் கிழங்கு பெருவிலிருந்தும், ப்ரேஜிலிலிருந்து டாபியோகாவும், மலாய்



த்வீபகல்பத்திலிருந்து ஜவ்வரிசியும், மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து சோளமும் எக்காலத்தில் எவ்விதம் இங்கிலாந்துக்கு வந்தது என்றும் அதனால் ஆகாரத்திற்கு மார்க்கங்கள் எவ்வாறு அதிகரித்தன என்றும் சரித்திர மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறே உலகிலுள்ள பலவிதப்பழவர்க்கங்கள் எவ்வண்ணம் இங்கிலாந்தில் தோன்றினவெனக்கண்டு கொள்ளலாம்.

நமது நாட்டிற்குள் வெகுசமீபகாலத்திற்குள் (அதாவது ஐம்பது அறுபது ஆண்டுகளுக்குள்) ஆகார விஷயமான எத்தனைப் புதியபொருள்கள் தோன்றியிருக்கின்றனவென்றும் எத்தனை நவீனங்களும் புறப்பட்டிருக்கின்றனவென்றும் பட்டிக்காடுகளிலும் பரவியிருக்கும் ரொட்டி, பிஸ்கட், பெப்பர்மண்ட், சாக்கலட், என்கிற பெயர்களினாலும் ஸோடா லெமனேட் முதலிய பானங்களின் பெயர்களினாலும் நாம் தெரிந்துகொள்ளலாம். ஷர்பத் என்கிற பானங்கள் மகம்மதியர்கள் அளித்திய கொடை. ஆனால் பானகம் என்கிற திணுசு சுவதேசமுறையே.

பானவர்க்கத்திலேயே சேர்க்கக்கூடிய "மது" என்கிற இனிமையான பெயருடன் நாட்டையே உட்கொண்டுவிட்ட "கள்" முதலிய சாராய வகைகள் எவ்வளவோ புதியன புதியனவாய்க்கிளம்பியிருக்கின்றன. ஆனால் இத் தேசத்தில் சோமபானம் என்பது யாகத்தில் உபயோகப்படுத்தப் பட்டது லாகிரி அதாவது மயக்கங் கொடுக்கக் கூடிய வஸ்து வென்றும் அதைப் போன்ற "குடி" வஸ்துக்கள் ஆதி காலம் முதல் குடிகொண்டிருக்கின்றன வென்றும் சரித்திர ஆசிரியர்கள் ஞாபகப் படுத்துவாராயினும் இக்காலத்தில் குடி எனப்படுவது "லைஸன்ஸ்" என்கிற அதி

சார முறை கொண்டு ஆடிநிற்பது மானிடர் முன்னேற்றமா வென்கிற கேள்வி தோன்றும். அதற்கு விடை " அல்ல " என்றுதான் அறிஞர் முறையிடுவார்கள்:

உணவு பதார்த்தங்களைக் காப்பாற்றி வைத்துக் கொள்வதெப்படி என்பது காட்டு மனிதர்களுக்குத் தெரியாது. நாடோடியாய்த் திரியுங்கால் ஆகாரக்குறைவினால் கிடைத்ததை எப்படியாவது வைத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணந் தோன்றிடச் சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கபடி பலவழிகளைக் கற்பித்துக் கொண்டனர் போலும். அதிசீத மண்டலத்தில் வசிக்கும் எஸ்கிமோக்களுக்கு ஆகாரத்தைக் காப்பாற்றி வைக்க வேண்டிய கஷ்டமில்லை. ஏனெனின் பிரகிருதியே சகாயமாம். இஃது எப்படியெனின் உறைந்த பனிக்கட்டிக் கிடையில் மாம்சங்கள் வெகு காலம் அழுகாதிருக்கும். இதைக்கண்டுதான் நவீன சாஸ்திரஞர்கள் வஸ்துக்களை அழுகவிடாமல் காப்பாற்றி வைக்குமாறு " பனிக் கட்டியறைகள் " என்பவைகளைக் கப்பல்களில் ஏற்படுத்தி யிருக்கின்றமையால் ஆஸ்டிரேலியாவிலிருந்து இங்கிலாந்துக்குப்பச்சை மாம்சத்தை வியாபாரிகள் ஏற்றுமதி செய்கின்றனர்.

வட அமெரிக்காவிலுள்ள சில வேடர்கள் மாம்சத்தை ஒரு விதபக்குவஞ் செய்து காப்பாற்றி வைக்கு முறையை ஐரோப்பியர் கற்றுக் கொண்டனராம். பிரெஜில் (Brazil) காட்டுவாசிகள் மீன்களைக் காயவைத்துப் புகையிட்டு அழுகாமற் காப்பாற்றி வைப்பது சிலாக்கியமான முறையெனப் பலர் ஒப்புக் கொள்கின்றனர். பழங்களைத் தேனிலிட்டும் காய்கறிகளை உப்பிலிட்டும் சில நாட்கள் காப்



பாற்றிவைத்துக்கொள்ளவேண்டிய வழிகள் உலகில் வெகுகாலமாய்நடைபெற்றுவருகின்றனவெனத் தெரிகின்றது.

உணவு உட்கொள்ளும் முறையிலும் காட்டுமனிதர்களாய் வசிப்பவர்கட்கும் இக்காலத்தில் நாகரிகம்வாய்ந்தவர்கட்கும் இடையில் அநேகபடிகளிருக்கின்றன. சாரமாய்க் கூறிடின், கையிலகப்பட்டதை உடனே பச்சையாய்ப் பிடுங்கிக் கடித்து விழுங்குவதற்கும் பதார்த்தங்களைப் பக்குவஞ்செய்து குறிப்பிட்ட இடத்திலும் காலத்திலும் சரீரத்திற்கு ஆரோக்கியமான உணவைச் சுசியாயும் ருசியாயும் அளவாக உண்பதற்கும் உள்ள இடைவெளியில் பல தசைகளிருக்கின்றன. மேனாட்டார்கள் தாம் ஆதியில் தரையிலுட்கார்ந்துகொண்டும் பிறகு வைக்கோல்களைப்பரப்பி அதன்மேல் உட்கார்ந்துகொண்டும் அதற்குப்பிறகு உயர்ந்த ஆசனங்களிட்டுக்கொண்டும் பின்னர்நாற்காலியின்மேல் உட்கார்ந்து மேஜையின்மேல் சுத்தமாய் பீங்கான் தட்டுகளிலும் கண்ணாடிப்பாத்திரங்களிலும் ஆகாரத்தை வைத்துக்கொண்டும் கத்தி முதலிய கருவிகளால் ஆகாரத்தை யுட்கொள்வது படிப்படியாய் உண்டான முன்னேற்றமென்பர். மேலும் ஆதியில் எலும்பையும் மாம்சத்தையும் ஒன்றாய்ச் சமையல்செய்து கறுப்பு ரொட்டிகளுடன் கலந்து மரப்பலகைகளின்மேல் பரப்பிவைத்துக்கொண்டு மிருகங்களின் கொம்புகளில் தண்ணீரைவார்த்துக்கொண்டு தின்கின்ற தசையைக்காட்டிலும் தற்காலத்தில் சுகாதாரவிதிப்படி கட்டப்பட்ட அடுப்பில் சமையல்செய்த உணவுபண்டங்களைப் பக்குவமாய்க் காப்பாற்றி, கெட்ட புழுப்பூச்சிகட்கு இடங்கொடாமல் சுத்தமாய் மூடிவைத்துக் கையால் தொடாமல் கருவிகளாலேயே உட்கொள்வது

முன்னேற்றமென்கின்றனர் மேனாட்டார். சட்டிகளிலும் மண்டையோடுகளிலும் தண்ணீரைக் குடிப்பதைவிட அசுத்தத்தை வெளிக்காட்டக்கூடிய பளிங்குப் பாத்திர கண்ணாடிப் பாத்திரங்களில் அதைக் குடிப்பது எவ்வளவு மேன்மையுற்றது? வறுமைப்பால் வருந்துகிறவர்களும் சுத்தமான ஆகாரத்தை உட்கொள்வதற்கு வேண்டிய சௌகரியங்கள் இந்நாளில் ஏற்பட்டிருக்கின்றன.

ஆனால் இவ்விஷயமாய் லோகாசாரத்தைத் தழுவி வைத்துச் செய்த எப்பாட்டில் எவ்வூரில் எவ்வினத்தாரின் முறை மேன்மையானது நன்றாவது குறைவுற்றதென்றாவது ஆராய்ந்து மானிடர் முன்னேற்றத்தைப் பகர்வது கடினமான காரியம். சரியாயும் ருசியாயும் பக்குவமாயும் உள்ள பதார்த்தத்தைக் காலதேசமுறைப்படி அளவாய்ச் சாப்பிடுவது உத்தமம் என்பது ஒருவராலும் ஆக்ஷேபிக்கத்தக்கதன்று. ஒருவன் சுத்தமானவிடத்தில் தரையின்மேல் உட்கார்ந்து இலைகளில் அன்னம் முதலியவைகளைப் பரிமாறிக்கொண்டு சுத்தஞ்செய்துகொண்ட கையால் சாப்பிட்டுவிட்டுப் பிறகு எச்சிலிலைகளை அப்புறப்படுத்திச் சாப்பிட்ட இடத்தைச் சுத்திசெய்துவிடுவது நாகரிகக்குறைவா? என்ற கேள்விக்கு விடையளிப்பது கஷ்டம். பித்தளைப் பாத்திரங்களையும் தாம்பிரபாத்திரங்களையும் சுத்தஞ்செய்து சுத்தமான ஜலத்தைப் பானஞ்செய்வது சுகாதாரவிதிக்கு எவ்வாற்றானும் குறைவுண்டாக்காது என்பதை மறுக்கத் துணிகின்றனர் சிலர். நாற்காலி, மேஜை, பிங்கான் தட்டு, கோப்பை, ஸ்பூன் (கரண்டி), கண்ணாடிப் பாத்திரம் இவைகள் தற்காலம் சிற்றுண்டிசாலைகளில் (Restaurents) ஏற்பட்டிருப்பதுதான் நாகரிகம் என்றும் அது மானிட முன்னேற்றமென்றும் நினைப்பர் சிலர்.



இத்தகைய விவாதங்கள் எவ்வனமாயினு மிருக்கட்டும். உண்டிவிஷயமாய் நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியதியாதெனின் அசுசிகரமான காட்டுமனிதர்களின் வழக்கத்தினின்றும் வெளிக்கிளம்பிச் சுத்தமான முறைகளைக் கைக்கொள்ளவேண்டுமென்கிற உணர்ச்சியுண்டாயிருப்பது மானிடர் முன்னேற்றத்திற்கறிகுறியாகும். ஆனால் அதை ப்ரவர்த்திப்பதிலுண்டாயிருக்கும் வித்தியாசங்கள் காலதேசத்திற்குத் தக்கவாறு பரவிவருகின்றவைகளாகும். நாற்காலியிலுட்கார்ந்து மேஜையின்மேல் பரப்பிய உணவை உண்பது குளிர்தேசங்களுக்குரிய சௌகரியம். ஆனால் உஷ்ணமண்டலத்தில் தரையிலாவது சற்று உயர்ந்த பீடத்தின்மேலாவது உட்கார்ந்து இலையிலாவது வெண்கலம் அல்லது வெள்ளித்தட்டிலாவது ஆகாரஞ்செய்வது சௌகரியம். நம்நாட்டில் உச்சிஷ்டம் அதாவது எச்சில் என்கிற உணர்ச்சி ஒன்று அதிகமானதால் கருவிகளைக் கொண்டாவது மேஜைகளின்பேரில் உணவை வைத்துக் கொண்டாவது உண்ணுவது ஆசாரக்குறைவு என ஓதிந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆயினும் மேனாட்டு வழிகளைப் பின்பற்றும் ஆசாரம் நகரங்களில் இக்காலத்தில் தோன்றிவிட்டது. அது மானிடர் முன்னேற்றத்திற்கு அவசியமா என்கிற கேள்விவருங்கால் "அல்ல" என்றே சொல்ல வேண்டும்.

## (3) உறக்கம்.

யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும் களைப்பாற உறங்குவதும் பிராணிவர்க்கங்களுக்கு நீக்க முடியாத நிர்ப்பந்தங்களாகும். உண்ட இளைப்புத் தொண்டனுக்கு முண்டு

என்கிற பழமொழி யொன்றுண்டு. ஆகாரம் உட்கொண்டதும் தனித்துக் களித்திருந்து உறங்குவது யாவருக்கும் சகஜம். பிறந்தவுடன் குழந்தைகள் சுவல்ப ஆகாரம் வயிற்றில் கொண்டதும் துயில ஆரம்பிக்கின்றனர். ஆனால் மிருதுவான படுக்கையில் சரியாய் அணைத்து விட்டாலொழிய கண்மூடித் தூங்குகின்றனவில்லை. பாருங்கள்! பக்ஷிகள் முட்டையிட்டிருக்குங் கூட்டினுட்புறம் பஞ்சு சிறகு முதலிய வஸ்துக்களால் மெத்தென நிரப்பப் பட்டிருக்கும். சில மிருகங்கள் இலைகள் அடர்ந்த புதர்களினிடையில்தான் குட்டி யிடுகின்றன. எலிக் குஞ்சுகள் வளர்ந்திருக்கும் வரை ஒன்றன் மேல் ஒன்று படுத்துக் கொண்டுதானிருக்கும். அவைகளுக்கு அடியிற் பார்த்தால் கத்தரித்த துணிகளும் நார்களும் பஞ்சுகளும் அடுக்கப் பட்டிருக்கும். பூனைக்குட்டிகள் தாய்மேல் படுத்துறங்கும். காட்டு மிருகங்களைப் போல் வாழும் மானவர்களும் இலைகள் தழைகள் முதலியவைகளைப் பரப்பி அதன் மேல் குழந்தைகளை நித்திரை செய்விக்கின்றனர்! சிலஜாதியார்கள் கூடைகளில் உரோமங்களையும இலைகளையும் நிரப்பி அவைகளின் மேல் படுக்கவிடுகின்றனர் இத்தகைய ஏற்பாடுகளினால் உறக்கமில்லாவிடின் கையிலேந்தித்தம் மார்புடன் கட்டியணைத்துச் சீராட்டிக் கண்மூடவைக்கின்றார்கள் தாய்மார்கள். இங்ஙனஞ் செய்து கொண்டிருக்க அவகாசமில்லாவிடில் தோல்களை மடக்கிக் கட்டி அவைகளை மரக்கிளைகளில் தொங்க விட்டுக் குழந்தைகளைத் தாலாட்டுகின்றனர். துணிகளையுபயோகப் படுத்தும் நாகரிக மடைந்த மனிதர்கள் ஏணை கட்டி அதில் தம் சிசுக்களைத் தூங்கவிடுகின்றனர். தற்காலத்தில் நாற் கயிற்றினால் பின்னப்பட்ட



தூங்கு மஞ்சத்தை (Hammock) நகரவாசிகள் உபயோகப்படுத்துவதை நாம் காணலாம்.

“பச்சையிலுப்பை வெட்டிப் பால் வடியத் தொட்டி விட்டு” என்று நம் நாட்டுத்தாய்மார்கள் தாலாட்டுப் பாட்டுப் பாடுவது கட்டைகளால் அமைக்கப் பட்ட தொட்டிலையுபயோகித்த வனவாசிகளது நிலைமையை நினைவூட்டுகின்றது. மூங்கில் தொட்டில்களும் அநேகம் இற்றைக்கும் நம் நாட்டவர்கள் உபயோகித்து வருகின்றனர். வெகு நேர்த்தியாய் வேலை செய்யப்பட்ட உயர்ந்த மரத் தொட்டில்களைத் தனிகர்கள் உபயோகப் படுத்துகின்றனர். மகாராஜாக்களின் குழந்தைகள் தந்தம், தங்கம் வெள்ளி, முதலிய விலையுயர்ந்த தொட்டில்களில் பட்டுப் பஞ்சணை மெத்தையில் கொசுவலையினுள் உறங்குகின்றனர். தொட்டிலை யாட்டுவதற்கு எளியர்கள் கயிறு கட்டினால் அதற்குமேல் நிலைமையிலுள்ளவர்கள் இரும்புச் சங்கிலியையுபயோகிக்கின்றனர். தொட்டில் தானே ஆடிக்கொண்டிருக்கும் படியான இயந்திரங்கள் அமைக்கப் பெற்ற தொட்டில்களுமிருக்கின்றன. இவ்வாறு குழந்தைகளைத் துயிலச் செய்ய வேண்டிய சௌகரியங்கள் விருத்தியாவதற்குக் காரணமென்னவெனின் குழந்தைகள் தரையிற் கிடந்தால் தரையினது கடினத்தன்மையால் ஸ்பர்ச சுகம் குறைவதுமன்றி எறும்பு கொசு முதலிய பூச்சிகளின் தொந்தரையும் ஏற்படுமாதலால் ஏணை தொட்டில் முதலிய உன்னத ஸ்தானங்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கவேண்டுமென நாம் யூகித்துக் கொள்ளலாம். அவைகளைச் சுற்றி வலைகள் கட்டப் பட்டால் கொசுக்களின் உபத்திரவத்தை நீக்கும். ஆனால் விலை உயர்ந்த சாமான்களைக் கொண்டு அலங்கரிக்கப் பெற்ற

தொட்டில்களிற் படுப்பது மானிடர் முன்னேற்றமா? அது டாம்பிகமல்லவா? என்ற கேள்விகளுக்கு உத்தரம் அவரவர் மனப்பான்மைக்குத் தக்கவாறாய்த் தோன்றும். சௌக்கியத்தைப் பெருக்கக் கூடிய எதுவும் மனிதனால் விரும்பத் தக்கதே. ஆனால் டாம்பிகமானது அவசியமல்ல என்பது நமக்குப் புலப்படுகின்றது.

குழந்தைப் பருவம் நீங்கினதும் தொட்டிலினின்றும் பிள்ளைகளைக் கட்டிலில் விடுகின்றனர் பணக்காரர். ஆனால் காட்டு மனிதர்களும் தரித்திரர்களும் தாங்களும் தம் மக்களும் தரையில் படுத்துக் கொள்கின்றனர். ஏழைகளும் அந்நிலைமையை விட்டு சற்று முன்னேறிய மனிதரும் தென்னை ஓலை கோரைப்புல் முதலியவற்றைக் கொண்டு பின்னப்பட்ட பாய்களில் படுக்கின்றனர். வேட்டையாடிகளோ மயிரடர்ந்த மிருகங்களின் தோலைப் பரப்பிப் படுத்துக் கொள்கின்றனர். உலகில் சில பாகங்களில் வேட்டையாடும் நிலைமையில் நின்று மரங்களின் மேலேயே குடிசையைக் கட்டிக் கொண்டு வசிப்பவர்கட்குக் கட்டிலே தேவையில்லை. ஆனால் பூமியின் மேல் குடிசையிட்டுக் கொள்பவர்கள் சிலர் விஷப்பூச்சிகள் அணுகாமலிருப்பதற்காகக் கற்களை நிறுத்தி அதன்மேல் பலகையைப் போட்டாவது அல்லது மூங்கில்கொம்புகளால் கால்விட்டு சணற் கயிற்றால் பின்னிய கட்டிலிலாவது துயில்கின்றனர். வியவசாயத் தசையை யடைந்த மாந்தர்கள் புல் வைக்கோல் முதலிய தாள்களைப் படுக்கையாக்கிக் கொள்கின்றனர். அந்த வைக்கோலையே சுற்றிக் கட்டித் தலையணையாக்கிக் கொள்கின்றனர். மூங்கில் அதிகமாய் விளையும் தேசங்களில் மூங்கிற் கட்டில்கள் செய்து கொள்வது சகஜம்.



நிலையாய் ஓரிடத்தில் தங்க ஆரம்பித்தவர்கள் நல்ல மரத்தில் வேலைப்பாடுற்ற கட்டில்களைச் செய்வித்துக்கொள்கின்றனர். நம் நாட்டில் பீளைப்பூ, ஆவாரம்பூ, தழை முதலியவைகளால் படுக்கையிட்டுக் கொண்டால் நலம் என்பது வைத்திய சாஸ்திரத்தினால் தெரிகின்றது. தனமுடையோர் கட்டில்களைச் சிங்காரித்துக் கொள்வதுமன்றிக் கொசுக் கடிக்காமல் நல்ல தூக்கம் பிடிக்க வலை கட்டிக் கொள்கின்றனர். கட்டிலின்மேல் இலவம்பஞ்சினாலாக்கப்பட்ட மெத்தைகளிலமர்கின்றனர். இன்னும் அதிக அந்தஸ்துள்ளவர்களோ பல பட்டு மெத்தைகளின் மேல், புஷ்பங்களையும் பரப்பி அதன்மேல் சயனிக்கின்றவர்களுமிருக்கின்றனர்.

இந்திய தேசத்திய மகாராஜாக்கள் உயர்ந்த கட்டிலுக்குப் படிகளிட்டு ஒவ்வொரு படியிலும் வேலைக்காரிகள் நின்றுகொண்டு சாமரம்வீசவும் பாட்டுகள்பாடவும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தனர் என்று கர்ணபரம்பரையாய்க் கேட்டிருக்கின்றோம். இதுவுமன்றி இயந்திரத்தினால் அமைக்கப்பெற்ற பதுமைகள் காற்றுவீசவும் உபசாரங்கள் செய்யவும் கட்டிலில் நிர்மாணஞ்செய்யப்பட்டிருந்தனவென்றும் தொல்லைக் கேள்வியுண்டு. ஹம்சதூலிகா மஞ்சம் என்பது எல்லாவற்றிலும் மென்மையானதாம். ஈடர்டக் என்கிற இரக்கைப்படுக்கை ஐரோப்பியர்களுக்கு உயர்ந்ததென்பது நமக்குத் தெரியும். மின்சாரசக்தி யதிகரித்த இக்காலத்தில் சில மகாராஜாக்களின் கட்டில்களில் நக்ஷத்திரம் போன்ற சிறுசிறு கண்ணாடிவிளக்குகள் பிரகாசிக்குமாறு அமைக்கப்பட்டிருக்கின்றனவாம். காற்றுண்டாவதற்காக மின்சாரசக்தியினால் சுழலுகின்ற விசிறிகள் கட்டில்களுக்குப் பக்கங்களில் காணப்படுகின்றன.

[illegible] இயந்திரங்களினுதவியால் இருப்புவேலை அமைக்கத்தொடங்கினகாலம் முதல் வில்வைத்தபடுக்கைகளும் சுலபமாய்த் தூக்கக்கூடியனவும் அல்லது தூக்காமலே வேண்டியவண்ணம் நகர்த்தக்கூடிய கால்களில் சக்கரமிட்டனவுமாகிய இரும்புக்கட்டில்களும் தோன்றியிருக்கின்றன. இதேமாதிரிப் பித்தளைக் கட்டில்களும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆதலால் உறக்கத்திற்குச் சாதனங்கள் பல உண்டாயிருக்கின்றனவென்பது நிச்சயம்.

ஆனால் "இத்துணைச்சாதனங்கள் அவசியமா? சிரமப்பட்டு வேலைசெய்யும் ஒருவன் தன்னைமிஞ்சி உறங்குகின்றனே! வியவசாயத்தொழில் செய்பவன் புலங்களினிடையிலுள்ள வரப்புகளில் சயனித்துவிடுகின்றான். மூட்டை தூக்குவோன் சுமைதாங்கியின்மேல் சார்ந்துகொண்டு தன்னைமறந்து ஆனந்தமாய்க் குறட்டைவிடுகின்றான் அல்லவா? பஞ்சணைமெத்தையில் படுத்துப் புரள்கின்றவனுக்குத் தூக்கம் பிடிப்பதில்லை. நித்திரை சுகமறியாது; [illegible] சாதாரணமாய்த் தரையில்படுத்துக்கொள்பவன் நன்றாயுறங்குகின்றனன். அவனுக்குக் கையே தலையணையாம்" என்றுரைப்போர்க்குச் சமாதானங் கூறுவது கடினம். ஆயினும் தரைகளில் படுத்துக்கொள்வதனால் பாம்பு முதலிய ஜந்துக்களாலும் விஷப்பூச்சிகளாலும் அபாயம் ஏற்படுவது மல்லாமல் சுகாதாரத்திற்குங் குறைவு நேரிடும். அதாவது தாழ்ந்தவிடத்தில் படுத்துக்கொள்வது சரீரசுகத்திற்கு அவ்வளவு நல்ல முறையன்று. உயர்ந்தவிடத்தில் படுத்துக்கொள்வது பூமியின்மேல் தங்கும் கனமான கரியமிலவாயுவை நீக்குவதற்காகவே. மேலும் கொசுக்கடிக்காமலிருக்கும்படி தம்மைச்சுற்றி வலைகட்டிக்



கொள்வதும் படுக்கையின்மேல் குப்பை பூச்சி முதலியன விழாமலிருக்குமாறு விதானம் அதாவது மேல்மறைவு இட்டுக்கொள்வதும் மிகையாகாது.

காற்றுவீசும்படி பங்கா அதாவது விசிறி அமைத்துக்கொள்வதும் அதிகமாகாது. துர்நாற்றம் வீசாமலிருக்கும்படி வாசனைகள் போடுவது குற்றமாகாது. ஆனால் கட்டில்களில் சித்திரவேலை, தந்தக்கால்கள், தங்கப்பிடிகள், வெள்ளிப்பிடிகள் போன்றவைகளும் வெல்வட்டு, சருட்டு மெத்தைகளும் அவைகளுக்குச் சரிகையினால் பூவேலைகளும் தேவையா? சுகம் உண்டாவது அவைகளுள் எதனால்? என்பவைகளைத் தனிகர்கள் தமது மனத்தையே கேட்டுக்கொள்ளவேண்டும் எனத் தோன்றுகின்றது.

இஃதோர்பால் நிற்க, படுக்கை முறையில் சுகத்திற்கும் சுகாதாரத்திற்கும் அனுகுணமான புதுப்புது வழிகள் புறப்பட்டுக்கொண்டிருப்பது மானிடர் முன்னேற்றமே. ஆனால் டாம்பிகமுறைகள் சில தொழிலாளர்களுக்கு ஊதியம் தருவதனாலும் சித்திரவேலைகளை வளர்ப்பதனாலும் ஒருகால் அவைகளும் ஒருவாறு மானிடர் முன்னேற்றத்திற் குறிகுறிகளெனலாம்.

---

## (4) உறைவிடம்.

உடற்றொழில்களை நாம் பரிசோதித்துவருங்கால் உண்பதற்கும் உறங்குவதற்கும் அடுத்தபடியாய் உறைவிடத்தை எடுத்துக்கொள்ளலாம். ஜங்கமவர்க்கமனைத்தும் தத்தமக்குரிய வசதிகளைத் தேடி விசிராந்தியடைவது அவைகளுக்கு இயற்கைவாசனை. அதாவது சிரமப்பட்டுஆகாரத்தைத்தேடிச் சாப்பிட்டபிறகு களைப்பாற உறங்குவதற்குத்

தக்க தங்குமிடத்தைத் தேடிக்கொள்வது அனுபவசித்தம். சத்துருக்களை விலங்குகளின் பயத்தினின்று தப்புதற்கு வசதியான இடத்தைத் தேடிக்கொள்ளாமல் தூக்கம்வந்த போழ்து கிடைத்தவிடத்தில் தலைசாய்ப்பது அசாதகாரியம். ஒவ்வொரு பிராணியும் தான் தூங்கும்போழ்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டித் தனக்கு யோக்கியமான மறைவிடம் கண்டுகொள்ளாவிடில் சத்துருக்களின் பயம் ஏற்படும். பக்ஷிகளில் சில மரப்பொந்துகளிலும் சில தங்களால் கட்டப்பட்ட கூடுகளிலும் மற்றும் சில இலையடர்ந்த மரங்களிலும் பூமியில் புதர்களிலும் வசிப்பது தத்தம் சத்துருக்களினின்று தாம் தப்புதற்காகவேயாம். மரப்பொந்துகளிலுள்ள பறவைகள் தம்முடலை உள்ளேவைத்துக் கொண்டு தலையை வெளியில் நீட்டிக்கொண்டிருக்கும், மரங்கொத்திப்பக்ஷி இவ்வினத்தைச் சார்ந்தது. தூக்கணாங்குருவியின் கூடுகள் மரத்தில் தொங்கிக் காற்றிலாடிக்கொண்டேயிருக்கும். எற்றுக்கென்னின் அங்ஙனமில்லாவிடின் பாம்பு இக்குருவிகளைச் சுலபமாய் விழுங்கிவிடும். மேலும் அக் கூடுகளின் துவாரம் இருவழியுற்றனவாகும். இங்ஙனமில்லாவிடில் பாம்பு நேராய் உள்ளே நுழைந்துவிடும்.

மரங்களிலிலைகளினிடையில் இருப்பவை இலையின் பச்சைவர்ணத்துடன் பச்சைவர்ணமாய் வித்தியாசப்படாமல் தங்கியிருக்கும். இருப்பிடத்திற்கேற்றவண்ணம் தங்கள் வர்ணத்தை மாற்றிக்கொள்ளக்கூடிய ஜந்துக்களுமிருக்கின்றன. இது சத்துருவினின்றும் காப்பாற்றிக்கொள்ளுதற்கான முறைகளில் ஒன்று. புதர்களில் வசிக்கும் காடை, கௌதாரிகள் உயிர்தப்பித்துக் கொள்ளும் வழிகளைக் கற்பித்துக் கொள்கின்றதைக் காணலாம். மிருகங்



களில் கொடியவைகள் அடர்ந்த காட்டினிடையில் வாசஞ் செய்கின்றன; அல்லது மலைக் குகைகளில் மறைந்திருக்கின்றன.

இங்ஙனமே மனிதர்களும் இவ்வுலகில் தோன்றிய காலத்தில் தமக்குச் சத்துருக்களான மிருகங்களின்கண்ணிற் படாமல் மலைத் துவாரங்களிலும் பெரிய மரங்களின் பொந்துகளிலும் வசித்துவந்தனர். இவ்வண்ணம் இருக்குங்கால் சிலசமயங்களில் துஷ்ட மிருகங்களுடன் குன்றுகளுக்காகப் போராட நேரிட்டமையால் மரங்களின்கண் பரண் இட்டுக் கொண்டு வசிக்கத் தொடங்கினர் போலும். அவ்விடத்திலும் காடி முதலான மர மேறுந் துஷ்டப் பிராணிகளுடன் போராட நேரிட்டிருக்கும். அதுவுந்தவிர ஆகாரத்திற்காக மரத்தைவிட்டுக் கீழே இறங்குவதும் பிறகு ஏறுவதும் எத்துணைப் பிரயாசமான காரியங்கள். காற்றடிக்கும் வேளைகளில் எவ்வளவு கஷ்டம் நேரிடும். சண்டமாருதமடிக்குங்கால் மரம் வேருடன் சாய்ந்து கீழே விழுந்துவிடலாம். தீயை யுபயோகிக்கத் தொடங்கின பிறகு மரங்களின் மேல் அதை எங்ஙனம் வளர்த்துச் சமையல் செய்வது? இவைகளையெல்லாம் நீக்க வேண்டிய உபாயங்கள் அனுபவத்தால் தோன்றி இருக்கவேண்டும்.

மேலும் தற்காப்பு ஆயுதங்களைச் செய்துகொண்ட காலத்தில் அவைகளினுதவியால் மிருகங்களைக் கொன்று வெல்லக் கூடிய சக்தி வாய்ந்தமையால் தரையிலேயே மரக் கொம்புகளை நாட்டி இலைகளால் மூடப்பெற்ற குடிசைகள் போட்டுக் கொண்டு பலர் ஒன்று கூடிவாசஞ் செய்ய ஆரம்பித்திருக்க வேண்டும். தற்காலத்தில் இந்த ஸ்திதியிலேயிருக்கும் மனிதர்கள் ஒரே குடிசையில் பலர்வசித்து

க்கொண்டிருப்பதைக்காணலாம். ஜனசங்கியை பெருகப் பெருக ஆகாரத்தைத் தேடிக் கொள்ளும் பொருட்டு நாடோடிகளாய்த் திரியுங்காலத்தில் ஆங்காங்கு வெவ்வேறிடங்களில் குடிசைகள் கட்டிக்கொள்ளலாயினர். ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு ஊரூராய்ப் போகின்றவர்களுக்கு அடிக்கடி குடிசைபோடுவது கஷ்டமானகாரியமாகும். ஆதலால் கூடாரம்போன்ற ஒரு விதமான குடிசையைத் தூக்கிக்கொண்டு போகும்படி செய்யலாயினர். நமது தேசத்தில் குருவிக்காரர்களது பாய்க்குடிசைகளே அதற்குப் போதுமான சான்றாம். இங்ஙனம் வெகு காலம்சென்ற பிறகு துணிநெய்யத் தெரிந்துகொண்ட காலத்தில் துணிக் கூடாரம் போட்டுக் கொள்ளலாயினர். ஆபிரிக்காவில் பெடுயின் நாடோடிகளின் கூடாரம் வசதிக்கு அநுகூலமானவைகளாயும் வெகு நேர்த்தியானவைகளாயும் இருப்பதைப் பார்த்துக் கொள்ளலாம். மங்கோலியர்களது கூடாரம் வெகுவிமரிசையானதென்று சொல்லப்படுகின்றது. விவசாயத்தையடைந்த மானிடர்கள் ஓரிடத்தில் தங்கி வாழவாவசியமாதலாலும் வருஷாந்தரப் பண்டங்களைக் கூட்டிவைத்துக் கொள்ள வேண்டியதாதலாலும் குடிசைகளுக்குத் தீயினால் விபத்து நேரிடுவதனாலும் சேமித்துவைத்திருக்குந் தானியம் வகைராக்கள் எரிந்து போவதனால் நேரிடுங் கஷ்டத்தினாலும் காற்று மழைகளினால் ஜீரணமாய் விடுவதனாலும் கெட்டிக் கட்டடங்கள் அமைக்கலாயினர். கெட்டிக் கட்டடம் கட்டுவதற்கான செங்கல் சுண்ணாம்பு ஓடு முதலான வஸ்துக்களைத் தயார் செய்யக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு மாதிரியான கட்டடங் கட்டப்பட்ட போதிலும் சாமான்கள்



பொதுவானவைகளே. மெஸ்பொடாமியா பாபிலோனியா முதலிய பண்டைக் காலத்திய நாடுகளின் பழையகட்டடங்களின் சாமான்கள் அவ்விடங்களில் இன்றைக்குங் காணப்படுகின்றன. இதே மாதிரியாய் அநேக உதாரணங்கள் நமக்கு எட்டியிருக்கின்றன. பிறகு சௌகரியங்களைக் கோரிக் காலக்கிரமத்தில் கைத்தொழிலபிவிருத்தியாகிவருங் காலம் அழகான கட்டடங்கள் அமைத்துக் கொள்ளலாயினர். பூர்வகாலத்திய அரண்மனைகளும் ஆலயங்களும் தேசந்தோறும் காணப்படுகின்றன. ஓர் சிறிய குடிசைமுதல் கட்டடவேலைத் திறமைவாய்ந்த ஸப்தஸாலம் ஈறாக உள்ள வசதிகளைக்கண்ணுற்றிடின் எங்ஙனம் கட்டட வேலை முன்னேற்ற மடைந்திருக்கின்ற தென்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஏழைகள் தங்கியிருக்கும் நெருக்கமான குடிசைகளையும் கைத்தொழில் மேம்பாட்டினால் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் காந்த விளக்கு மின்சார விசிறி தண்ணீர்க் குழாய் முதலிய சகல சௌகரியங்களையும் கொண்ட பங்களா வென்ற உத்தியான விடுதிகளையும் ஒத்திட்டுப் பார்த்தால் அஜகஜாந்தர வித்தியாச மிருக்கின்றது என்பதை யாவர் அறியார்? காட்டு மனிதர்களைப் போன்ற அநாகரிகர்களைத் தவிர இதரர்கள் தற்காலத்தில் குடிசைகளிலிருப்பது வறுமையினாலன்றிக் கட்டடங்களை அமைத்துக் கொள்வதின் சௌகரியத்தை யறியாமையினாலல்ல. ஆனால் அக்குடிசைகளை நன்றாயமைத்துக் கொண்டு ஜன்னல்களிட்டுக் காற்றோட்ட முடையதாயும் புகைப்போக்கி வைத்து அட்டில்சுத்தமாயும் இருக்கும்படி சுகாதாரத்திற்குக் குறைவு நேரிடாவண்ணம் அமைத்துக் கொண்டு வசித்தல் மானிடர் முன்னேற்ற மேயாகும். இங்ஙனம்

செய்யாதவர்கள் அநாகரிக நிலைமையைச் சார்ந்தவர்களே. மேலும் ஏழைகளாயினும் குடிசையிட்டுக்கொள்ளுஞ் சௌகரியம் வாய்ந்தவர்கள் சிக்கனமாய்க் குடித்தனஞ் செய்து அக்குடிசைகளைக் கூடியவரையில் தீ முதலிய அபாயங்களுக் குள்ளாக்காமல் கட்டிக்கொள்ள இக்காலத்தில் கூட்டுறவுச்சங்கம் போன்ற நூதன வழிகளிருக்க, வசதிகளைச் செவ்வனே வைத்துக் கொள்ளாதவர்கள் நாகரிகநிலைமையை இன்னமும் அடையவில்லை யென்றே கூறலாம்.

இது வரையில் உறைவிடத்தைப் பற்றி விவரித்து வந்ததினால் வீடுகள் தொழிலுக்குத் தக்கவாறு ஒருவாறு அமைந்துள வென நிச்சயிக்கலாம். அநேகமாய், பிறந்த நிலைமையில் திரிகின்றவர்களுக்கும் வேடர்களுக்கும் நிச்சயமான நிலயமில்லை என்றும் இடையர்களாய்த் திரிபவர்களுக்குச் சுமாராய் ஓரிடத்தில் சுவல்பகாலந் தங்குமளவு குடிசைகளும் கூடாரங்களும் ஏற்படுகின்றன வென்றும் வியவசாய நிலைமையை யடைந்தவர்கள் நிலையாய்த் தங்கவேண்டியிருப்பதனால் குடிசைகள் முதல் கல்கட்டடங்கள் ஈறான இருப்பிடங்கள் அமைத்துக் கொள்ளக் காரணமுண்டென்றும் அதற்கு மேல் கைத்தொழிலும் வியாபாரமும் மற்றவை களால் தனமும் விருத்தியான இக்காலத்தில் மேன்மையான வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன வென்றும் நாம் அறிந்து கொள்ளலாம்.

மேலும் வசதிகள் சீதோஷ்ணஸ்திதிக்குத் தக்கவாறும் அமைந்துளவென்று கண்டுகொள்ளற்பாலது. எப்படி யெனின் பனிநாடுகளிலிருக்கும் எஸ்கிமோ ஜாதியார் பனி வீடு கட்டிக்கொண்டு பூமிக்குள்ளே சற்றுதூரம் வழி



நுழைந்து வாசஞ்செய்கின்றனர். சமசீதமண்டலத்தில் புல்வெளி அதிகமானதாலும் காடுகள் குறைவானதாலும் கொடிய மிருகங்கள் பல இல்லாமையாலும் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு நாடோடிகளாய்க் கூடாரங்களில் வசிக்கின்றனர். மிக உஷ்ணமண்டலத்தில் காடுகளதிகமானபடியாலும் கொடிய மிருகங்கள் ஏராளமானபடியாலும் காட்டு ஜனங்கள் மரங்களின்மீது குடிசை யிட்டுக்கொள்கின்றனர். இம் மண்டலத்தின் சமவெளிகளில் வசிப்பவர்களுக்குப் பண்டங்கள் சௌகரியமாய்க் கிடைப்பதனால் ஏற்கனவே கூறிய வண்ணம் வியவசாயதசையிலுள்ளவர்கள் தங்களுக்குத் தக்கவீடுகளை நிர்மாணஞ் செய்துகொள்கின்றனர். கட்டடங்கட்டும் ரீதிகளில் ஏற்பட்டிருக்கும் வித்தியாசங்களையும் முன்னேற்றத்தையும் ஒவ்வொருதேசத்திய கட்டட நிர்மாண சாஸ்திரங்களையும் தனியாகக் கற்கவேண்டும். நுழைந்த குகைகளைப்போன்ற குடிசைகள் கட்டுவதற்கும் சிற்பசாஸ்திரமுறையாய்க் கணக்குக் குட்பட்டுக் கோலூன்றி அதன்மேல் ஒழுங்காய்க் கட்டடம் எழுப்பி சித்திர வேலைகளால் அலங்கரித்துச் சுகாதார விதிப்படி காற்றும் வெளிச்சமும் கொடுக்கும் விசாலமான வீடுகளை யமைத்துக் கொள்வதற்கும் உள்ள தாரதம்மியம் அளவற்றது. ஒரே குடிசையில் ஒரே அறையில் சமையல் செய்வது முதல் படுக்கையிருக்கை முடித்துக் கொள்ளும் தலத்தை இரண்டு மூன்று அறைகளாகத் தடுத்துக் கொள்ளலாம். ஜன்னல் வைத்தால் திருடர் பயம் ஏற்படுமென்றும் புகை போக்கிவைத்தால் வீட்டிற்குக் கெடுதி நேரிடுமென்றும் நினைத்து வீட்டை யடைத்து வைப்பவர் மானிடர் முன்னேற்றமறியாதா ரென நன்குபுலப்படும்.

வீடுகளில் உட்கார நாற்காலிகளும் சாப்பிட மேஜைகளும் படுக்கக் கட்டில்களும் தொட்டில்களும் அவ்வளவு அவசியமில்லை. அவைகளிருந்தால் சௌகரியந்தான். ஆனால் காற்றும் வெளிச்சமும் புகைபோக்கியுமில்லாமல் கட்டுவது அநாகரிக நிலைமையேயாகும். வீடுகளின் சுவர்களில் விசித்திர வேலைகள் அவசியமில்லை. இருந்தால் நன்றாயிருக்கும்தான்; ஆனால் அவைகளை அழுக்குப் படாமல் சுத்தமாய் வைத்துக் கொள்வது ஏழைகளுக்கு அசாத்தியமான காரியம். உயர்ந்த விலையுள்ள பாத்திரங்களைவிடினும் தமக்குள்ள செம்பு பித்தளை மட்பாண்டங்களை விளக்கிப் பரிசுத்தமாய் உபயோகப்படுத்துவது மேன்மையான முறையாகும். குடியிருக்குமிடத்தையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாய் வைத்துக்கொள்வது சுகவாழ்க்கைக்குப் பொருத்தியதாம்.

---

## (II) பாத்திரங்கள்.

மானிடர்கள் குடியுங்குடித்தனமுமாய் வாழ்வதற்குரிய அனேக சாதனங்களுள் பாத்திரங்களும் ஒன்று. மனிதன் பாத்திரங்களின் உதவியைத் தேடுவது தாகத்தைத் தீர்த்துக்கொள்ளத் தண்ணீரெடுத்து அருந்துவதற்காகவே என்பதை "பாத்திரம்" என்கிற காரணப்பெயர் சுட்டிக்காட்டுகின்றது. எங்ஙனமெனின் வடமொழியில் பாத்திரத்திற்குப் பொருள் "இதனால் குடிக்கப்படுவது" என்பதே. மிருகங்கள் ஜலத்தினருகிற் சென்று நக்கிக் குடிப்பதைப்போல் மனிதனும் ஆதியில் அங்ஙனமே செய்திருக்கலாம். ஆயினும் கைகளமைப்பினால் அவைகளை



அள்ளித் தண்ணீரைக் குடித்திருக்கவேண்டும் என நாம் ஊகித்துக்கொள்ளலாம். ஜலத்திற்குச் சமீபத்தில் தங்கியிருக்குங்கால் வேண்டியபோழ்து தண்ணீரைக் குடித்துக் கொள்ளலாம். ஆனால் தங்குமிடத்திற்கும் ஜலாசயத்திற்கும் இடைவெளி அதிகம் நேர்ந்திடிலாவது அல்லது இருட்காலத்திலாவது தாகமெடுத்தால் ஜலத்தைத் தேடிப்போக வேண்டுமல்லவா. உறங்கி விழித்தால் தாகமெடுப்பது சகஜம். அந்தச்சமயம் தாகத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு உறைவிடத்தை விட்டு வெளியே செல்லவேண்டியிருந்தால் அது சிரமமாயிருக்கும். ஆகையால் தங்குமிடத்திலேயே தண்ணீர் வைத்துக் கொள்வது அவசியம் என்பதைத் தெரிந்துகொண்ட மானிடர்கள் மரப் பட்டையிலாவது இலைகளிலாவது ஜலத்தை யேந்தித் தம்மருகில் வைத்துக் கொண்டிருக்கலாம் அல்லது மண்டைபோடுகளிலாவது விலங்குகளின் கொம்புகளிலாவது தண்ணீரைக் காப்பாற்றி வைத்துக்கொண்டிருக்கலாம். தோல்களைப் பைகளைப்போல் நரம்புகளினால் தைத்துவைத்துக் கொண்டிருக்கலாம். காய்ந்த சுரக்குடுக்கைகள் தென்னங் கொட்டங்கச்சிகள், முதலியனவைகளையும் பாத்திரங்களாக உபயோகப் படுத்திருப்பது சகஜம்.

இத்தகைய ஸ்திதியினின்றும் வெளிக்கிளம்பி எக்காலத்தில் மானிடர்கள் மட்பாண்டங்களைச் செய்யுந் திறமையை யடைந்தார்களோ யாவர் அறிவார்? அநாகரிக நிலைமையிலிருப்பதாய்ச் சொல்லப்படும் அமெரிக்காவிலுள்ள பியூப்லோ இந்தியர்களும் (Peublo Indians) வெகு நூற்றாண்டுகளின் முன்னரே மட்பாண்டஞ் செய்யத்

தொடங்கினர் என்று தெரிகின்றது. கிறிஸ்து பிறப்பதற்கு முன் ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சீனர்கள் அழகிய கோப்பைகளும் தட்டுகளும் ஜாடிகளும் செய்தார்கள் என்று சரித்திரம் கூறுகின்றது. மெஸொபொடாமியாவிலிருப்பவர்களும் கி. மு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே மண்பாண்டங்கள் செய்யத் தெரிந்து கொண்டிருந்தார்கள். கிரீஸ் தேசத்திய சட்டமண்ணின்ஜாடிகளின் மேன்மையைப்பற்றி எத்தனையோ கூறியிருக்கின்றார்கள். கண்ணாடிகள் செய்யத் தெரிந்து கொண்டவர்கள் முதல் கண்ணாடிப் பாத்திரங்களும் செய்யலாயினர். இரும்பு உலோகத்தை உபயோகிக்க ஆரம்பித்தவர்கள் முதல் பலவிதப் பித்தளை வெண்கலப் பாத்திரங்கள் தோன்றலாயின. இவைகள் கைத் தொழிலபிவிருத்தியைக் குறிப்பிடுகின்றன.

இது நிற்க வீட்டிற்கு வேண்டிய "Furniture" எனப்படும் சாமான்களிலும் மானிடர் முன்னேற்றத்தைக் காணலாம். உட்காருவதற்கு ஆசனப் பலகைகளும் கால்களமைத்த மஞ்சங்களும் சாமான்கள் வைத்துக்கொள்ள முக்காலிகளும், படுக்கத் தொட்டில்களும் கட்டில்களும், காற்றாடுவதற்கு ஊசல்களும் நமது நாட்டில் வெகு காலமாய் வழங்கிவருகின்றன. ஆனால் தற்காலத்தில் வெவ்வேறுவித நாற்காலி தினுசுகள், அலமாரிகள், மேஜைகள் முதலிய பல நவீன சாமான்கள் சௌகரியத்திற்குத் தக்கவைகளாய்க் கிளம்பியிருப்பது கைத்தொழிலபிவிருத்திக் கறிகுறியாகும். இவைகளெல்லாம் எங்ஙனம் படிப்படியாய்ப் பெருகிவந்தன வென்பதைத் தெரிந்து கொள்ளப் பல தேசசரித்திரங்களை ஆராய வேண்டும்.

## (5) தற்காப்பு.

“உயிர் வெல்லமாயிருக்கின்றது” என்கிற ஒரு பழமொழியைச் சாதாரண ஜனங்கள் உபயோகிக்கின்றனர். இது உயிரிடத்துள்ள அபிமானத்தைச் சுட்டிக் காண்பிப்பதாகும். அதேபொருள்கொண்ட வசனங்கள் அநேக பாஷைகளில் காணப்படுகின்றன. எங்ஙனமாவது தன்னைக் காப்பாற்றிக்கொள்வது எல்லா பிராணிகளுக்கும் முதற்கடமை. ஆத்மரக்ஷணஞ் செய்துகொள்வதற்கே ஆடுமாடுகளுக்குக் கொம்புகளிருக்கின்றன. மொட்டைமாடுகளும் தலையாலே முட்டுகின்றன. கூர்மையான ஒற்றைக் கொம்புடைய காண்டாமிருகங்கள் முகத்தால் சத்துருக்களை எதிர்க்கின்றன. நீண்ட நகங்களும் கோரமான பற்களும் சில மிருகங்களுக்கு ஆயுதங்களாக உதவுகின்றன. சிங்கம்போன்ற சில மிருகங்கள் கண்களைச் சுழட்டியே எதிரிகளை வெருட்டிவிடச் சக்தியுள்ளவைகளாயிருக்கின்றன. பாம்பு “புஸ்” “புஸ்” என மூச்சுவிட்டுச் சீறுவதே அதற்குப் போதுமான தற்காப்பு. சில பிராணிகள் குரைத்தும் முறுமுறுத்தும் சத்துருக்களை முறியடிக்கும். காலில் வலுவுற்ற குதிரை போன்ற ஜந்துக்கள் பின்னால் சென்றால் உதைக்கும்; முன் சென்றால் கடிக்கும். யானை தன் உருவத்தாலேயே சத்துருக்களுக்குப் பயம் உண்டாக்கும். இங்ஙனம் சரீரத்திலேயே அமைக்கப்பட்ட ஆயுதங்களின் உதவியால் யுத்தஞ்செய்து தத்தம் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்வது பிராணிகளுக்கு இயல்பு. இதுவுமன்றி ஒவ்வொரு பிராணிவர்க்கத்திற்கும் ஒவ்வொரு தனியுக்தியும் சாமர்த்தியமும் உண்டு. நரி தந்திரத்தினால் வெல்லும் என்பது பிரசித்தமான விஷயம்.

ஆ மனிதர்களோ வென்றால் தமக்கு ஏற்பட்டிருக்கும் விசேஷ அறிவின் பலத்தால் சரீரத்திற்குப் புறம்பான ஆயுதங்களைக் கற்பித்துக்கொள்ளச் சாமார்த்தியம்வாய்ந்த வர்களானதால் தற்காப்புக்கு வேண்டிய ஆயுதங்களைக் கருவி என்பதாகச் செய்துகொள்கின்றார்கள். மனிதர்களும் மிருகங்களைப்போலவே முட்டி, கடித்து, கிழித்து, அடித்து, உதைத்து, முறுமுறுத்து, வெருட்டுஞ்சக்தியிருந்தபோதிலும் பேச்சு என்கிற ஒரு விசேஷ உதவியால் விருத்திசெய்து பயன்படுத்தித் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளுஞ் சக்தியும் அமைந்திருக்கின்றது.

காட்டுமனிதராய்த் திரியும் நிலைமையிலும் அங்க அவயவங்களால் யுத்தஞ் செய்யமுடியாதபோது கற்களையும் மரக் கொம்புகளையும் எலும்புகளையும் கையிலேந்திச் சண்டையிடுந் திறமை இயல்பிலேயே மனிதருக்கு அமைந்திருக்கின்றது. கற்களையும் தீட்டிக் கூராக்கி அவைகளால் விலங்குகளைக் குத்திச் சாய்த்திடலாம். இத்தகைய பண்டைக்கால சாமான்கள் பூமியில் பலபாகங்களில் ஆங்காங்குக் கிடைக்கின்றன. இதனால் இந்த ஸ்திதியில் வாழும் மனுஷியர்களைக் கற்காலமனிதர் என்றுரைப்பது மேனாட்டு முறையாகும்.

மனிதர்கள், கற்கள் போதாமல் மரக் கொம்புகளையும் தயார் செய்து, அவைகளைச் சாமர்த்தியமாய் எறிந்து சத்துருக்களை மடக்கி அடிக்கத் தெரிந்து கொண்ட விஷயத்தை ஆஸ்டிரேலியர்களது பூமிராங் என்ற அற்புத ஆயுதத்தால் அறிந்து கொள்ளலாம். வில்லும் அம்பும் கண்டு பிடித்த காலம் எப்பொழுது என்பது நமக்குத் தெரியாது; ஆனால் அநேக நாட்டவர்களின் சரித்-



திரத்திலும் முற்காலத்தில் இந்த ஆயுதங்களதான முக்கியமான யுத்த தளவாடங்களெனச் சொல்லப் படுகின்றன. ஒரு குச்சியை வளைத்து நாணேற்றி அதன் சக்தியினால் சரத்தைச் சத்துருவின் மேல் பிரயோகிக்க வேண்டும் என்பது புத்தி நுட்பத்தை விளக்குகின்றது. சரித்திர மத்திய காலத்தில் துப்பாக்கி மருந்து கண்டுபிடித்து அதை உபயோகத்திற்குக் கொண்டு வருவதற்குமுன் இந்த ஆயுதங்களே ஐரோப்பாவிலும் ஓங்கி நின்றன. அண்டமன் தீவிலுள்ளோர், ஆஸ்டிரேலிய சுவதேசிகள், இந்தியாவிலுள்ள மலைவாசிகள், ஆகிய இவர்கள் இன்னும் அந்த ஆயுதங்களைக் கைவிடவில்லை. "கதை" என்று சொல்லப்படும் சுக்குமாந்தடி என்பது மேற் ஆயுதங்களில் சிலாக்கியமானது. எதிரிகளின் ஆயுதங்களைத் தடுக்கவேண்டிய கேடயங்கள் மரத்தினாலும் ஆமை முதலிய ஜந்துக்களின் முதுகு, மண்டை முதலிய ஓடுகளினாலும் செய்யப்பட்டு வந்தன. இரும்பு முதலிய உலோகங்களைக்கொண்டு வேலைசெய்யத் தெரிந்து கொண்ட காலத்தில் ஈட்டி, வாள், கத்தி, என்கிற நூற்றுக் கணக்கான கொலைப் பாதகக் கருவிகள் தோன்றலாயின. அவைகளினின்றும் தப்பித்துக்கொள்ள இரும்புச் சட்டைகள் ஆக்கப் பட்டன.

ஜனங்கள் சமூகவாழ்க்கையில் அமர்ந்திருக்கத் தொடங்கியகாலம் முதற்கொண்டு தாங்கள் குடியிருக்கும் இடத்தைச் சுற்றி அரண்கள் கட்டி அவைகளைச் சுற்றி அகழ்நிர்மாணஞ் செய்துகொண்டனர். காலவளவில் இவைகளே யுத்த சாஸ்திரப்படி கோட்டைகள் என விளங்கலாயின. துப்பாக்கிகளும் பீரங்கிகளும் தோன்றியகாலத்தில் கோட்டைகளின்மேல் அவைகள் நிறுத்தப்பட்டன. சத்து

ருக்களும் இவைகட்கு மேலான ஆயுதங்களைக் கண்டு
பிடித்துக் கோட்டைகளை முற்றுகையிட்டு அவைகளைத்
தகர்த்து நுழைய ஆரம்பித்த காலத்தில் இந்த ஆயுதங்க
ளும் பற்றாமல் ரசாயன சாஸ்திர ஞானப்பெருக்கத்தால்
“பாம்ப்” (Bomb) என்னும் வெடிகுண்டுகள் தோன்ற
லாயின. “டம்டம்” என்கிற துப்பாக்கிக் குண்டுகள் மிக்க
கொடியமானவை. விஷப்புகையை உண்டாக்கிச் சைனியங்
களைச் சூழ்ந்துகொள்ள ஆரம்பித்த ஜர்மனியர்களின் கதை
கள் பிரசித்தமானவைகள். சென்ற ஜெர்மன் யுத்தத்தில்
வெளிக்கிளம்பிய சத்துரு சம்ஹாரியான கருவிகள் எத்
தனைவிதங்களாய்ப் படைக்கப்பட்டன வென்பது சொல்வ
தற்கே பயங்கரமா யிருக்கின்றது. குண்டுகளை ஒரு நூறு
மைல்கள் பாயும்படி மின்சாரசக்தியினால் வெளிப்படுத்தக்
கூடிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றன.

ஆகாயவிமானங்களில் தங்கி வெடிகுண்டுகள் போட்டு
நகரங்களையும் நாசமாக்க வழிதேடி யிருக்கின்றனர். மேனாட்
டார் மின்சார விளக்குகள் அமைத்துக்கொண்டு இரவில் இரு
ளிலும் யுத்தஞ் செய்கின்றனர். இரவில் நிலத்திலும் நீரிலும்
யுத்தங்கள் நடத்த “search light” என்கிற ஆயிரகேது
போன்ற வெளிச்சம் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றது.
எவ்வளவுக் கெவ்வளவு பெரிய துப்பாக்கிகள் செய்யப்பட்
டிருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு சிறிய கைத் துப்
பாக்கிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. உள்ளங்கைக்
குள்ளேயே அடக்கிக்கொள்ளக்கூடிய ரிவால்வர் (Revolver)
என்பவை கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றன.

கடலிற் சண்டையிட, ஆதிகாலத்தில் சாதாரணக் கப்பல்
கள் ஆக்கப் பட்டிருந்தன. பதினெட்டாவது நூற்றாண்டி



னிறுதியில் நீராவியின் சக்தி கண்டுபிடிக்கப்பட்டது
முதல் நீராவிச் சண்டைக்கப்பல்கள் தோன்றலாயின.
பத்தொன்பதாவது நூற்றாண்டினிறுதியில் சமுத்திரத்திற்
குள்ளேயே வெடிக்கக் கூடிய டார்பிடோ (Torpedo)
படகுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந் நூற்றாண்டில்
நடந்த யுத்தத்தில் கடலினுள்ளேயே சஞ்சரித்து மேலே
செல்லுகின்ற கப்பல்களை உடைக்கக் கூடிய சப்மரைன்கள்
(Submarine) உபயோகத்திற்கு வந்தன.

தற்காப்புக்காக இன்று நடைபெற்றுவரும் கருவிகள்
ஒன்றன் பின்னொன்றாய்த் தோன்றினவைகளே. சத்துருக்
களை ஜயித்துத் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக
யுக்திக்கு மேல்யுக்தி தோன்றிடக் கொலைப் பாதக இயந்தி
ரங்கள் விருத்தியாகி வருகின்றன.

இத்தகைய விருத்தி மானிடர் முன்னேற்றமா
வெனின் “யுத்தம்” என்பது இப்பிரபஞ்சத்திலுள்ள
வரை “ஆம்” என்கிற விடைக்குச் சந்தேகமில்லை.
யுத்தம் நிறுத்தப் படுவதற்காகவே சர்வஜனசமூகம்
(League of Nations) தோன்றி யிருக்கின்றது. அதன்
நோக்கம் நிறைவேறின் உலகம் சுகமடையும் என்பதற்
கையமில்லை. கொலைப்பாதக ஆயுதங்களும் ஓய்ந்திருக்
கும். ஆனால் அஃது எக்காலமோ இறைவனே யறிவான்.

இது நிற்க, ஒரு ராஜ்யத்தில் சைனியம் இருப்பது
தற்காப்புக்கு முக்கியமானதாகும். வில்லர்களாய் வாழும்
ஜனங்களில் ஒவ்வொருவனும் யுத்தவீரனே. அவர்கள்
இனம் முழுதும் சைனியமேயாம். அவர்களுள் ஒரு
இனத்தார் வேறோரினத்தாருடன் யுத்தம்புரியுங்கால் ஒரே

கும்பலாய்க் கூடி மிருகக் கூட்டங்களைப்போல் ஒருவர்மேல் ஒருவர் பாய்ந்து தங்களினத்தோர்களிலேயே ஒருவரை யொருவர் மாய்த்துக் கொள்வார்கள். ஜனசமுதாயம் ஏற்பட்டகாலத்தில் யுத்தரங்கத்தில் போர்வீரர்கள் ஒழுங்கா காய் நின்று சண்டைசெய்யவேண்டும் என்கிற யுக்தி தோன்றியது மானிடர் முன்னேற்றத்தையே காட்டுகின்றது. யுத்தவீரர்கள் யுத்தத்தின்கண் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்குரிய ஆயுதப்பயிற்சி பெற்றிருக்கின்றமையாலும் பொதுவாய்த் தம் தேசத்தைக் காப்பாற்றவேண்டுமென்கிற ஐக்கமேன்மையாலும் நியாயமாய்ப் போர்செய்கிடின் அது மானிடர் முன்னேற்றமேயாகும். இங்ஙனமின்றித் தம் சுயநலத்துக்காகவே கருதிக் கோழைத்தனமாயும் இழிவாயும் குரூரமாயும் போர் செய்வது அநாகரிகநிலைமையிலுள்ள மானிடர் குணமாகும்.

---

## (6) அக்கினி

மானிடர் முன்னேற்றத்தை விளக்கக் கூடிய விஷயங்கள் பலவற்றுள் அக்கினியே முதன்மையாய் விளங்காநிற்கும். அதன் உதவியினாலேதான் மானவர்கள் பதார்த்தங்களைப் பச்சையாய்ப் புசிக்காமல் பக்குவஞ் செய்து உண்ணலானார்கள். இருளையகற்ற அக்கினி உப யோகப்படுகின்றது. தாதுவர்க்கங்களையுருக்க அதற்குத் தான் சக்தியுண்டு. ஜலத்தை ஆவியாக மாற்றி இயந்திரங்களை ஓட்டச் செய்வது அதன் வல்லமையே. மின்சாரசக்தியும் அதன் பரிணாமமே. அது பஞ்சபூதங் களில் ஒன்றென்பது நமக்குத் தெரியும். அக்கினி ஆதி



யில் இவ்வுலகில் எப்படி உற்பத்தியாயிற்று என்பது ஒரு விசேஷமான கேள்வி. அதற்கு விடை ஒவ்வொரு தேசத்தாரும் ஒவ்வொரு கதையைக் கூறுகிறார். அக்கினி என்கிற தேவதையின் முகத்தினின்றும் பூலோகத்திற்கு வந்ததென்று ஆரியர்கள் கருதினார். கிரேக்கர்கள் கூறுவதாவது புரொமிதியஸ் (Prometheus) என்பான் ஒருவன் வானலோகத்தினின்று நெருப்பைத் திருட்டுத்தனமாய் சூரியனிடமின்று ஒரு தீவட்டியைக் கொளுத்தி பூலோகத்தில் மனிதனுக்குக் கொடுத்ததனால் ஜூபிடர் எனும் தெய்வத்தால் தண்டிக்கப்படலாயினன். வட அமெரிக்காவிலுள்ள பைஸன் என்கிற காட்டெருமை [illegible] கற்களுடன் உராய அவற்றினின்று பொறி கிளம்பிற்றென்பார் சில அமெரிக்கர்கள்.

சரித்திராசிரியர்களோவெனின் மரங்கள் ஒன்றோடொன்று காற்றினால் உராயுங்கால் தீப்பொறி கிளம்பியிருக்கவேண்டும் அல்லது பூமிக்குள் வெப்பம் மிகுதியாய்க் கற்பாறைகளைப் பிளந்துகொண்டு தீ வெளிக்கிளம்பியிருக்கவேண்டும் என்று ஊகிக்கின்றனர். ஒருகால் மின்னேற்றினின்றும் தீப்பொறி பூமியில் வீழ்ந்திருக்கக்கூடும். இம்மாதிரி தோன்றிய நெருப்புக் காடுகளில் பரவி வெளிச்சங்கொடுத்ததனால் மனிதர்கள் அதைக் கைப்பற்றியிருக்க வேண்டும். ஆதிமக்கள் அதை அவியாமல் வெகுகாலங் காப்பாற்றி வைத்திருந்தனர்போலும். பண்டைக்காலத்தில் அநேக நாடுகளில் அக்கினியைக் காப்பாற்றி பூஜை செய்துவந்ததனால் அது எத்துணை கஷ்டப்பட்டுக் கிடைக்கத் தக்கதென்று நாம் ஊகித்துக்கொள்ளலாம். சில தேசங்களில் நெருப்பை, கிராமத்துக்குப் பொதுவான ஓரிடத்தில

காப்பாற்றிவைத்து அதைப் பூஜைசெய்வது வழக்கம். உரோமபுரியில் பொதுவாய்க் காப்பாற்றிவைக்கப்பட்டிருந்த நெருப்பு அணைந்துவிடின் அதைச் சடங்குகள்செய்து உற்பத்திசெய்யும்வரையில் ஜனங்கள் ஒருவேலையுஞ்செய்யாமல் சும்மாவிருப்பது வழக்கம். உரோமர்களும் கிரேக்கர்களும் அக்கினியையெடுத்துக்கொள்ளாமல் எல்லையைத் தாண்டமாட்டார்கள். யுத்தங்களுக்குப் போகும்பொழுது அக்கினியை முன்னே கொண்டுபோவது சிலர் வழக்கம். இந்தியாவில் அக்கினி ஹோமமன்றி யாதொருசடங்கும் செய்யமாட்டார்கள். அக்கினி சாக்ஷியாய்த்தான் விவாகம் நடக்கவேண்டும். யாகம் செய்தக்கால் அக்கினியினின்று புருஷன் தோன்றி வேண்டிய வரங்களைக் கொடுப்பது வழக்கம் என்று புராணங்களால் தெரிகின்றது. இறந்தாலும் பிணங்கள் அக்கினியினால்தான் பஸ்மமாக்கப்படவேண்டும்.

இக்கணத்தில் நெருப்பு என்பதைத் தெரிந்துகொள்ளாத மாக்களிருக்கின்றனரோ வெனச் சந்தேகம் சிலருக்குண்டு. அதற்கு உதாகரணமாய் அண்டமன் ஜாதியார் கூறப்படுவர். ஆனால் அவர்களுக்கும் அக்கினியினுடைய உபயோகந் தெரியும் என்று இப்பொழுது சிலரால் சொல்லப்படுகின்றது. தீயை யுண்டாக்குவதற்குப் பலவித உபாயங்களுண்டு. பசிபிக் சமுத்திரத்திலுள்ள டஹிடி ஸாமாய் ஸாண்டிச் முதலிய தீவுகளில் ஒரு கழியை இன்னொரு கழியின் துவாரத்திற்குளிட்டுக் கடைவதனால் உண்டாக்குவது வழக்கம். ஆஸ்டிரேலியா, இலங்கை, தென் ஆபிரிக்கா, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்காவின் தென்பாகம் முதலிய இடங்களில் ஒரு குச்சியால் ஒரு மரத்தைக் கடைந்து நெருப்பை



யுண்டாக்குகின்றனர். பிராம்மணர்கள் இந்தியாவில் யாகஞ் செய்வதற்கு வேண்டிய அக்கினியை "அரணிக் கட்டை" என்று சொல்லப்பட்ட கட்டைகளில் கடைந்தெடுத்துக் கொண்டனர். சக்கி முக்கிக் கற்களாலும் தீயை யுண்டாக்குவது முண்டு. தீத்தட்டிக் குடுக்கை, தீத்தட்டும் பெட்டி என்ற மொழிகளாலும் நெருப்பு உண்டாக்கும் விதம் விளங்குகின்றது. கண்ணாடியைச் சூரியன் முன்னிலையில் வைத்து நெருப்பைக் கிரேக்கர்கள் உண்டாக்கினர் என்பதை அரிஸ்டோபேன்ஸ் (Aristophanes) குறிப்பிட்டிருக்கின்றனர். பஞ்சில் அக்கினித் திராவகத்தை யிட்டுச் சக்கி முக்கிக் கல்லைத் தட்டித் தீப் பற்றவைப்பதைச் சுருட்டுக் குடிக்கும் பைராகிகளிடத்தில் காணலாம். மேனாடுகளிலும் 19-வது நூற்றாண்டுவரை நெருப்பு முற்கூறப்பட்ட வகைகளால்தான் காப்பாற்றி வைக்கப்பட்டது.

அதன் பின்னர் இங்கிலாந்தில் 1805 ல் ரசாயன சாஸ்திர முறையாய்க் கந்தகத்திராவகத்தை யுபயோகித்து நெருப்பை உண்டாக்கினார்களாம். 1809 ல் பாஸ்பரஸ் என்கிற வஸ்துவினால் தீக்குச்சிகள் செய்யப்படலாயின. ஆனால் இத்தீக்குச்சிகள் ஜலசம்மந்தமடைந்தாலும் ஆகாயத்தில் ஈரந்தட்டினாலும் கிழித்தால் பற்றிக்கொள்ளாது. உஷ்ணகாலத்தில் சற்று அழுத்தினால் தீப்பெட்டியே எரிந்துவிடும். இத் தீக்குச்சிகள் செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் அநேக ஆபத்துகள் நேர்ந்தன. ஏனெனின் துர்ச்சரக்கான பாஸ்பரஸ் வெகு சீக்கிரத்தில் தீ பற்றிக் கொள்ளக்கூடியது. ஆகையால் 1855ல் ஸ்வீடன் தேசத்தில் புதுமாதிரியான நல்ல தீக்குச்சிகள் தயார்செய்யப்பட்டன. அவைகளைத் தீப்பெட்டியின்மேல் மருந்து தடவியிருக்கும்

இடத்தில் கிழித்தால்தான் பற்றிக்கொள்ளும். மேனாட்டார் இதை "Safety Match" அதாவது பந்தோபஸ்தான தீப்பெட்டி என்கின்றார்கள்.

இதனிடையில் நிலக்கரியினின்று புகை யுற்பத்தி செய்ததால் அப்புகையும் தீயாய் உபயோகப்படுத்தப்பட்டது. இக்காலத்தில் மின்சார சக்தியினாலும் நெருப்பு உண்டாக்கப்படுகின்றது.

இவ்வாறு காட்டுத் தீ யுலகில் தோன்றியது முதல் மின்சாரத் தீயை யுபயோகிக்கும் நிலைமை தோன்றியிருக்கும் இக்காலம் வரையிலும் மானிடர்களது வாழ்க்கை முன்னேற்றமடைந்திருக்கின்ற தென்பது விசதமா யிருக்கின்றது. காட்டுத் தீயினால் பூமியினுள் மறைந்து கிடந்த உலோகங்கள் உருகி வெளிக்கிளம்பினதாயும் அதைப் பின்பற்றிப் பூமியின் கர்ப்பத்திலுள்ள தாதுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன வென்றும் அவைகளால் ஆயுதங்களும் பிறகு பாத்திரங்களும் செய்து கொள்ளப்பட்டன என்பதும் ரஸிக்கப்படுகின்றன. காட்டுத் தீயினின்றே நெருப்பைக் காப்பாற்றி வைத்துக்கொள்ளுவதில் உண்டான சிரமத்தினால் சக்கிமுக்கிக் கல்லினால் அக்கினி உண்டாக்கிக்கொள்ள மானிடர் தெரிந்துகொண்டனர் போலும். இரண்டு காட்டு மரங்கள் உரைந்து தீயுண்டாவதைக் கண்டு இரு மரத்துண்டுகளை உரைந்து தீயுண்டாக்கத் தெரிந்துக் கொண்டனர் போலும்.

இவ்வளவும் வெகுகாலஞ் சென்ற பின்னர் தானவர்கள் வெகுவாய் உலகில் தோன்றும் அலைகளின் சக்தியை யறிந்த புத்திமான்கள் ஆராய்ச்சியைச் செய்யலாயினர். பிறகு அநுபவத்தால் மின்சார சக்தி முதலியன கண்டு



பிடிக்கப்பட்டன. ஒளி கொடுக்குமாறு விளக்குகளை ஏற்படுத்திக் கொண்ட விஷயம் நான்காம் அத்தியாயத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது.

அக்கினியினுதவியால் சமையல் செய்ய ஆரம்பித்த காலம் முதல் இன்று வரையில் இவ்விஷயத்திலும் முன்னேற்றம் காணப்படுகின்றது.

சில நாடுகளில் காட்டுமனிதர்கள் கற்பாறைகளின் மேல் அனல் மூட்டிக் காய்ச்சி அதன்மேல் பச்சை மாம்சத்தைத் துவட்டி உண்கின்றனர். டஹீடி முதலிய சில தீவுகளில் கிழங்கு வகைகளை இலைகளில் கட்டி பூமியைத் தோண்டி அவற்றைப் புதைத்து அதன் மேல் மண்ணை மூடிக் குச்சிகளையும் சருகுகளையும் இட்டெரித்து ஆறினபிறகு தோண்டியெடுத்து அக்கிழங்குகளை உண்கின்றனர். மூன்று கற்களை யொன்று கூட்டி அடுப்பாக்கி அதில் தீயிட்டு அதன்மேல் பாத்திரத்தை வைத்து சமையல் முதலியனவற்றைச் செய்வது நம்முடைய நாட்டில் யாத்திரைக்காரர்களுக்கு வழக்கம். எண்ணெயில் திரியிட்டு ஏற்றி அதன்மேல் செம்பு ஒன்றில் அரிசியைக் களைந்து போட்டு இரண்டு கிளைகளில் தொங்கவிடும்படி ஏற்பாடு செய்து சமையல் செய்யும் முறையை யாத்திரைக்காரர்களிடம் காணலாம். நீராவியினால் சமையல் பதார்த்தங்களும் பக்குவமாகும்படி செய்யக்கூடிய "குக்கர்" (Cooker) எனப் பெயரிடப்பட்டிருக்கும் பாத்திரங்கள் தற்காலத்தில் கிளம்பி யிருப்பதைப்போல் நீராவியில் பக்குவம் செய்யும் முறையும் முற்காலத்திலிருந்ததாய்த் தெரிகின்றது. பூமியை நீளமாய் இரண்டடி அகலத்தில் வெட்டி அதனுள் தீயை மூட்டிச்சமையல் செய்வதும் நம்முடைய நாட்டி

உண்டு. இதன் பெயர் கோட்டையடுப்பு என்பது. மண் அடுப்பைப் பச்சையாயும் சுட்டதாயும் உபயோகப்படுத்துவதும் சாதாரணம். மேனாட்டார்கள் இரும்பு அடுப்புகளில் சுட்ட கரியையிட்டு அத்தனைவித உணவுப் பொருள்களை பக்குவஞ் செய்வது வெகுகாலத்திய வழக்கம். இரும்புக் கம்பிகளைப் பரப்பிச் செங்கற்களால் சிறிய அறைகளைக் கட்டி அடியில் கட்டையாவது நிலக்கரியாவது எரிந்துகொண்டிருக்கத் தணலின் அனல் வெளியே போகாமல் உள்ளேயே நிற்பதனால் அதிக நெருப்பு உண்டாய்ச் சமையல் சீக்கிரமாய் ஆகும். நம் நாட்டில் அடுப்புகளில் கட்டையிட்டெரிப்பதனால் சிலசமயங்களில் பக்குவமான பதார்த்தங்கள் புகைநாற்றம் வீசும். தணலில் பக்குவஞ் செய்வது சுத்தமாயும் துர்வாசனை யில்லாமலும் இருப்பதுடன் சீக்கிரமாயும் பக்குவமாகும். வரட்டியாக்குவது முட்டியடுப்பெரிப்பதும் நம் தேசத்தில் வழக்கத்திலிருக்கின்றது.

இதற்கடுத்தபடியாய் கியாஸினால் ஏற்பட்ட அக்கினி அதிக சக்தியுடையது. கிரஸின் புகையினாலும் சாராயப்புகையினாலும் நெருப்புண்டாக்கப்படும் "Spirit Stove" என்ற அடுப்புகளும் சக்தியுள்ளவை. மின்சார சக்தியினால் உண்டாகும் நெருப்பு மிக சக்தியுடைத்து. அது புகையில்லாதது. அது வெகு சீக்கிரத்தில் உணவுப் பொருள்களைப் பக்குவஞ் செய்யக்கூடியது.

கப்பலில் யாத்திரை செய்வதற்குத் தகுதியான சில சாமான்களில் "Liquid Fuel" என்பது விசேஷமானது. நிலக்கரி, விறகு முதலியவைகள் இடத்தை அடைத்துக் கொள்ளுவதனாலும், அதிக கனமுள்ளவை யானதாலும் திராவகம் போன்ற இந்த வஸ்துவை யுபயோகித்து



வருகின்றனர். இதற்கு எரியும் சக்தியும் அதிகம்; சீக்கிரத்திலும் பற்றிக்கொள்ளும்.

மேற்கூறியவைகளால் அக்கினியை யுண்டாக்குவதிலும் வளர்ப்பதிலும் மானிடர் அடைந்த முன்னேற்றம் நன்கு விளங்குகின்றது.

---

## (7) உடையும் அலங்காரமும்.

ஒவ்வொரு ஜனசமூகமும் ஒவ்வொரு விதமான உடையையும் அலங்காரத்தையும் அவசியமென ஏற்றுக் கொண்டிருக்கின்றது. உடைகளும் அலங்காரங்களும் அவைகள் ஆக்கப்பட்டிருக்கும் வஸ்துக்களின் குணத்தாலும் சிறியாலும் சாதாரணம், விசேஷம், டாம்பிகம் என மூவகைகளாய்ப் பிரிக்கப்படலாம். முதலில் கூறப்பட்டது இன்றியமையாதது. அலங்காரஞ் செய்துகொள்வதனால் அழகுண்டாகின்றதென்றும் அதனால் கௌரவம் ஏற்படுகின்றதென்றும் தன் சமூகத்தாரால் நன்கு மதிக்கப்படவேண்டுமென்றும் நினைப்பது விசேஷ உடைக்குக் காரணமாகும். சிலர் தாம் மிக மேன்மையாய் விளங்கவேண்டுமென்றும் தம்மைப் பிறர்வெகுவாய்ப் புகழவேண்டும் என்றும் அதிக ஆசைகொண்டு பலவிதப் பளபளப்புற்ற வர்ணங்கள் அமைந்த பட்டு, மஸ்மல், முதலியவைகளா லாக்கப்பட்ட ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிகின்றார்கள். சிலர் விலையில் உயர்ந்தனவாகிய ஆடைகளைத் தங்கள் அந்தஸ்துக்கும் மீறி அணிந்து கொள்கின்றனர். இதுதான் டாம்பிக உடை எனப்படும்.

இவ்விரண்டு விஷயங்களிலும் மானிடரது முன்னேற்ற மென்பது எங்ஙனமென விசாரிக்கப்புகின் உடைகளே யில்லாத மனிதர்களைவிட கௌபீனம் மட்டில் கட்டிக் கொள்ளும் ஸ்திரீகளும் புருஷர்களும் விசேஷமானவர்களன்றே! உடைகள் அணிந்துகொள்ளவேண்டுமென்பதும் சரீரத்தில் எவ்வளவு பாகம் மறைத்துக்கொள்ளவேண்டும் என்பதும் தேசத்திற்கும் காலத்திற்கும் பொருந்தியவாறு வித்தியாச மடைந்திருக்கின்றன.

உஷ்ணமண்டலத்தி லுள்ளவர்களுக்கு உடை அதிகம் வேண்டியதில்லை. பஸிபிக் மகாசமுத்திரத்தி லுள்ள அநேக தீவுகளிலும், இந்தியாவில் மலைகளிலும், காடுகளிலும், ஆப்பிரிக்காவில் மத்தியபாகங்களிலும், வட அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் சில பாகங்களில் வசிக்கின்றவர்களில் சிலர் மர்மஸ்தானங்களையும் மறைத்துக்கொள்வதில்லை. மறைத்துக் கொள்பவர்களும் அதிக சுவல்ப உடைகளை அணிகின்றனர். அந்த உடையும் கோரைப்புல், நார், முதலியவைகளாலும் அல்லது சிறகுகளாலும் தோல்களினாலும் தயார் செய்யப்பட்டவையாகும். பஞ்சு நூலால் துணி நெய்யத் தெரிந்துகொண்டவர்கள் சில விடங்களி லிருக்கின்றனர்.

சமசீதமண்டலத்தில் வாழ்கின்றவர்கள் நீடித்தகாலம் நிர்வாணிகளாய்த் திரியமுடியாது. சரீரம் முழுவதையும் மிருகங்களின் தோல்களாலாவது மரப்பட்டைகளாலாவது உரோமங்களாலாவது மூடிக்கொள்ளவேண்டும். கம்பளம் பஞ்சு, முதலிய நூல்களால் துணி நெய்யு முறை பரவிய காலத்தில் கால்களுக்கு உறைகள் போலவும் உடலுக்கு அங்கிபோலவும் உடைகளைத் தைத்துக்கொள்ளலாயினர்



எனத் தோன்றுகின்றது. இங்ஙனம் சில ஜாதியர்கள் கால்சட்டை உடல் சட்டைகளை வெகுகாலமாய் உடுத்திக் கொள்வாராயினர்.

சமசீதமண்டலத்தில் குளிருக்குப் பயந்து காலுடனே எப்பொழுதும் ஒட்டியிருக்குமாறு ஜோடுகள் (Boots) போட்டுக்கொள்ளலாயினர். தலையை மூடிக்கொள்வதற்காகத் தொப்பிகள் செய்து கொண்டனர். சீன தேசம் முதல் ஐரோப்பா வரையில் உள்ள சமசீதமண்டலத்தில் உள்ளவர்கள் அநேகமாய் எல்லோரும் இம்மாதிரி உடல் முழுவதும் மூடிக்கொள்கின்றனர்.

அதிசீதமண்டலத்தி லிருப்பவர்கள் மயிரடர்ந்த மிருகங்களின் தோலினால் சரீரத்தை எல்லாவிடமும் மூடிக் கொள்கின்றனர். இதனால் சீதோஷ்ணஸ்திதிக்குத் தக்கவாறு உடைகள் ஏற்பட்டிருக்கின்றனவெனத் தெரிகின்றது.

மேலும் ஒவ்வொரு மண்டலத்திலும் பருவத்திற்கு இசைந்தவண்ணம் உடைகள் ஏற்பட்டிருக்கின்றனவெனத் தெரிகின்றது. ஒவ்வொரு இனத்தாரிலும் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் வேறுபாடு தோற்றும்படி ஏற்பட்டிருக்கும் உடைகளையும் உடுத்திக்கொள்ளும் முறைகளையும் பார்த்தே தெரிந்து கொள்ளத் தக்கவை. விசேஷ உடைகளும் தேசத்துக்குத் தக்கபடியே தோன்றியிருக்கின்றன. பட்டு உற்பத்தியாகும் தேசங்களில் பளபளப்பான உடைகளைத் தரித்துக் கொள்வதைக் கண்டு இதர தேசத்தார்களும் அவைகளை வாங்கித் தம்தேசத்திய உடை மாதிரி யணிந்து கொள்கின்றனர். பட்டு, மகமல், முதலிய உயர்ந்த ஆடைகளில் பிரீதியுள்ளவர்கள் அதற்கு வெள்ளி சரிகை தங்கச் சரிகைகளால் ஓரந்தைத்து உடுக்கின்றனர்.

முத்துக்கள் கோர்த்த துப்பட்டாக்கள் சால்வைகள் முதலியவைகள் அணிகின்றனர்.

தனவான்கள், பிரபுக்கள், அரசர்கள் முதலியவர்கள் ஒவ்வொரு தேசத்திலும் விலையுயர்ந்த நிறுசுகளைச் சமயத்துக்குத் தக்கபடி உடுத்திக் கொள்கின்றனர். இன்ன விசேஷத்திற்கு இன்ன மாதிரி உடைகள் உடுத்திக் கொள்ளவேண்டுமென ஏற்பாடு செய்து கொள்கின்றனர். விவாகம், உற்சவம், பண்டிகை, ராஜதர்சனம், பிரபு தர்சனம், சபைகள், முதலியவைகளுக்கு விஜயம் செய்ய ஒவ்வொரு விதமான உடை; காலைச்சாப்பாடு, மத்தியானச் சாப்பாடு, இராச்சாப்பாடு, பாட்டுக்கச்சேரி, ஆட்டக்கச்சேரி முதலியவைகளுக்கு விருந்தாளிகளாய்ச் செல்வதற்கான தனி உடுப்பு; மணப்பெண் மணமகன் மணக்கோலத்திலமர்ந்திருக்க விவாக உடுப்பு; மரணச்சடங்குகளுக்குத் தனிஉடை; சவத்திற்கு ஒருவிதமான உடை; இவ்வாறு எண்ணிறந்தவிசேஷ உடைகள் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றியிருக்கின்றன.

இவைநிற்க, அநேக நூற்றாண்டுகளுக்கு முன் ஆடை விஷயத்தில் மேம்பாடடைந்த நம் நாட்டில் புருஷர்கள் இடையில் முழங்கால்வரை மூடிக்கொள்ளுமாறு துணி கட்டிக்கொண்டால் போதுமென்றும் மேலுக்கு அங்கவஸ்திரம் ஒன்று அதிகம் கிரகஸ்தனுக்குத் தேவையென்றும் கொண்டிருந்தார்கள். மகம்மதியர்கள் முதல் அந்நிய நாட்டினர்கள் நம்நாட்டுக்கு வரத்தொடங்கியதால் அவர்களைக் கண்டு அதிக உடை தரிக்கலாயினர் ஆனால் மலையாளர்கள் தவிர இதரபெண்டுகள் வெகுகாலமாய் மரைபுருவி யணிந்தாலும் பட்டாடை யுடுத்தாலும் சரீர முழுவதையும்



மறைத்துக்கொண்டு வந்திருக்கின்றனர். மேலும்பிரம்மசாரிகள் இன்ன விதம் துணி கட்டிக்கொள்ளவேண்டு மென்றும் விவாகமானவர்கள் இன்னவிதம் உடுக்கவேண்டுமென்றும் விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அதேமாதிரிக் குமரி இவ்விதம் உடை யணியவேண்டு மென்றும் வயது வந்தமாதர்கள் இவ்விதமாய் உடை கட்டிக்கொள்ளவேண்டு மென்றும் விதிகள் உள. இந்நாட்டின்கண் துறவிகளுக்கு உடை வேறு; காஷாயமிட்ட ஒற்றைத்துணியும் "பண்டிசரிகோவணமும்" அவர்களுக் குரியனவாம். கௌபீன மட்டில் தரிக்கும் தசையிலுள்ளவர்களும் அதையும் நீக்கிய அதிவர்ணாசிரமிகளும் இருக்கின்றனர். மேனாடுகளிலும் பாதிரிமார்களுக்கும் குருமார்களுக்கும் தனி உடை உண்டென்பதை யாம் அறிவோம்.

இம்மாதிரி உடைகள் பலவாறாய்க் கிளம்பி நிற்க எவ்வுடை நாகரிகத்திற்குவந்தது என்ற கேள்வி வருங்கால் விடை பலவாறாய்த் திரியும். ஐரோப்பியர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் உடையின் மாதிரியை அவர்கள் சென்ற விடங்களி லுள்ளவர்கள் வெகுப்பிரியத்துடன் அனுகரிக்கின்றனர். அதனால் அது மேன்மையான உடையோவெனச் சந்தேகம் உதிக்கும். இரக்ஷணிய சேனைகளிற் சேர்ந்தவர்கள் எத்தேசத்திற்குச் செல்கின்றனரோ அத்தேசத்தி னுடையைக் கூடியவரையில் உடுத்துகின்றார்கள். ஐரோப்பியர்களிற் சிலர் இந்தியாவில் உஷ்ணத்திற்குத் தக்கவாறு சுவல்ப உடை தரித்தால் போதுமென வாயாற் சொல்கின்றவர்க ளிருக்கின்றனர். தற்காலத்தில் சில ஐரோப்பிய ஸ்திரீகள் இந்நாட்டில் உடையைக்

குறைந்து வருவதை யாம் காண்கின்றோம். அவ்வவர்கள் தத்தம் சுவதேச உடையை மேலானதாய்க் காண்பது சரிதான் எனில் அண்டமன் நிகோபார் தீவிலுள்ள கௌபீனதாரிகளையும் நம் நாட்டிலுள்ள கௌபீனதாரிகளையும் நாகரீகமற்றவர்களென்று சொல்லத்தகுமா? இடைக்குமேல் கழுத்துவரை உ[illegible]த்தில் ஆண்மக்கள் உடைபோட்டுக் கொள்ளாவிடின் அநாகரீகராவார்களா? நாம் வெயிலில் போகும்போது தலையை மூடிக்கொள்வது அவசியமாகும். ஆனால் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்போது தலைப்பாகை மாட்டிக்கொள்ளாவிடின் நாகரீகமுறைப்படி மரியாதைக்குறைவென நினைத்து நம் நாட்டினர்கள் எஜமானர்களது முன்னிலையில் சிரசில் ஒரு பாரம் வகிக்க நேர்ந்துவிட்டது. அந்தோ பாவம்! தலைப்பாகை யென்பது மகம்மதியர்களது வழக்கம்; அவர்களதாட்சியில் ஏற்பட்ட மரியாதையை ஆங்கிலேயராசாட்சியுங் கைக்கொண்டது போலும்.

தற்காலத்தில் சுவதேச உடைதரித்தல் வேண்டும் என்கிற கிளர்ச்சி இந்நாட்டில் உண்டாயிருக்கின்றது. சுவதேச உடை யாது என்ற கேள்வியும் முளைத்திருக்கின்றது. இவ்வாறு நம் தசை ஒருவாறு நிற்க உடைவிஷயத்தில் மானிடர் முன்னேற்றம் என்பதென்ன வென்பதை நாம் விசாரிப்போமாக. இயற்கையில் தோன்றியவாறு நிர்வாணிகளாய்த் திரிபவர்களினும் மர்மஸ்தானங்களை மட்டில் மூடிக் கொள்பவர்கள் மேலானவர்களென்றும் அடுத்தபடியாய் இடைமுதல் முழங்கால்வரையினு மூடிக் கொள்கின்றவர்கள் சிறந்தவர்கள் என்றும் அதற்கும் மேல் சீதோஷ்ணஸ்திதிக்கு யோக்கியமான வழியால் வேண்



டியவளவு சரீரத்தை மூடிக் கொள்வது தகுதி என்றும் துணிவாய்ச் சொல்லலாம். சுகாதாரவிதிப்படிச் சுத்தமாய் உடைகளணிவது நாகரீகமே. சில தீவுகளிலுள்ள ஸ்திரீகள் கௌபீனம் மட்டில் கட்டிக் கொள்வதை யாவர் சரியென ஒப்புக் கொள்ளக்கூடும்? அல்லது ஸ்திரீகளாயினும் புருஷர்களாயினும் அசுசியான முரட்டுத் தோல்களையுடுத்திக்கொள்வது நல்ல நிலைமையென்று யாவர் ஒப்புக் கொள்வார்? ஆனால் பட்டாடைகளும், காலங்கிகள் மேஜோடுகள் பூட்டுகள் (Boots) என்ற மூன்று நான்கு உறைகளும் காலர், நெக்டை, என்கிற தினுசுகளும், தொப்பியும் மானிடர்முன்னேற்றத்தின் அங்கங்களல்லவெனத் தோன்றுகின்றது. ஆயினும் உடைகளில் பலமாதிரிகள் தோன்றியிருப்பது கைத்தொழில் அபிவிருத்திக் குபகாரம் என்பது ஒருவித பரிகாரமாகும்.

அநாகரிக தசையி லிருப்பவர்கள் முதல் நாகரிகதசையின் முடிவை யடைந்திருப்பதாய்க் கருதும் மேனாட்டார்கள் இறுதியாய் உடலை அலங்கரித்துக் கொள்ளும் முறைகள் படிப்படியாய் முன்னேறிக் கொண்டு வந்தவைகள் என்று ஒருவாறு கூறலாம். காட்டு மனிதர்கள் தாம் வேட்டையாடிய மிருகங்களின் தோலையுடுத்திக்கொண்டு மண்டை யோடுகளையும் அவைகளின் பற்களையும் எலும்புகளையும் மாலையாக அணிந்து கொள்கின்றனர். பக்ஷிகளின் சிறகுகளைத் தலையில் சொருகிக் கொள்கின்றனர். காட்டுமலர்களைத் தலையில் சூடிக்கொள்கின்றனர். ஸ்திரீகள் காதைத்துளைத்து மிகப் பெரியதாக்கி மார்புவரை தொங்கும்படி வளையங்களை யிட்டுக்கொள்கின்றனர். சில புருஷர்களும் ஸ்திரீகளும் மூக்கின்நடுத் தண்டைத்

துளைத்துக் குறுக்காய் நீண்ட எலும்புத் துண்டை மாட்டிக் கொள்கின்றனர். பருத்த உதடுகளையுடைய நீக்ரோ ஸ்திரீகளில் சிலர் மேலுதட்டையும் சிலர் கீழுதட்டையும் துவாரமிட்டுப் பெருக்கி அவைகளில் வளையங்களைமாட்டிக் கொள்கின்றனர். அநாகரிகர்களெனச் சொல்லப்படுவோர்களில் பலர்சரீரத்தைக்கீறித் தழும்புகளையுண்டாக்கிக் கொள்கின்றனர். பச்சை குத்திக்கொள்கின்றனர். கை, கால், கழுத்து இவைகளில் வளையங்களை மாட்டிக்கொள்வது சிலருக்கு அலங்காரம் எனத்தோன்றும். போர்னியோ நியூகினி முதலிய தீவுகளில், பித்தளை, இரும்பு முதலிய கம்பிகளை வளையமாகச் சுற்றிச்சுற்றி மாட்டிக் கொள்கின்றனர். பர்மாவில் மலைப் பக்கங்களிலுள்ளவர்களிற் சிலர் தம்கழுத்தை வளைக்கவொட்டாமல் கம்பிகளைச் சுற்றிக் கொள்கின்றனர்.

இவ்வாறே படிப்படியாய் தனம் விருத்தியாக விருத்தியாக வெள்ளி, தங்கம் இவைகளால், ஆபாணங்கள் புனைந்து கொள்கின்றனர். இவைகளும் முரட்டுத் தனமாய் விகார உருவங்களுடன் பல நாடுகளில் தோன்றியிருக்கின்றன. இரும்பு வளையங்களையும் பித்தளைவளையங்களையும் மாட்டிக்கொள்வது அநாகரீகம் என்றும் சிறிய தங்கக் காப்பு, வளையல், கொலுசு, சங்கிலி, அட்டிகை முதலியவை நாகரிகக்குறிகளென்றும் சிலநாடுகளில் வழங்கி வருகின்றன. இவ்வாறே காது மூக்குகளுக்கு விலையுயர்ந்த கற்களமைக்கப்பெற்ற வேலைத்திறம் வாய்ந்த சிறிய நகைகள் தோன்றியிருக்கின்றன.

விரல்களுக்குத் தேங்காயோடு சிப்பி முதலிய வற்றாற் செய்த மோதிரங்களை சிலரிட்டுக்கொள்ள வேறு



சிலர் தங்கமோதிரம் வைரமோதிரங்களை இட்டுக்கொள்கின்றனர்.

தலையிலுள்ள மயிர்களை அலங்கரித்துக் கொள்வதும் பலவிதநிலைமையிலிருக்கின்றது. ஸ்திரீகளுள் பெரும்பான்மையோர் மயிரை வளர்த்து வாரி முடியிட்டுக்கொள்கின்றனர். அல்லது பின்னித் தொங்கவிட்டுக்கொள்கின்றனர். அல்லது பலவிதமாய் எடுத்துக் கட்டிக்கொள்கின்றனர். (எஸ் S கட்டு என்பது நமது சிறுமியர்களுக்கும் தெரியும்). தலைமயிரைச் சுருட்டையாய்க் கத்தரித்துக்கொள்கின்றனர் சில ஜாதியார். அண்டமன் தீவிலுள்ள ஸ்திரீகள் செவ்வனே மொட்டை யடித்துக்கொள்கின்றனர்.

புருஷகர்ளிலும் மயிரை வளர்க்கும் விஷயத்தில் சிரத்தை யுள்ளவர்கள் பலரிருக்கின்றனர். தலையில் ஒரு பாகத்தை க்ஷவரம்செய்து மீதிப்பாகத்தில் மயிர் வைத்துக் கொள்வது சில தேசங்களில் வழக்கம். மயிரைக் கத்தரித்துக்கொள்ளும் முறையில் பல (crop) தினுசுகள் தோன்றி வருகின்றன. முகத்தில் மீசையுந் தாடியும் பலவிதமாக வைத்துக்கொள்வதும் நீக்கிவிடுவதும் அலங்காரங்களாய் விளங்குகின்றன.

பிறந்த மேனியாய் நின்று சரீரத்தை யாதொரு விதமான அந்நியவஸ்துக்களால் விகாரப்படுத்தாமல் சுத்தமாய் இருப்பதுதான் இயற்கை யழகு என்பார் அறிஞர். உலகவாழ்க்கையி லிருப்பவர்கள் தற்காலத்தில் புத்தி நுட்பத்தால் புதியவைகளாய்த் தோன்றியிருக்கும் பொருள்களால் உற்பத்திசெய்யப்படும் நூதன ஆபரணங்களையும் முறைகளையும் நாகரிகத்தின் அறிகுறிகளாகக்கொள்கின்ற

னர். வீடு, கோவில், அரண்மனை முதலியவைகளைச் சித்திர வேலைகளின் திறமையால் அலங்கரித்துச் சந்தோஷமடைவதுபோல் சரீரத்தையும் அலங்கரித்துக்கொள்வது சரிதான் என்றும் ஆனால் முரட்டுத்தனமும் அநாகரிகமுமின்றி நாஜூக்காயுள்ள நகைகள் இட்டுக்கொள்வது அழகுதானென்று உரைக்கின்றனர். நகைகள் செய்யும் சம்பந்தமாகக் கைத்தொழில்கள் விருத்தியாகிக்கொண்டு வருவதும் அவை சிலருக்கு ஜீவனோபாயத்திற்குக் காரணமாய் இருப்பதும் ஒருவாறு ஒத்துக்கொள்ளத் தக்கனவேயாகும்.

ஆனால் சமூக வாழ்க்கைக்கு இம்மாதிரியான மனோபாவமும் தேவையென்று ஆபரணங்களையே பிரதானமாய்க் கொண்டு இதர விஷயங்களைக் கவனிக்காமலிருப்பது நாகரிகக்குறை யென்ற ஓர் அபிப்பிராயமும் நிற்கின்றது. நிற்க, நகைகளில் பிரயோஜனமற்றுத் தூங்கும் தனம் விருத்தியம்சங்களில் உபயோகிப்பது நாகரிகமுறையாகும் என்பது மேனாட்டார் கொள்கை. நகைகளையும் யோகிப்பவர்கள் கருதுவதாவது அவைகள் அலங்காரமாய் நிற்பதுமல்லாமல் சொந்த சொத்தாய்ப் பாவிக்கக்கூடிய க்ஷேம நிதி என்பதேயாகும். அவைகளால் விளையும் திருட்டு கொலை முதலிய தீயவினைகளையும் அவர்கள் கவனிப்பதில்லை. இவைகளைக் குறிப்பிடின் இதர சொத்துக்களுக்கு ஆபத்துகளில்லையா? என வினவுகின்றனர்.

இத்தகைய அபிப்பிராயங்களைச் சீர்தூக்கிப்பார்த்து இந்தியாவின் நிலைமையைக் கவனித்தால் நகைகளை ஏராளமாய்ச் செய்து கொள்வதினும் தேசத்தில் தனம் விருத்தியாகக் கூடிய கைத்தொழில்களில் திரவியத்தை உபயோகிப்பது மானிடர் முன்னேற்றத்திற் கிடமாகும்



என்பது பலர் அபிப்பிராயம். டாம்பிகமான நகைகளையும் உடைகளையும் அணிவதற்குத் தக்க நிலைமையில் இந்தியர்களில்லை யென்றும் இத்தேசத்தார் முன்னேற்ற மடைய வேண்டியதற்குப் பண்டைக் காலத்திய ஆரியர்களைப்போல் சாமானிய உடைகளையும் சாமானிய அலங்காரத்தையும் பின்பற்ற வேண்டுமென்றும் பலர் நினைப்பது நியாயமேயாகும்.

---

## (8) விவாகம்.

பிராணி சாஸ்திர நிபுணர்களும் மானிட சாஸ்திர நிபுணர்களும் ஜங்கமவர்க்கத்திற்கு மூலாதாரமான அமீபா (Amæba) என்கிற நுட்பஜந்து முதல் மானிடரீறாக உள்ள உயிருள்ள யாவற்றையும் சாங்கோபாங்கமாகப் பரீக்ஷை செய்து ஒவ்வொரு ஜீவராசியும் என் எங்ஙனம் விருத்தியாகின்றதென விசாரித்து "இவ்வுலகில் மனிதனுடைய நிலைமை இதுதான்" என நிர்ணயித்திருக்கின்றனர். ஜீவராசிகளின் சரீர அமைப்பினாலேயே இனப்பெருக்க இச்சை அவைகளுக்குப் பரம்பரையாய்த் தொடர்ந்து வருகின்றது. இந்த இச்சை எங்ஙனம் நிறைவேற்றப்படுகின்றதெனின் மானிடர்களைத் தவிர இதரப்பிராணிகள் அநேகமாய் வியவஸ்தையில்லாமல் ஆணும் பெண்ணும் சிநேகம் செய்து கொள்வதினால்தான். ஆனால் மனிதனோ தனது அறிவினால் இந்த இச்சையை அதன் வசமாய் விட்டுவிடாமல் தன் வசமாய் நிறுத்திக்கொள்ள சக்தியுடையோனாய்க் காலம், தேசம், பாத்திரம் இவைகளை யுணர்ந்து தான் வாழும் சமூகத்தின் வரைமுறைகளுக்குட் பட்டு விவாகம் செய்து

கொண்டு இல்லற வாழ்க்கையைக் கைப்பற்றி மானத்துடன் வாழ்நாட்களை நடத்தக் கடமைப் பட்டிருக்கின்றான். இந்நிலைமையை யடைந்தவனே நாகரிகஸ்தன் எனப்படுவான்.

நரர்கள் நாகரிகதசையை யடைவதற்கு முன் பக்ஷிகளையும் மிருகங்களையும் போலவே காமாதுரர்களாய்த் திரிந்து அதனால் ஏற்படும் குரோதம் முதலிய தீயகுணங்களினால் விளையுஞ்சண்டை சச்சரவுகளால் சுகக்கேடு விளைவதையறிந்து விவாகச் சீர்திருத்தஞ் செய்து கொள்ளத் தொடங்கும் வரை பல்லாயிரம் ஆண்டுகள் சென்றிருக்க வேண்டும். உலகில் தற்காலத்தில் உலவிவரும் விவாகமுறைகளைப் பரிசோதித்திடின் ஆதிகாலம் முதல் தோன்றி மாறின விவாக நடைகள் வெளியாகின்றன. பெற்றோர்களால் விவாகம் நிச்சயிக்கப்பட்டு சடங்கு நடத்துங்கால், ஒரு ஜாதியார்களுள் பெண்ணை மறைத்துவைத்து இதரர்கள் சூழ்ந்து கொண்டிருக்க மணமகன் அவர்களை ஆயுதங்களால் துரத்தி மணமகளைத் தூக்கிக்கொண்டுபோக வேண்டுமென்பதும், இன்னொரு ஜாதியார்களுள் விவாக முகூர்த்தத்திற்கு இரண்டுநாள் முந்தி இரவில் மணப்பெண்ணைத் தூக்கிக்கொண்டு தன் வீட்டுக்குப் புருஷன் செல்ல அவள் தாய் கூக்குரலிட்டு அழுது கொண்டு முகூர்த்த சமயத்தில் பெண்ணைக்கட்டிக்கொண்டு அழ மணமகனின் பெற்றார் அவளுக்குத் திருப்தியாகும்படி விருந்து செய்து சமாதானஞ் செய்து பிறகு விவாகம் முடிக்கவேண்டு மென்பதும் விவாகத்திற்குமுந்தி வரன் காசி யாத்திரை செல்வதாய்ச் சற்று தூரஞ் செல்ல, பெண்ணின் பெற்றோர் தம் கன்னிகையைக் கொடுப்பதாய்த் திருப்பி யழைத்துவருவ தென்பதும் முறையே சண்டை



யிட்டுப் பெண்ணைப் பிடித்துக்கொள்வதும் திருட்டுத்தனமாய்ப் பெண்சாதியைத் தேடிக்கொள்வதும் வேதம்ஓதிய பிறகு பிரம்மசாரி, காசியாத்திரை செல்லுங்கால் வழியில் யாராவது பெண்ணைக் கொடுத்தால்தான் கிருகஸ்தாசிரமத்திலிருக்க விரும்புவதும் பழைய முறைகளைக் காண்பிக்கின்றன. இதைப்போல் அநேக ஆச்சரியமான மணமுறைகளை உலக சரித்திரத்தில் காணலாம்.

ஒரு ஸ்திரீயை ஒரு புருஷன் அடையும் வழிகள் பல உள்ளன. இயற்கையிலேயே பெண் இனத்தைவிட ஆண் இனம் பல்விதத்தில் மேன்மை யடைந்திருந்தாலும் பெண் இனம் ஆணினத்தைவிடச் சீக்கிரமாய் யௌவனத்தை யடைவதாயும் சுவபாவத்தினாலேயே பெண்ணினம் வெட்க முடையதாயும் அடக்கத்துடன் ஆணினத்தை வணங்கக்கூடியதாயும் நின்று இனப்பெருக்க இச்சையைக் காட்டிக்கொள்ளாமல் பிகுலகுவாயும் ஜாக்கிரதையாயும் இருப்பதால் புருஷர்களே ஸ்திரீகளை நாடுகின்றனர் என்பது சகஜகுணமாகும். ஆகையால் ஒரு ஸ்திரீயைப் பல புருஷர்கள் கோறின் யாருக்கு அப்பெண் சொந்தமாவது என்கிற நெருக்கிடை வருங்கால் மானிடர்கள் மிருகங்களைப் போல் வசிக்கும் நிலைமையில் பலமுற்றவனுக்கே அவள் ஈடுபட வேண்டியிருந்தது. இஃது இந்து சட்டத்தில் ராக்ஷஸ விவாகம் எனக் கூறப் பட்டிருக்கின்றது. வட அமெரிக்க இந்தியர் யுத்தத்தில் ஸ்திரீகளை ஜயித்துக்கொள்வதற்காக பாலியம் முதல் யுத்தப் பயிற்சி செய்கின்றனராம். அதனால் இருபது வயதுக்குமுன் ஆண்மகன் ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம் புரிய நினைக்கவே முடியாது.

ஆகையால் அவர்களுடைய சந்ததிகள் பலமுற்றவர்களா யிருக்கக் காரணமுண்டு. இவ்வாறு யுத்தஞ் செய்து பெண்டிரைக் கொள்ளும் வகுப்பினர் இப்பொழுது மிரு கின்றனர். ஆதி காலத்திய பெரும்யுத்தங்கள் ஸ்திரீகளை பற்றியே தோன்றின வென்பதற்கு அநேக தேசங்களின் ஆதிகாவியங்கள் சாக்ஷியாகும். ராமாயணம், இலியட் முதலிய கிரந்தங்களைப் பார்த்துக் கொள்வோமாக.

ஸ்திரீகள் தூங்கும் பொழுதாயினும் அல்லது குடி முதலிய லாகிரி வஸ்துவின் வயப்பட்டிருக்கும் பொழுதா யினும் வஞ்சனை முதலிய சூழ்ச்சிகளுக்குட் பட்டிருக்கும் போழ்தாயினும் அவர்களை மணம் புரிந்து கொள்ள வற் புறுத்துவது ஒரு முரட்டுவழி. இதைப் பைசாசவிவாகம் என ஹிந்து சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன.

யுத்தம் அல்லது வஞ்சனை முதலிய சூழ்ச்சிகளை நீக்கிப் பெண்டுகளை வசீகரஞ் செய்து மணம்புரிய முயல்வது சமாதானவழியாகும். மந்திரங்களாலும் பச்சிலை களாலும் வேர்களாலும் சரீர சம்பந்தப்பட்ட நகம், கேசம் முதலியவைகளாலும் வசீகரஞ் செய்து ஸ்திரீகளை விவாக இச்சை யுடையவர்களாக்கக்கூடும் என்கிற நம்பிக்கை கொண்ட அநேக மனிதர்களிருக்கின்றனர். இவைகளைத் தவிர ஸங்கீதமும் ஸாகித்தியமும் நிருத்தியமும் மனதை யிழுக்கக்கூடியவைகளாதலால் இசைபாடிக் கவிபுனைந்து அபிநயஞ்செய்து ஆடி விவாக உற்சாகத்தை யுண்டாக்கு வதைப் பக்ஷிஜாதிகளின்கண்ணும் விலங்கினங்களின் கண்ணும் நாம் காண்கிறோம். மானிடர்கள் இம்முறைகளைப் பின்பற்றி ஒவ்வொன்றிலும் முன்னேற்ற மடைந்திருக் கின்றனர்.



அநாகரிக நிலைமையி லிருப்பவர்களும் பாடுகின்றனர். ஆனால் அது முரட்டுத்தனமானதாயும் ஒரே கூக்குரலாயும் விகாரமாயும் நமக்குத் தோன்றும். கவிகளும் தமது இச்சையைப் பச்சை பச்சையாய் மானக்கேடான வார்த்தை களால் இசைக்கப்பட்டிருப்பவைகளை நாம் அருவருக்க லாம். அவர்கள் ஆட்டமும் நம் கண்ணுக்குக் கேவலமாய்க் காணப்படும். ஆனால் நாகரிகஸ்தர்களது ஸங்கீதம் இனிமை யாயும் சரளமாயும் இருக்கும். கவிகளது நடை கௌரவம் பொருந்தியதாய் விளங்கும். மொழிகளும் சிருங்காரப் பொருளை மறைவாய்க் கூறுவனவாயும் ஆழ்ந்த கருத்துடையனவாயும் விளங்கும். நிருத்தியமும் சிறந்த அபிநயத்தால் பொருட்சுவையைப் பிரகாசிப்பிக்கும். இம்மூன்று விஷயங்களைப் பற்றி ஒவ்வொரு இனத் தாரும் தத்தமக்குள் ஏற்பட்டிருப்பதை நாகரிக முறை யென்பார். ஆங்கிலேயர்கட்கு நமது ஸங்கீதமும் நிருத்திய மும் நமக்கு அவர்களது " பாண்டும் " "பாலும்" (Band and Ball) நாகரிகமாய்த் தோன்ற வெகு நூற்றாண்டுகள் இனிச் செல்லவேண்டியதாயிருக்கும். அங்ஙனமே ஆபிரிக்கா ஆஸ்டிரேலியா பாலினேஷியா மெலனேஷியா முதலிய இடங்களிலுள்ளவர்களது கூத்தும் பாட்டும் நன்று இல்லையென்றும் முரட்டுத்தனமானதென்றும் நாம் கூறுவது சகஜம். அவர்கள் நமது ஆடல் பாடல்களைப் பார்த்து நகைப் பார்களென்று தோன்றுகின்றது. ஆயினும் மனோபாவ தத்துவம் வெளியிடப்படும் வாயிலால்தான் நாகரிகத்தின் தகைமையை நாம் காணக்கூடும். ஆதலால் ஒவ்வோரினத் தாரின் செயல்களை யாராய்ந்த பிறகு தான் அவரது நாகரிகத்தை நாம் தீர்மானிக்க வேண்டும். அநாகரிகர்

களுடைய பாடல்களின் சட்டவமைப்பு விகாரமான மொழிகளால் இசைக்கப் பட்டிருக்கின்றதென்பதை யாவரும் மறுக்க முடியாது. நமது நாட்டில் சாமானிய ஜனங்கள் பாடும் தெம்மாங்கு, தில்லானுக்களையும் சிங்காரப் பாட்டுகளையும் நாடகப்பாட்டுகளையும் கவனித்துப்பார்க்கின் அவ்விஷயம் தெளிவாய்ப் புலப்படும். இதைப்போலவே பாட்டும் ஆட்டமும் இருக்கின்றனவெனலாம். நாகரிக தசையிலுள்ளவர்களது சங்கீதம் சாகித்தியம் நிருத்தியம் இம்மூன்றும் அவற்றிற்கு ஏற்பட்ட சாஸ்திரவளவாய்ப் புத்தியையும் ஞானத்தையும் விசாலமாக்கியிருப்பதை நாம் இன்னும் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கின்றது.

இம் மூன்று வழிகளால் மணம் புரிந்து கொள்ள முயல்வது சுவயேச்சா விவாகம் எனப்படும். இது ஜாதி குலாசார வரம்புக் குட்பட்டுப் பகிரங்கமாய் நடை பெற்றிடின் சுவயம்வரம் எனப்படும். ஆனால் இரகசியமாய் நடைபெறின் இது காந்தர்வ விவாகம் (Gretna Green Marriage) எனப்படும்.

முற்கூறப்பட்ட மார்க்கங்களுக் கடுத்தபடியாய் "அழகு" என்பதைக் குறிப்பிடுவோம். அழகு எங்ஙனம் ஸ்திரீ புருஷர்களை ஒன்று கூட்டுகிறது எனும் மனோபாவ தத்துவத்தை வெளிப்படுத்த முயற்சி செய்வதைக் காட்டினும் அதன் வசப்படாதவர் சங்கியை மிகக் குறைவானது என்றலே போதுமானதாம். அழகுக்கு இலக்கணம் கூறுவது வெகு கடினமான காரியம்; ஏனெனின் ஒவ்வொரு ஜாதியாருக்கும், ஒவ்வொரு ஜாதியாரில் ஒவ்வொரு மனிதனுக்கும் பொதுவாய் ஒருமனோபாவமும் தனித்தனியாய் வேறுவேறாய் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு அளவை (Standard



அவரவர் மனப்பான்மையைப் பொருத்ததாயினும் எதைக் கொண்டு அழகு பொதுவாய் நிச்சயிக்கப்படுவதெனின் சரீர வமைப்பு என்பார் பல்லோர்; குணமும் கல்வியும் என்பார் சில்லோர்; எல்லாம் கூடியதென்பார் சிறுபான்மையோர்.

முக அழகு என்பது யாவருக்கும் பொதுவானது. முகத்தின் வடிவம், அதிலுள்ள இந்திரியங்களின் அமைப்பு அவைகளின் செயல் முதலியவைகளால் அது நிர்ணயிக்கற்பாலது. இந்தியர்கள் சந்திரவதனை யென்று மாதர்களை வர்ணிக்கின்றனர். இதனால் முகத்தின் வடிவம், பிரகாசம், குளிர்ந்தபார்வை முதலியன அழகைத் தருவன வென்பது ஏற்படுகின்றது. உருண்டை வடிவமான முகம் சிலருக்கு அழகாய்த் தோன்றாது. கோழிமுட்டை வடிவமுற்ற முகந் தான் அழகென்பாருக்கு வட்டமான முகம் எங்ஙனம் அழகுடையதாகும்? கறுப்புவிழி இந்தியருக்கு அழகு; பூனைக்கண் ஆங்கிலேயருக்கு அழகு. சப்பைமூக்கு வாய்ந்த மங்கோலியருடைய குறுகிய பொட்டுக்கண்ணுக்குச் சிங்களவர்களது மூக்குக் கழுகு மூக்கைப்போல் வளைந்திருக்கின்றதெனப் பரிகாசம் செய்வதற் கிடமானதாயிருக்கின்றது. அகன்ற துவாரங்களையுடைய ஸையாம் தேசத்தவருடைய சிறிய மூக்குக்கு ஆங்கிலேயர்களுடைய சிறுதுவாரமுடைய நீண்ட மூக்கு அழகில் ஈடுகட்டாதாம். ஒடுக்கப்பட்ட சிற்றிடையினால் ஒடிந்து விழுவதைப்போல் நடக்கும் ஆங்கில ஸ்திரீகளால் ஒடித்து நெருக்கிய அடியினால் தத்தித் தத்தி நடக்கும் சீனதேசத்திய சீமாட்டிகள் நகைக்கப்படுகின்றனர். இரு ஜாதியார்களும் அவரவர்களது வழக்கத்தை அழகென்றே நினைத்துக்கொண்டிருக்கின்றனர். குட்டைப்பெண் ஒரு தேசத்தில் அழகி என்றால் நீண்டு வளர்ச்சியுற்றவள்

வேறோர் தேசத்தின்கண் பெண்மணியாய் விளங்கா நிற்பாள். இம்மாதிரி ஒவ்வொரு அங்க அவயவங்களைப்பற்றிய அழகை எடுத்துரைக்க அநேக பக்கங்கள் வேண்டும்.

தலையில் வளரும் கூந்தல் கருமையாயும் நீளமாயு மிருப்பது இந்தியஸ்திரீகளுக்குச் சௌந்தரியம். அது மிருதுவாயும் செம்பட்டையாயும் சுருட்டையாயுமிருக்கின் ஆங்கிலேயருக்கு லாவணியம் தரும். அது முரடாயும் குறுகலாயும் மைபோலுமிருப்பது நீக்ரோ ஜாதியார்களுக்கு வெகு அந்தமாய்த் தோன்றும். மயிரை முற்றிலும் நீக்கி விடுவதே அண்டமன் ஸ்திரீகளுக்கு அழகினும் அழகாம்.

சரீரத்தின் வர்ணமும் அழகைக் கொடுக்கும். வெள்ளை மனிதர்களை ஆப்ரிக்காவிலுள்ள நீக்ரோக்கள் "வெள்ளைக் குரங்கு" என்று பரிகாசஞ் செய்து, தங்கள் சாந்து வர்ணத்தைப் புகழ்ந்து சொல்கின்றனராம். ஜூலு ஜாதியார் அரசனைப் புகழ்ந்து பாடுங்கால், முதலில் "கருமைவண்ணா" என ஆரம்பிக்கவேண்டும். ஜாவாவில் மஞ்சள் நிறமுள்ள பெண்ணை ரம்பையெனக் கொண்டாடு கின்றனர். இந்தியாவில் எலுமிச்சம் பழம்போல் உள்ளவள் என வர்ணிப்பது நமக்குத்தெரியும். காப்பிக்கலர், சாக்லேட் கலர், என்ற வர்ணமுடைய நீக்ரோக்கள் நிலக்கரி வர்ண நீக்ரோக்களுடன் சகவாசமும் செய்ய விரும்புவதில்லை. வெள்ளை வர்ணமுள்ள ஐரோப்பியர்கள் கறுப்புவர்ணமுள்ள வர்கள் அருகிலும் நிற்கப்பிரியப்படார். ஒரு கால் அருகில் நிற்க நேரிடின் தலையெழுத்தென்றே பொறுத்துக் கொள்ப வர் சிலருளர்.

இயல்பான வர்ணம் திருப்தி கொடுக்காமல் பச்சிலைச் சாற்றால் அலங்கரித்துக் கொள்கின்றனர்



சில மானிடர்கள். சில ஜாதியார்கள் வெள்ளை மண்ணையும் சிகப்பு மண்ணையும் தடவிக்கொள்கின்றனர். இவ்வித வர்ணமுற்ற மைகளைப்பூசிக் கொள்கின்றனர் சில தேசத்தார். ஆனால் வாசனைத்தூள்கள், வெள்ளைமாவுகள் முதலியனவைகளை முகத்தில் தூவிக்கொள்வது நாகரிக மென நினைக்கின்றனர் சிலர். இது நிற்க, உடலை யலங் கரித்துக் கொண்டு அழகு செய்துகொள்வதும் உலக வழக்கம். பிறவியிலேயே அழகு வாய்ந்திருப்பதுதான் நலம். மற்ற விதமாய் உடை ஆபரணம் வர்ணப்பூச்சு முதலியவை களால் உண்டாக்கி கொள்ளும் அழகு கிருத்திரமம் (artificial) ஆகும் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள் வார்கள். ஆயினும் சாமானிய உடைகளை நீக்கி விசேஷ உடைகளையும் விசேஷ நகைகளையும் அணிந்துகொண்டே எக்காரியத்தையும் முன்னிட்டு வெளிக் கிளம்புகின்றனர் பெரும்பான்மையோர்.

உடலில் தழும்புகளை உண்டாக்கிக் கொள்வதும், பச்சை குத்திக்கொள்வதும், பற்களைத் துளைத்து, வெள்ளி தங்கம் இவைகளால் சிங்காரிப்பதும், காது மூக்குகளைத் துளைத்துக் கொள்வதும் உடலுக் கலங்காரங்களென்றே கொள்ளப்படுகின்றன.

உடலை யலங்கரித்துக்கொள்ளும் மனோபாவதத்து வம் யாதென விசாரிக்கின், அதற்கு மூலாதாரம் விவாக இச்சையென டார்வின் முதலிய விவேகிகள் சொல்லியிருக் கின்றனர். அலங்கரித்துக்கொள்வதனால் அழகு வாய்க்கின் றதென்றும் அழகினால் ஸ்திரீ புருஷ வசியம் ஏற்பட்டு விவாக மனோபீஷ்டம் நிறைவேறுமென்றும் சொல்லப் படுகின்றன. வடமொழியில் " சிருங்காரம் " என்பதற்குப்

பொருள் விவாக இச்சை யென்பதாயினும் அலங்கரித்துக் கொள்வதைச் சிங்காரித்துக்கொள்வதென்றும் அழகாயிருப்பதைச் சிங்காரமாயிருக்கின்றதென்றும் நாம் வழங்குகிறபடியால் அலங்காரம், அழகு, விவாக இச்சை இம்மூன்றும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவைகள் என்று நன்கு புலப்படுகின்றது.

தனத்தை முதற்காரணமாய்க் கொண்டு கலியாணம் முடிப்பதும் ஒருவழியே. நாகரிக தசையிலில்லாதவர்கள் பெண்ணை விற்கின்றனர் என்பது தெரிந்தவிஷயம். இந்தியாவில் பிதாவுக்குப் பணங்கொடுத்து அவன் பெண்ணை மணம்புரிந்து கொள்ளும் வழக்கத்தை ஆசுரம் என்று ஸ்மிருதிகள் விதித்திருக்கின்றன. ஆனால் பிதாவுக்குக் கோதானம் செய்து பெண்ணைக் கொள்வதற்கு ஆர்ஷம் (அதாவது ரிஷிகள் முறை) என்று பெயரிடப்பட்டிருக்கின்றது. ஆபிரிக்காவில் சில நீக்ரோக்கள் பிதாவுக்கு மாடுகளைக் கொடுத்துப் பெண்ணைக் கொள்ளல் முறையாகும். ஆனால் அவ்விடத்தில் தகப்பன் தன் பெண்களை வலுவில் கட்டாயப் படுத்தித் தூராகிருதமாய் ஒரு புருஷனுடன் அடித்துத் துரத்துவதுமுண்டு. எங்ஙனமாயினும் பெண்களை விற்றுப் பணம் வாங்குகிறவனை மாம்சவிக்கிரயஞ்செய்பவன் என இந்து சாஸ்திரம் தூஷிக்கின்றது. இதுநிற்க, இக்காலத்தில் மணமகனை விலைக்குவாங்குகிற வழக்கம் பெருகிக் கொண்டுவருகின்றது. இக்கிரயம் வரசுல்கமெனப் பெயரிடப்பட்டுப் பாபமென விலக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் இது இப்பொழுது வரதக்ஷிணை என நாம மளிக்கப்பட்டு நம் நாட்டில் பரவிவருகின்றது.



தனவான்களுடைய பெண்ணை அவர்களது பொருளை எதிர்பார்த்து அழகில்லாவிடினும் குணமில்லாவிடினும் சிலர் மணந்துகொள்கின்றனர். பெற்றோர்களே விவாகம் நிச்சயிக்கும் வழக்கத்தில் சொத்தைப்பற்றியே முதற் கவனம் உண்டாகும். வரன்தேடும் விஷயத்தில் பெண்ணின் தகப்பன் வித்தையையும் தாய் தனத்தையும் மகள் வயதையும் ரூபத்தையும் பந்துக்கள் குலத்தையும் இதரர்கள் விருந்தையும் கோருவார்கள் என்பது பழமொழியாகும். அன்பினால் தானே ஜோடி தேடிக்கொள்ளும் ஜாதியர்களும் தனத்தைப் பின்பற்றியே மனைவியைத் தொடர்கின்றனர் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை

மேற்கூறியவைகள் அல்லாமல் நம் நாட்டில் பால்ய விவாகம் என்பது பிராமணர்களுக்குள்ளும் அவர்களது ஆசாரத்தை யனுஷ்டிக்கும் சில ஜாதியார்களுக்குள்ளும் வழங்கிவருகின்றது. இதைப் பற்றிய வியவகாரங்களை கண்டுக் கவனிக்க அவகாசமில்லை. விவாக இச்சை நிறைவேற்றுவதில் மானிடர் முன்னேற்றம் யாது என்கிற விஷயத்தை விசாரிக்கப்புகின் அவர் நடாத்தும் இல்வாழ்க்கை நம்முன் தோன்றுகின்றது. அதை அடுத்த வியாசத்தில் கவனிப்போமாக.

---

## (9) இல்வாழ்க்கை

இல்வாழ்க்கையாவது "இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு." இல்லாளெனப்படுவள் விவாகவரை முறைப்படி கணவன் பாலடைந்த பெண்மணியாவள். விவாகவரை முறை யென்பது பல்வித தேசாசாரம்,

ஜாதியொழுக்கம், அரசாங்க சட்டதிட்டம் ஆகிய இவை கட்டுப்பட்டதாகும். இனவரைமுறை, வயதளவு, கால நிர்ணயம், சடங்குமுறை, விவாகநன்னெறி ஆகிய விதிகளால் யார் யாரை எக்காலத்தில் எவ்வாறு மணம்புரிந்து கொள்ளல்தகும் என்பது மானிடாது நல்வாழ்க்கைக்குரிய வழியாகும்.

இப்பிரபஞ்சத்தில் காணப்படும் விவாக நடவடிக்கைகளைப் பார்க்கின் ஒரு தேயத்தில் நல்ல முறையெனக் கொண்டாடப் படுவது வேறொரு தேயத்தில் பெருங்குற்றமாகும். ஆபிரிக்காவிலுள்ள சில நீக்ரோ இனத்தலைவர்கள் அவர்களுக்குத் தங்கை முறையிலுள்ளவர்களை யெல்லோரையும் விவாகம் செய்து கொள்வது அவசியமாகும். அராபியர்களது ஆசாரத்தைப் பற்றியவர்களுள் இரு சகோதரர்களுடைய மக்கள் மணம்புரிந்து கொள்வது சகஜம். ஆங்கிலேயர்களுள் இரு சகோதரிகளுடைய மக்கள் மணம்புரிந்து கொள்ளலாம். ஆனால் இந்துக்களில் தங்கை முறையெனச் சந்தேகத்திற்கு சிறிது இடமுண்டாயினும் கலியாணஞ் செய்து கொள்வது கொடும் பாவமாகும். இதனால் குருவின் மகளைச் சிஷியன் விவாகம் செய்துகொள்ள இச்சிப்பது நரகத்திற்கிடமாகும் என இந்துசாஸ்திரங்கள் கூறுகின்றன.

இந்தியாவில் ஜாதிவித்தியாசம் ஏற்பட்டிருக்கின்றமையால் ஒரு ஜாதிக்குளுள்ளவர்களுக்கே விவாகம் நடைபெறவேண்டும். இப்பொழுது இந்நாட்டில் ஏற்பட்டிருக்கும் தொள்ளாயிரம் ஜாதி வித்தியாசங்களுள் ஒவ்வொரு சிறிய வித்தியாசத்திலுட் பிரிவடைந்தவர்களும் அவர்கள் தங்கள் வகுப்பிலேயே பெண் தேடிக்கொள்ளவேண்டும். மேலும்



பிராம்மணர்களில் கோத்திர தாயாதிகளும், சபிண்டர்களும், ஒரே பிரவரமுள்ளவர்களும் விவாகம் செய்துகொள்ளக்கூடாது.

ஆஸ்டிரேலியா முதலிய சில விடங்களில் டோடம் எனும் பாகுபாடு ஒன்றுண்டு. சிலர் டோடத்திலுள்ளவர்களே கலியாணஞ் செய்துகொள்ள வேண்டு மென்பர். சிலர் தமக்கு வேற்றுமையான டோடத்திலேயே சம்மந்தம் செய்துகொள்ளவேண்டு மென்பர். ஆங்கிலேயர்களுடைய சட்டப்படி இறந்துபோன மனைவியின் சகோதரியை மணஞ்செய்துகொள்ளக் கூடாது. ரக்த சம்பந்தத்தினல் சமீபபாத்தியத்தைக் கொண்டும் இனப்பாகுபாட்டை முன்னிட்டும் விவாக விதி விலக்குகள் கூறப்படுவதுமன்றி சில தேசங்களில் செல்வத்தினல் உயர்வு தாழ்வுற்றவர்களுள் ஒருவர்க் கொருவர் சம்பந்த முண்டாகாது. டஹிடி, பிரேஜில், மலாயத்துவீபகல்பம், முதலிய இடங்களில் உயர்ந்த நிலைமையி லிருப்பவன் தாழ்ந்த நிலைமையி லிருப்பவன் மகளை விவாக முறையாய்க் கலியாணஞ் செய்துகொள்ளக் கூடாது. கி. மு 5 வது நூற்றுண்டு வரை ரோமாபுரியில் இவ்வித வித்தியாச மிருந்தது என்பது பல உதாகரணங்களால் நமக்குத் தெரியும்.

மத வித்தியாசங்களினலும் விவாக நிர்ப்பந்தங்களுண்டு. ஏனெனின் இந்து மதப்படி ஒருவன் அனேக மனைவிகளைக்கொள்ளலாம்; மகம்மதியர் நான்கு மனைவிகளைக் கொள்ளலாம் ; கிறிஸ்தவர்கள் ஒரே மனைவியுடன் தான் வசிக்கவேண்டும். இவர்களுடைய மணச் சடங்கு முறைகளும் வித்தியாசப் படுகின்றன. ஆதலால் மத வித்தியாச முடையவர்களுள் விவாகம் ஏற்படுவது

சமாதானத்திற் கிடமல்ல. இத்தகைய சங்கடங்களை இன்று நாம் இவ்வுலகில் காண்கின்றோம்.

சிலவிடங்களில் பெயர்களும் விவாகவிதிகளில் ஒன்று. கிரீன்லாண்டில் ஒரே பெயருடைய இருவர்களுக்கு விவாக சம்பந்தம் கூடாது. இந்தியாவில் சில ஜாதியார்கள் பெயர்ப் பொருத்தம் என்பதையும் கவனிப்பதுண்டு. அது சரியாயில்லாவிடின் விவாகம் செய்யக்கூடாது. இம்மாதிரியான விதிவிலக்குகள் பல்லாயிரம் உலகத்தில் காணலாம்.

விவாகவயதளவும் வரன்முறைக் குட்படுத்தப்பட்டிருக்கின்றது. ஹிந்துக்களுள் இல்லாள் கணவனினும் வயதில் குறைந்தவளாயிருக்கவேண்டும். இது சரீர சாஸ்திர விதிப்படி ஏற்படுத்தப்பட்டதாயினும் பாலிய விவாகம் நடத்தும் ஜாதியார்கள்ஒருமாதம் வித்தியாசமிருந்தாலும் போதுமெனக் கருதி அயுக்தமான தம்பதிகளை உண்டாக்குகின்றனர். இதைப்போல் அறிவீனம் என்ன வேண்டும்? கலியாணத்திற்குக் காலநிர்ணயம் என்பது ஜோஸியத்தில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு முக்கியமானது. நல்ல நாள், சுபமுகூர்த்தம், கலியாணமாதம், என்பவைகள் கிரகங்களினாலமைக்கப் பெற்றவை. குளிகன், ராகுகாலம், சனிக்கிழமை முதலியவை சுபத்திற்கு ஆகாத காலங்களென நீக்கப்படுகின்றன. இம்மாதிரியான வழக்கம் ஆசியா கண்டத்தில் அநேகநாடுகளில் காணப்படுகின்றது.

அமெரிக்காவில் லோயர் காலிபோர்னியாவிலுள்ள சுவதேசிகளுக்கு விவாகமென்பதே தெரியாது. அதற்குப் பதமுங்கிடையாது. அவர்களைத்தவிர இதரஜாதியார்களுள் மணச்சடங்கு பல்விதமாய் நடைபெற்று வருகின்



றது. சிலஜாதியார்களில் முதன் முதலில் நெருப்புக் கடைந்து அதைப் பற்றவிட்டு இருபுறத்திலும் ஸ்திரீயும் புருஷனும் உட்கார்ந்துகொள்வது வழக்கம். இந்துக்களில் அக்கினி மூட்டி ஹோமம் செய்து அதைவலம்வந்து சத்தியஞ்செய்து அக்கினி சாக்ஷியாய்த் தாலிகட்டுவது வழக்கம். நீலகிரியிலுள்ள தோடர்களில் மணமகள் புருஷன் வீட்டிற்குள் புகுந்து வேலையைத் துவக்குவது விவாகச் சடங்காம். நியூகினியில் வதூவரர்கள் வெற்றிலைப் பாக்கும் புகையிலையும் மாற்றிக் கொள்வது தான் முக்கியச் சடங்கு. அண்டமன்தீவில் இனத்தாரின் முன்னிலையில் மணமகன் துடையின் மேல் மணமகள் கால்களைக்குறுக்காயிட்டுக் கொண்டிருக்க விருந்துகள் நடைபெறின் விவாகம் முடியும்; தென்னிந்தியாவில் ஜோலார்ப்பேட்டைக்கருகாமையிலுள்ள ஏலகிரியில் மலையாளர்கள் பெண்ணையும் பிள்ளையையும் ஒருகயிற்றுக் கட்டிலில் உட்காரவைத்து அவர்களது பந்துக்கள் கட்டிலைத் தூக்கிக் கொண்டு ஆட்டி அசைத்துக் குலுக்கிக் குலதெய்வத்தைச் சுற்றிவரவேண்டும். அந்தஜாதியாருக்கு இவ்வாறு கட்டில் குலுக்குவது தாலிகட்டுவதற்குச் சமானம். மோதிரம் மாற்றிக்கொள்வதென்பது ஐரோப்பியர்களது விவாகம்.

விவாகச் சடங்குகளில் முக்கியமான கால அளவும் ஸ்திரீதனங்களும் விருந்துகளும் விசித்திரம் விசித்திரமாய் ஒவ்வொரு ஜாதியாருக்கும் வெவ்வேறு விதங்களாயிருக்கின்றன. பஸிபிக் மகாசமுத்திரத்திலுள்ள சிலதீவுகளில் விவாகமான ஒரு மாதம்வரையிலும் சடங்குகள் நடைபெற்று வருகின்றனவாம். பன்றியைக் கொன்று விருந்தளிப்பது தான் உத்தமமான சடங்கு. பர்மா தேசத்தின்சனு

ள்ள சில ஜாதியார்கள் எட்டு நாள் இரவும் பகலும் ஆட்டம் பாட்டம் நாடகங்களுடன் விருந்திட்டு விவாக விழாவைக் கொண்டாடுகின்றனராம். நம் நாட்டிலும் அநேக தினங்கள் விவாகம் நடத்துவதுண்டு. ஐரோப்பாவில் மணம் முடிந்து மாதாகோவிலுக்கு வெளியே வந்தவுடன் மணப் பெண் மணப்பிள்ளைகளின் மேல் அக்ஷதைகள் போடுகின்றனராம். பழஞ்செருப்புகளையும் எறிவதுண்டாம்.

விவாக நன்னெறி கால தேசத்துக்குத் தக்கவாறு வித்தியாசமடைந்திருக்கின்றது. பஸிபிக் மகாசமுத்திரத்திலுள்ள பல தீவுகளிலும் ஆபிரிக்காவில் சில பாகங்களிலும் ஒருவன் பல ஸ்திரீகளை மணம் புரிந்துகொள்ளலாம். ஆபிரிக்காவிலுள்ள ஆண்சிங்கங்களில் ஒவ்வொன்றும் பல பெண் சிங்கங்களுக்கிடையில் வசிக்கின்றதாம். இந்தியாவில் ஹிந்துக்கள் சட்டப்படி ஒரு புருஷன் சம காலத்தில் கணக்கில்லாமல் பல மனைவிகளைக் கொள்ளலாம். மகம்மதியர்கள் நான்குஸ்திரீவரையும் கலியாணஞ் செய்து கொள்ளலாம். கிறிஸ்தவர்கள் சம காலத்தில் ஒருமனைவியுடன் அல்லது ஒரு கணவனுடன் தான் வாழ வேண்டும்.

பிராடெஸ்டண்டு கிறிஸ்தவ தம்பதிகள் சட்டப்படி பிரிந்து கொண்டால் மறு விவாகஞ் செய்து கொள்ளலாம். ரோமன் காதலிக்தம்பதிகள் அங்கனம் பிரிந்திடினும் ஒருவர் இறந்தபிறகு தான் எஞ்சியவர் விவாகஞ் செய்து கொள்ள வேண்டும். மகம்மதியர்களும் விவாக நீக்கத்தை அனுஷ்டிக்கின்றனர். ஹிந்துக்களுள் விதவைகள் மணம் புரிந்து கொள்ளக்கூடாது. ஆனால் பெண்டீரையிழந்தவன் கணக்கின்றிக் கலியாணஞ் செய்து கொண்டு வாழலாம்.



ஒரு ஸ்திரீ பல புருஷர்களை விவாகம் புரிந்து கொண்டு இல் வாழ்க்கையிலிருப்பதென்கிற ஆசாரம் திபெட்டிலும் நமது நாட்டில் மலையாளப் பிரதேசத்திலும் நடைபெற்று வருகின்றது. அநேகமாய் ஒருகுடும்பத்திலுள்ள சகோதர்கள் ஒரு ஸ்திரீயை விவாகஞ் செய்து கொள்வது நியாயமென நினைக்கின்றனர். மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர்கள் துரௌபதியை மனைவியாய்க் கொண்டிருந்தனர் என்று சொல்லப் பட்டிருக்கின்றது. ஆனால் இந்த ஒரு உதாரணத்தைத் தவிர வேறு காண்பதரிது.

விவாகஞ் செய்து கொண்டு இல்லற வாழ்க்கையிலிருப்பதன் பயன் யாதெனின் மேனோக்காய்ப் பார்க்கின் சரீர சௌக்கியமும் குடும்ப வாழ்க்கையினால் தோன்றும் பரஸ்பரசகாயமும் எனலாம். சரீரம் வியாதி மூப்பு முதலிய துன்பங்களுக் கிடமானது. ஆகையால் அம்மாதிரியான தருணங்களில் பிறருதவி அவசியம் தேவை. அத்தருணங்களில் கணவன் மனைவிக்கும் மனைவி கணவனுக்கும் உதவுவது போல் யாவர் உதவுவார். மேலும் ஸ்திரீயும் புருஷனும் விவாக இச்சையை நிறைவேற்றுவதனால் குழந்தைகள் தோன்றுகின்றன. அவைகளும் வயது வந்தவளவில் பெற்றோருக்கு உதவியாயிருப்பது மாந்தர்குலத்தியல்பு. குடும்பமாய் வாழும் குரங்கு ஜாதியிலும் அவற்றின் சந்ததிகள் அவற்றிற் குதவியாயிருக்கின்றனவென்று சொல்கின்றனர் சிலர்.

இது நிற்க, மானிடர்களில் அநேக ஜாதியார்கள் தாங்களிறந்த பிறகு தங்களுக்குச் சில சடங்குகள் செய்யப் பட்டாலன்றித் தங்களாவி சுகமடையாதெனவும் அச்சடங்குகள் தங்கள் புத்திரர்களால் செய்யப்படுவது உத்தம

மென்றும் நினைக்கலாயினர். புத்திரன் என்கிற மொழி 'புத்' என்கிற ஒரு நரகத்தினின்றும் காப்பாற்றுகின்றவன் எனப் பொருள் தருகின்றது. இவ்வெண்ணத்திற்கு மூலகாரணம் பலவிதமாய்க் கூறப்படும். மேலும், இல்லற நிலையே உலகத்தாருக்கு நலம் பயக்கக் கூடிய நிலைமையென்பது நம் நாட்டில் பறையடிக்கப்பட்டிருக்கின்றது. நம் நாட்டில் ஆசிரம தர்மங்கள் தொன்று தொட்டு வழங்கி வந்திருக்கின்றன. பிரம்மசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்கிற நான்கனுள் இல்லறமாகிய இரண்டாவது ஆசிரமத்தின் பயன்

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை" என்பதனான் நன்கு

விளங்கும். அதற்கவசியமான துணை இல்லாளென்பது

"மனைமாட்சியில் லாள்கணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினுமில்" என்பதனான் நன்கு

புலப்படும்.

"எழுபிறப்புந் தீயவை தீண்டாபழிபிறங்காப்
பண்புடை மக்கட்பெறின்" என்ற குறள் புதல்

வரைப் பெறுதலின் பயனைக் காட்டும். அன்புடைமை, விருந்தோம்பல், இனியவைகூறல், செய்ந்நன்றியறிதல் முதலிய தர்மங்களைச் செவ்வனே நடத்துவதே இல்வாழ்க்கையின் இறுதிப் பயனாகும். முடிவாய் 'இல்லறமல்லது நல்லறமன்று" என்ற வசனமே இல்வாழ்க்கைச் சிறந்ததென்பதற்குப் போதுமான உறுதிமொழியாகும்.

விவாக விஷயத்தில் மானிடர் முன்னேற்றம் யாதென விசாரிப்பது இனி நமது கடமையாகும். இதர ஜீவராசிகளினின்று மானிடரைப் பிரித்துக் காட்டும் அநேக வித்தியாசங்களுள் விவாக நன்னெறியு மொன்று. மிருகங்கள் யாதொருவித யோசனையுமின்றி ஜதைபிட்டுக்கொள்கின்றன. ஒருகால் மனிதனு மங்ஙனமே யிருந்திருப்பினும் வெகுசீக்கிரத்தில் குடும்ப வாழ்க்கையின் சுகத்தைக் கண்டு கொண்டு குழந்தைகளுடன் ஒன்றாய்க் குடியிருக்க ஆரம்பித்திருக்கவேண்டும். ஒன்றாய்க்கூடி வசித்துக்கொண்டிருக்கும் ஸ்திரீ புருஷர்கள் சண்டையிட்டுக்கொண்டு கஷ்டமின்றி விவாகநீக்கம் செய்துகொள்ளும் வழக்கம் ஐரோப்பாவில் அநேக நூற்றாண்டுகளாய்ப் பரவியிருந்ததென்பதற்குக் கிறிஸ்தவ மதஸ்தர்கள் "விவாகம் மதவிஷயமென்றும் கடவுளது முன்னிலையில் செய்யப்படும் சத்தியமென்றும் சுலபமாய் நீக்கப்படக்கூடியதல்ல"வென்றும் பலவாறாய்ப் போராடநேரிட்டதையேஉதாகாரணமாய்க் கூறலாம். ஹிந்து சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் பாதிவிரத்திய தர்மத்தைப்பற்றிய விதிகளால் எத்துணைவிதமாய் விவாகவிஷயமாய்ச் சண்டை சச்சரவுகள் நேரிடக்கூடும் என்பதையும் நாம் தெரிந்துகொள்ளலாம். அநேக அனுபவங்களால் மானிடர்கள் விவாக முறைகளையும் விதிகளையும் ஏற்படுத்திக்கொண்டு ஸ்திரீகளும் புருஷர்களும் நன்னெறியுற்றவர்களாயிருக்கவேண்டுமென விதிகள் ஏற்படுத்திக்கொண்டதும் மானிடர் முன்னேற்றத்தைக் காட்டுவதாகும். விவாக நன்னெறியின் விதிகள் பலவிதங்களாய்க் காணப்படுகின்றன. தக்க காரணங்களை முன்னிட்டே விவாகநீக்கம், புனர்விவாகம், ஒருவன் சமகாலத்தில் பல மனைவியரை மணத்தல், ஒருஸ்திரீ சமகாலத்தில் பல கணவர்களை மணத்தல் என்னும் விஷயங்களை ஒவ்வொரு ஜாதியாரும் தத்தம் மனோபாவத்திற்குத் தக்கபடி அமைத்துக்கொண்டிருக்கின்றனர்.

இவைகளுக்குக் காரணங்களைக் கண்டுகொள்ளக் கூடிய பல ஆராய்ச்சிகள் மேனாட்டார்களால் செய்யப்பட்டு வருகின்றன. ஒருவன் பல ஸ்திரீகளை மணம்புரிவது ஸ்திரீகள் அதிகமான நாடுகளில் என்றும், ஒரு ஸ்திரீ பல புருஷர்களைக் கொள்வது ஸ்திரீகள் குறைவான நாடுகளில் என்றும் பலவாறாய்ப் பிதற்றுவது சிலருக்கு வழக்கம். திபெட்டிலுள்ள ஸ்திரீகளை அவற்றிற்குக் காரணங் கேட்டால் ஒரு ஸ்திரீக்குப் பல புருஷர்கள் இருந்தால் ஒரு புருஷனிறந்தாலும் இன்னொருவன் அசிரத்தையாயிருந்தாலும் தங்களுக்குக் குறைவிராதென்றும் தம் மக்களைப் பலர் காப்பாற்றக் கடமைப்பட்டவர்களாவரென்றும் கூறுகின்றனராம். ஒரே சமயத்தில் ஒருவர் ஒருவரை மணம்புரிவது தான் உத்தமமென்பதற்கையமில்லை என்பதை நம் தேயத்தில் "ஏகதாரவிரதம்" என்று புகழப் படும் வசனத்தால் தெரிந்துகொள்ளலாம்.

மேலும் கற்பெனும் நன்னெறிக்கு ஒவ்வொரு ஜாதியார் ஒவ்வொரு அளவை (Standard) ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். விவாகம் ஆகும்வரை ஸ்திரீகளுக்குக் கற்பு முறை ஒன்றென்றும் விவாகம் ஆனபிறகு கற்பு முறை வேறென்றும்நினைக்கும் சில வகுப்பினர்களுமிருக்கின்றனர். அண்டமன் தீவில் விவாகமானவர்கள் கற்பை வெகு சுத்தமாய்க்காப்பாற்றுகின்றனர். அநாகரிக நிலைமையிலுள்ள பிஜியர்கள் (Fijians) விவாகநன்னெறிக் காதாரமான பாதிவிரத்தியத்தை நன்றாய்க் காப்பாற்றுகின்றனர். நம் நாட்டிலுள்ள குருவிக்காரர்கள் முற்றிலும் கற்புநிலைமையிலுள்ளவர்களெனப் புகழப்படுகின்றனர். இந்தியாவில் ஸ்திரீகள் பரபுருஷர்களுடன் ஒழுங்கீனமாய் நினைத்தவாறு



சம்பாஷிக்கக் கூடாது. கண்ணெடுத்தும் பார்க்கக்கூடாது. ஆனால் மேனாட்டார்கள் ஸ்திரீகளுக்குச் சர்வ சுவதந்திரமும் கொடுக்கவேண்டுமென்றும் அவர்கள் எப்புருஷனோடும் சகஜமாய்க் கைகுலுக்கி வார்த்தையாடலாமென்றும் தனிமையாய் எவ்விடத்திற்குஞ் செல்லலாமென்றும் கருதுகின்றனர். இங்ஙனமில்லாதவர்களை அவர்கள் அநாகரிகர்கள் என்பர். இந்தியர்களுக்கு விவாக நீக்கமென்பது அநாகரிகமெனத் தோன்றுகின்றது. ஆனால் ஒரு புருஷன் ஒரு ஸ்திரீக்கு ஜீவனாம்சம் கொடுத்துவிட்டுத் தான் வேறு மனைவியைக் கொள்ளலாமென்றும் மனைவி யிறந்தால் வேறு மனைவியைக் கொள்ளலாமென்றும் ஆனால் பெண்டுகள் புருஷனை நீக்கி வேறு ஒருவனை மணம்புரியக் கூடாதென்றும் புருஷன் இறந்த பிறகும் அவர்கள் விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்றும் கூறுவது நியாயமா? என்ற கேள்விக்கு விடைகூறுவது மிகக் கடினம். தற்காலத்தில் விதவா விவாகம் இரண்டொன்று நடந்துகொண்டு இருப்பது மானிடர் முன்னேற்றமா? என்ற கேள்விக்கு பதில் ஆசாரச் சீர்திருத்தத்தார் "ஆம்" என்பர். வர்ணாசிரம தர்மிகள் "அல்ல" என்பர். மேனாட்டார் விதவா விவாகத்தை மானிடர் முன்னேற்றமென்பர்.

பால்ய விவாகம் பெருந் தீங்குகளை விளைக்கின்றதென நம் நாட்டவர்கள் தற்காலந் தெரிந்துகொண்டிருப்பது நம் முன்னேற்றமாகும். ஆனால் இவ்விஷயத்தில் நாம் இன்னும் முன்னேற்றம் அடையவேண்டியிருக்கின்றது. நமது சாஸ்திர முறையாய் இந்தியர்கள் சரியான பிரம்மசரியம் நடத்திய பிறகு விவாகஞ் செய்துகொண்டால் பால்ய

விவாகம் என்ற விஷயத்தில் ஆண்மக்களாவது தக்க வயது வந்தபிறகு மணம்புரிந்துகொள்ள நேரும். தற்காலத்தில் மணமகன் மணமகள் இருவரும் சிறுவர்களாயிருக்குங்கால் வயது வித்தியாச மதிகமின்றி மணஞ்செய்விக்கப் படுகின்றனர். ஸ்திரீகளுக்குந் தக்க வயது வந்தபிறகுதான் முற்காலத்தில் விவாகம் நடந்தேறி வந்தது என்பது பல நூல்களால் வெளியாகின்றது. இதற்கு ருதுமதி விவாகம் எனப்பெயர். தற்காலத்தில் நம்நாட்டில் ஸ்திரீகளுக்குத் தக்க வயது வருமுன் சம்சாரபாரம் வகிக்க நேரிடுகின்றமையால் அவர்கள் ஸந்ததிகள் பலஹீனர்களாய்க் க்ஷீணதசையை யடைய நேரிடுவது மன்றி பெண் கல்விக்கும் இவ்வழக்கம் பெரிய இடையூறாம். ஆகலால் தக்க வயது வந்தபிறகுதான் விவாகம் நடைபெறவேண்டுமென்கிற எண்ண முண்டாயிருப்பதும் அவ்வெண்ணத்தை நிறைவேற்ற முயல்வதும் அதை யனுஷ்டிப்பதும் மானிடர் முன்னேற்றமாகும்.

---

## (10) பிழைக்கும் வழி.

நம் வாழ்நாட்களை நடத்த நாம் யாதேனும் ஒரு தொழில் செய்யவேண்டிய தவசியமாகும். ஒருகால் ஒரு தொழிலுஞ் செய்யாமல் ஜீவனஞ் செய்பவர்களிருக்கலாம்; அன்னையோர் லக்ஷத்திலொருவர் என்றே சொல்லவேண்டும். அவர்களை ஆங்கிலர்கள் சோம்பேறிச் சுரும்பர் (Drone) என்பர். அவர்களை நீக்கி எஞ்சிய யாவரும் அவரவர்களின் [illegible]மைக்கும் புத்திக்கும் சாமர்த்தியத்திற்கும் தக்கவாறு உழைத்தே தீரவேண்டும்.



இயற்கை வாழ்க்கையில் தங்கியிருக்கும் மாக்களும் வேட்டையாடி உண்கின்றனர். இப் பிரபஞ்சத்திலுள்ளவர்களுக்கு யாதும் தானாய் வாயில் வந்து விழாது. கீழ் வீழ்ந்திருக்கும் பழவர்க்கங்களையும் பொறுக்கித்தான் தின்னவேண்டும். கிழங்குகளேயாயினும் தோண்டி யெடுத்தே புசிக்கவேண்டும். பண்டைக்காலத்தில் மானிடர்கள் பெருகப் பெருக வேட்டையாடிய உணவு போதாமல் இயற்கையிற் கிடைத்த தானியங்களை யுண்டு அவைகளும் போதாமல் நிலத்தை யுழுது பயிர் செய்த பலனைக் கொண்டு ஜீவனஞ் செய்யத் தொடங்கினர். அப்பொழுது வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் ஒன்றன் பின்னொன்றாய்த் தோன்றிட அவைகளை உற்பத்தி செய்யத் தொடங்கினர்போலும். தானியங்களை யுற்பத்தி செய்யுந் தொழிலுக்குச் சாதனமான துணைக் கருவிகளைக் கண்டு பிடித்து அவைகளைச் செய்ய வேண்டியதோர்பால் நிற்க உடைகள், ஆபரணங்கள், ஆயுதங்கள், பாத்திரங்கள் முதலியவைகளைச் செய்துகொள்ளக் கைத்தொழில்கள் தோன்றலாயின. இங்ஙனம் ஜீவனோபாயங்கள் உலகில் பெருகலாயின வெனலாம்.

ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய பொருள்களைத் தாமே பிறருடைய சகாயமின்றிச் செய்துகொள்வதென்பது ஜனசமூக மதிகமான தருணத்தில் சாத்தியமன்று. பண்டைக்காலத்தும் ஸ்திரீகளும் புருஷர்களும் தனித்தனி ஒரு வேலைசெய்தே குடும்ப வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஜன சமூகவாழ்க்கை முதிர்ந்தகாலத்தில் ஜீவனத்துக்கு வேண்டிய பொருள்கள் அதிகந் தோன்றியதாலும் எல்லாப் பொருள்களும் எல்லாத் தேசங்களிலும் விளையாமையாலும்

மாற்றுப் பொருள்களைக் கொண்டு தேவையானவற்றை வாங்கத் தொடங்கிய தருணம் வியாபாரத் தொழில் தோன்றிற்றெனலாம். இதற்குச் சாதனமான போக்கு வரவுக்குரிய மார்க்கங்களும் பண்டிகளும் புகை வண்டிகள் நீராவிக்கப்பல்கள் ஆகாயவிமானங்கள் முதலிய யானங்களும் விருத்தியாயின. இன்றும் அவைகள் விருத்தியாய்க் கொண்டே நிற்கின்றன.

இவைகள் தவிர சற்றேறக்குறைய எல்லா ஜாதியார்கட்கும் பொதுவான உணர்ச்சியொன்றுண்டு. இவ்வுணர்ச்சியினால்தான் மானிடர் இதர ஜீவராசிகளுள் மேன்மையுற்றவரெனப்படுகின்றனர். இது காரியகாரணம் எனும் பிரஞ்ஞையினால் உண்டாகக்கூடியது. காரணமின்றிக் காரியமில்லையென்பது மனிதனுக்கு அனுபவசித்த அறிவு. இதனால் இப் பிரபஞ்சம் தானாய் விளைந்ததோ அல்லது எவராலேனுஞ் சமைந்ததோவென்று ஆலோசித்துக் காரணத்தைத்தேடுவது மக்களியல்பு. அநாகரிகன் தனக்கு வியாதியுற்பத்தியாவது ஒரு பிரேதஜீவன் 'அல்லது பிசாசு என்பதனால் உண்டாவதென நினைக்கினும் காரணத்தைத் தேடுமியல்பு மனிதரிடத்திருக்கின்றது என்பது வெளியாகின்றது. இவ்விஷயத்தை வேறோர் வியாசத்தில் விசாரிக்கத் தீர்மானித்து ஒரு விஷயத்தைமட்டில் இங்குக் குறிப்பிடுவோம். அஃதியாதெனின் மானிட வாழ்க்கையில் மத சம்பந்தமான சடங்குகள் தோன்றியகாலத்தில் சில தேசங்களின்கண் அச்சடங்குகளை நடத்தவும் ஒரு தொழில் தோன்றலாயிற்று. இத்தொழிலை இந்தியாவில் அந்தணர் என்போர் நடத்தலாயினர். மேனாடுகளில் குருமார்கள் என்போர்



இத்தொழிலைக் கைக்கொண்டனர். இம்மாதிரி அநேக நாடுகளில் தோன்றியிருக்கின்றனர் என்பதையுங் காணலாம்.

இவைகளைத்தவிர ஜீவனோபாயத்திற்குப் பல்விதவழிகளுள. சில்வாழ்நாளும் பல்பிணியுமுற்ற மாந்தர்களுக்கு வியாதிகளைத் தீர்க்க வைத்தியர்களும் மந்திரவாதிகளும் தோன்றலாயினர். உறைவிடங்களை யமைக்கக் கட்டடவேலைக்காரர்களும் ஆலயங்கள் முதலிய பெரிய வேலைகளை முடிக்கச் சிற்ப சாஸ்திரிகளும் உண்டாயினர். ஜனசமூக வாழ்க்கையில் தங்கினவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் தோன்றுவது சகஜமானதால் நியாயஸ்தலங்களும் நியாயாதிபதிகளும் நியாயவாதிகளும் தோன்றுவதும் சகஜம். ஜனசமூக வாழ்க்கையில் தங்குகின்றவர்கட்கு அரசாட்சி முறை யவசியமானதால் பற்பல உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப் படவேண்டுவதும் அவசியமாம். இவ்விதம் மந்திரிகள் சேனாதிபதிகள், யுத்தவீரர்கள், நகரக் காப்பாளர்கள் முதலிய அநேகர் தேவையானதால் ஜீவனோபாயங்களும் பல தோன்றின.

மேலும் மானிடர்களுக்கு இன்றியமையாத பாஷை, பாஷையபிவிருத்தி, கல்வி, கல்வியபிவிருத்தி ஆகிய இவைகளால் பரவிவரும் ஞானம், அதன்பயனான நூல்கள், இவைகளெல்லாம் ஜீவனோபாயத்திற்குப் பல்லாயிரம் முறைகளைக் கற்பிக்கலாயின. கலைஞானமும் மானவர்களுக்கு இன்றியமையாதது. அதன்வாயிலால் ஆடல், பாடல், சித்திரம் வரைதல் முதலிய பல்விதத் தொழில்கள் தோன்றியிருக்கின்றன. இவைகளையெல்லாம் விவரிக்கப் புகின் விரியும்.

மேற்கண்ட தொழில்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய்த் தனித்தனியாய் ஒரேயிடத்தில் தோன்றிப் பல விடங்களில் பரவினவா? அல்லது ஒவ்வொரு இடத்திலு ஒரேமாதிரியாய் ஒன்றன்பின் னொன்றாய்த் தோன்றின? எம்மட்டில் எத்தொழில் ஒரேயிடத்தில் விருத்தியாயிற்று, எம்மட்டில் வேறிடங்களினின்று பரவலாயிற்று? என்கிற, பல விஷயங்களை ஆராய்ந்து நிர்ணயிப்பது சரித்திர வாராய்ச்சியின் கடனாகும். சரித்திர வாராய்ச்சி நிபுணர்கள் இவ்விஷயங்களில் ஒரேவிதமான நிச்சயத்தை இன்னும் பெறவில்லை.

இனி முக்கிய மான தொழில்கள் எங்ஙனம் மானிடர் முன்னேற்றத்திற் கிடமாயின என்பதை விசாரிப்பாம். ஸ்திரீகளும் புருஷர்களும் ஒன்று கூடிவாழத் தொடங்கி உணவு, உறைவிடம், உடை முதலியவைகளைச் சம்பாதித்துக் குடித்தனஞ்செய்து இல்லற வாழ்க்கையை நடாத்த இருவரும் ஈடுபட்டவராயினும் இயற்கையாய்ப் பெண் மக்களுக்குரிய தொழில்கள் சில ஏற்பட்டு இருக்கின்றமையால் பொதுவாய் நோக்குமிடத்துத் தொழிற் பிரிவினை, பாலைப்பற்றி முதலில் தோன்றலாயிற் றென நினைக்க வேண்டியதா யிருக்கின்றது. இனப்பெருக்கத்திற் கிரு வருங் காரணராயினும் கர்ப்பந் தரித்துப் பத்து மாதஞ் சுமந்து குழந்தையைப் பெற்றுத் தாய் என்ற கடமைக் குட்பட்டவள் ஸ்திரீயானதால் வெளியில் நடத்தப்படும் கஷ்டமான வேலைகளைப் புருஷனும், வீட்டிநில் தங்கிச் சமையல் முதலிய வீட்டு வேலைகளை மனைவியுஞ் செய்வது இயற்கையான தொழிற் பாகுபாடாம். ஸ்திரீகளை அடிமையாக நினைக்கும் ஆடவர்கள் அவர்களிட மிருந்து கடினமான



வேலைகளைக் கொள்கின்றனர். சிலர் தமது வறுமையினாலும் கஷ்ட வேலைக்கு அவர்களை உட்படுத்துகின்றனர். கொரியாவில் (Corea) மத்திய நிலைமையி லுள்ளவர்களும் தம் மனைவிகளை வெளியிலனுப்பிக் கஷ்டமான தொழிலைச் செய்வித்துத் தமக்கு வேண்டும் சுகத்தைப் பெறவேண்டு மென நினைக்கின்றனர்.

வேடர்களாய்த் திரியும் மாந்தர்கள் படுங் கஷ்டங்களை வேறோர் சந்தர்ப்பத்தில் கூறியுள்ளோம். குடும்பங் குடும்பமாய் வாழ்ந்தாலும் ஆகாரத்திற்காக அடிக்கடி அக்கம் பக்கத்தி லுள்ள காடுகளின்கண் தங்கித் திரும்பவேண்டிய கஷ்டத்தினால் குடியும் குடித்தனமுமாய் ஒரே யிடத்தில் தங்கவேண்டிய ஜீவன உபாயங்களைத் தேடலாயினர் எனலாம்.

கடலோரத்திலும் ஆற்றோரத்திலும் தங்கிய வேடர்கள் மீன்களைப் பிடிக்கவேண்டிய உபாயங்கள் தேடிக் கொண்டனர். ஜலத்தில் போகக்கூடிய படகுகளைப் பலவிதமாய்ச் செய்துகொண்டனர். அண்டமன்தீவி லுள்ளவர்கள் மரத்தைக் குடைந்து படகு செய்துகொண் டிருப்பதை இன்றுங் காணலாம். எஸ்கிமோக்களுடைய படகு வெகு நேர்த்தியானது. ஆமஜான் நதிக்கரையி லுள்ளவர்கள் நம் நாட்டவர்களைப் போல கட்டுமரங்களை யின்றும் உபயோகப் படுத்துகின்றனர்.

ரஷியா தேசத்திலுள்ள புற்சமவெளிகளிலும் நிரக்ஷ ரேகைக் கிருபுறத்திலுள்ள காடுகளிலும் இன்றைக்கும் வேட்டையாடுந் தொழிலால் ஜீவனஞ் செய்கின்ற கிராதர்களிருக்கின்றனர். ஆபிரிக்காவி லுள்ள 'பிக்மி' என்றகுள்ளர்களும் "புஷ்மன்களும்" வேடர் நிலைமையில்

காணப்படுகின்றனர். (ஐரோப்பியர்கள் சென்றவிடங்களில் சிலநூற்றாண்டுகளுக்கு முந்திக் காணப்பட்டிருந்த டாஸ்மானியர்கள் என்ற சில வேடஜாதியார்கள் இப்பொழுது நசித்துவிட்டனர்.)

தாமிருந்தவிடத்தில் உணவு போதாமல் வெளியிற் சென்ற வேடர் சந்ததியார் அவ்விடத்தில் கிடைத்த ஜீவனோபாயத்தினால் வாழ்நாட்களை மாற்றிக்கொள்ள நேரிட்டதென்பர் சரித்திராசிரியர்கள். அதாவது காட்டிலுள்ள மிருகங்களிற் சில மனிதருடன் பழகக்கூடிய தசையையடைந்திருந்தமையால் அவைகளைத் தம் வசப்படுத்தி அவைகளினா லளிக்கப்படும் பொருள்களை யனுபவிக்கலாயினர். ஆடுகள் மாடுகள் குதிரைகள் ஒட்டகங்கள் முதலியன அவ்விதப் பிராணிகளுக்கு உதாரணங்களாம். ஆனால் அவைகளைக் காப்பாற்றவேண்டிய கடன் மனிதனையடைந்தகாலத்தில் அவைகளை மேய்த்துக் காப்பாற்ற வேண்டி புல்வெளிகளைத்தேடிச் சென்றமையால் ஆயர்த் தொழில் தோன்றலாயிற்று. மலைச்சாரல்களிலும் ஆற்றோரங்களிலும் சிலர் தங்க நேரிட்டது. அதனால் மனிதர்கள் விருத்தியான காலத்தில் தமதனுபவத்தால் புதிய புதிய தொழில்களைச் செய்யத் தெரிந்துகொள்ள இடமாயிற்று. இப்பூகோளத்தின் வடபாகத்திலுள்ள புற்சம வெளிகளிலும் ஆற்றோரங்களிலும் உள்ளவர்கள் வேடர்களாயும் ஆயர்த் தொழிலாளர்களாயுமிருக்கின்றனர். அவ்விடங்களில் அதிகமாய்க்கிடைக்கும் “ரெயின்டியர்” என்கிற விலங்கினங்களைப் பழக்கி இரு தொழில்களையும் புரிகின்றனர் எஸ்கிமோக்கள்.

ஆசியாவிலுள்ள ருஷிய புற்சம வெளிகளில் மங்கோலி



யர்கள் தமக்குரிய ஆடுமாடுகளைமேய்த்துக் கொண்டு மிக சந்தோஷமாயும் திருப்தி கரமாயும் காலங் கழிக்கின்றனர். ஆடு மாடுகளின் கம்பளங்களை நெய்து கூடாரங்கள் போட்டுக் கொள்கின்றனர். ஒட்டகத்தின் ரோமத்தால் உடுத்திக்கொள்ள, துணிகள் நெய்துகொள்கின்றனர். தோல்களினாலேயே பாத்திரங்களும் படுக்கைகளும் உடைகளும் செய்துகொள்கின்றனர். இவ்வினத்தார்கள் ரத்தினகம்பளங்களும் நெய்து வியாபாரஞ் செய்கின்றனர். இவர்கள் இதுவரையிலும் விவசாயஞ் செய்வதென்னும் விஷயத்தையே தெரிந்துகொள்ளாமல் உணவுப் பொருள்களைத் தங்களிடம் உள்ள பொருள்களினுதவியால் பெற்றுக் கொள்கின்றனர். இவர்களுடைய விருந்துகளில் குதிரை மாம்சம் உயர்ந்த ஆகாரமாம். கூமிஸ் என்கிற பானம் ஒன்றைப் பாலில் தயார் செய்து அருந்துகின்றனர். ஜீவனத்திற்காகத் திரியும் நாடோடிகளான இவர்களது யாத்திரை மிகஅழகானதென்று சொல்லப்படுகின்றது. மழைக்காலங் கழிந்ததும் யாத்திரைக்கு ஆரம்பிக்கின்றனர். குதிரைகள் முதலில் கிளம்பிச் செல்ல அதன் பிறகு மாடுகள் கிளம்பும். அவற்றிற்குப் பின் ஆடுகள் செல்லும். இவ் வினங்களுக் குரிய மனிதர்கள் அவைகளை நடத்திச் செல்வார்கள். இறுதியில் ஸ்திரீகள் தங்கள் தங்கள் கூடாரங்களைப் பிடுங்கிச் சுருட்டிக் கொண்டு சாமான்களைக் கட்டி ஒட்டகங்களின் மேல் போட்டுக்கொண்டு போவார்கள். இக் கூட்டத்தில் தனிகர்கள் குதிரையின்மேல் சவாரிசெய்து தனியாய் யாத்திரை புரிவார்கள்.

யாத்திரை செய்துகொண் டிருக்கையில் ஆங்காங்குத் தங்கிப் பால் கறந்து குடித்துச் சிரம பரிகாரஞ் செய்து

கொண்டும் கதை சொல்லிக்கொண்டும் பாட்டுகள் பாடிக்கொண்டும் நாள்தோறும் பிரயாணஞ் செய்கையில் கோடைக்காலம் விருத்தியான சமயத்தில் நீரூற்றுகளைக் கண்டவிடத்தில் ஆனந்தமாய்த் தங்கிப் பிறகு மாரிக்காலந் திரும்புவதற்கு முன் மங்கோலியாவில் உள்ள சுவஸ்தானத்திற்குத் திரும்புவார்கள். வருஷந்தோறும் குடும்பம் குடும்பமாய் இங்ஙனம் ஒன்றுசேர்ந்து யாத்திரை செய்தாலும் அவரவர்கள் குடும்பத்தாருக்கு உரித்தான ஸ்தானங்களுண்டு. எவ்விடத்தில் முந்திய ஆண்டில் எக்குடும்பத்தார் கூடாரமிட்டுக்கொண்டிருந்தனர்களோ அவ்விடத்திலேயே அக்குடும்பம் தங்கியிருக்கவேண்டும். இதனால் அனுபவ பாத்தியம் தோன்றுகின்றது. வேறு யாராவது அக்கிரமமாய்ப் பிரவேசித்திடின் சண்டை நேரிடும். அதைத் தீர்ப்பதற்கு அவர்களுடைய இனத்தில் வயது சென்றவர்கள்தான் நியாயாதிபதிகளாவர்கள். இதுமாதிரியாய் ஆபிரிக்காவில் டமாரா, மஸாய், டச்சுபோயர், பெடுயின் போன்ற பல இனத்தார் வாழ்கின்றனர்.

இதற்குமேல் அடுத்த நிலைமையான வியவசாயத் தொழிலின் விசேஷங்களை விசாரிப்பாம். வியவசாயத் தொழில் வெகு சீக்கிரத்தில் மனிதர்களை ஓரேயிடத்தில் தங்கச்செய்யும். ஏனெனின் பயிர் சாகுபடி செய்யப்படின் அது அழியாமல் காக்கப்பட்டு பலன் கைக்குக் கிடைக்கும் வரை பொறுமையாய்த் தங்கியிருக்க வேண்டும். மேலும் 'பர்வத்தே பயிர்' செய்யவேண்டுமென்பது வேளாளர் அனுபவம். வேளாண்மைக்குக் காலம் உண்டு. உழுது உரமிட்டுப் பரம்படித்து விதைவிதைத்துக் களைபிடுங்கித் தண்ணீர் பாய்ச்சிப் பக்குவகாலம் வந்தபிறகு மாகுலைக்



கொய்யவேண்டும். இந்த அனுபவம் முக்கியமானது. வியவசாயத்திற்குவேண்டிய கலப்பை முதலிய கருவிகளுடன் வேறூராய்ச் செல்வதுங் கஷ்டம். புதிய புலத்தைக் கைப்பற்றி மறுபடி உழுது பயிர்செய்வதுங் கஷ்டம். ஓரிடத்தில் பயிர்செய்தால் அதேவிடத்தில் மறுபடி புலன் உற்பத்தியாகாதென்கிற எண்ணம் முதலிலிருந்தது. தவிர ஒவ்வொரு குடும்பத்தாரும் தனித்தனியே பயிர் செய்யாமல் பொதுவாய்ப் பயிர் செய்ததால் அதிக விஸ்தீர்ணம் தேவையாக, நாளடைவில் பயிர்செய்த புலத்தையே எடுத்துக் கொண்டதுமல்லாமல் ஒரு புலத்திலேயே இருபோகம் முப்போகம் விளையும் என்று தெரிந்துகொண்டனர்.

இவ்வாறு அநேக நூற்றாண்டுகள் கழிந்தபிறகு ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் தனிப்புலங்கள் ஏற்பட்டன. இதற்குக் காரணங்கள் பல உள. முக்கியமாய் அடிக்கடி இனத்தாருக்குள் கலகங்களும் சண்டைகளும் ஏற்படுங்காலத்தில் தனித்தனியாய்ப் புலங்களைப் பிரித்துக் கொள்ளும் வழக்கம் தோன்றலாயிற்று. இதர ஜாதியார்கள் படையெடுத்து ஓரினத்தை வென்றால் வென்ற ஜாதியார்கள் தங்களிஷ்டப்படி புதியநிலங்களைக் கைப்பற்றிக்கொள்ளப் பாக்கியிருப்பதைத் தோல்வியடைந்தவர்கள் பிரித்துக் கொள்வது வழக்கம். இங்ஙனம் மனிதர்கள் வியவசாய நிலைமையை யடைந்ததும் சொந்த உடைமை (Private Property) ஏற்படலாயிற்று.

வியவசாயத்திற்கு வேண்டிய உதவிகளில் முக்கியமானது ஜலம். அதை உபயோகிப்பதில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இயற்கையாய் அமைந்திருக்கும் ஏரிகள் ஆறுகள் முதலிய ஆதாரங்களினின்று தண்ணீரைப்

பாத்திகளில் பாய்ச்சுவது சுலபம். இத்தகைய ஜலாதாரங்களில்லாத விடங்களில் கிணறுகள் வெட்டி அதினின்றும் ஏற்றங்களினுதவியால் தண்ணீரிறைப்பது வழக்கம். ஜலமிறைப்பதற்கு மார்க்கங்கள் பல உள. அவைகளில் மாடுகளினுதவியால் கவலையேற்றம் ஏற்பட்டிருப்பது பழைய மாதிரி. அதற்கடுத்தபடியாய்க் காற்றினுதவியால் நீரைக் கிணறுகளினின்றும் வெளியேற்றினார்கள் மேனாட்டார்கள். பதினெட்டாவது நூற்றாண்டில் நீராவியின் சக்தி கண்டுபிடிக்கப்பட்டபிறகு அச்சக்தியினால் ஜலம் மேலே யேற்றப்பட்டது. இம் முறையை மேனாட்டார்கள் சென்றவிடங்களில் எல்லாம் பரவச் செய்தார்கள். இந் நூற்றாண்டில் மின்சார சக்தியினாலும் ஜலம் "பம்ப்" செய்யப்படுகின்றது.

விவசாயத்திற்குச் சாதகமான ஏர்கள் உழுவதற்கும் பயிர்களை யறுக்கவும் போரடிக்கவும் இயந்திரங்களும் பல தோன்றியிருக்கின்றன. ஆனால் பண்டைக் காலத்தில் உபயோகப்படுத்திய ஏர்வகைகளாக்கள் தான் அதிகமாய் நம் நாட்டில் இன்னும் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனால் மேனாட்டார்கள் விவசாய முறையை விருத்தி செய்து கொண்டேயிருக்கின்றனர். புதியமாதிரியான ஏர்களும் புதிய நடவு ஜினுசுகளும் புதிய மாதிரியான பயிர்களும் மேனாட்டார்களால் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் நம் நாட்டில் இங்குமங்கும் பரீக்ஷை செய்யப் பட்டு வருகின்றன.

வியாபாரம் கைத்தொழில் முதலிய இதர ஜீவனோபாயங்களைப் பற்றி இனிவரும் வியாசத்தில் குறிப்பிடுவாம்.

---

## (11) கைத்தொழில்.

ஜீவனோபாயத்தைக் குறித்து இதுவரையில் கூறியவற்றில் கைத் தொழிலைப் பற்றிப் பிரஸ்தாபஞ் செய்யவில்லை. கைத்தொழில் என்பது இக்காலத்தில் சில வேலைகளைத்தான் குறிப்பிடும். ஆங்கிலத்தில் "manufacture" என்பது கைத் தொழில் என்னும் பொருள்கொண்ட மொழியே.

ஒரு குடும்பத்தின் நல்வாழ்க்கைக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொள்ள ஆண்மக்களும் பெண்மணிகளும் தொழிற் பிரிவினை செய்துகொள்ளும் விஷயத்தை முந்தியே குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால் ஜனங்கள் சமூக வாழ்க்கையில் தங்க ஆரம்பித்தவுடன் தங்களுக்கு வேண்டிய பொருளனைத்தையும் தாங்களே செய்துகொள்வது அசாத்திய மெனக் கண்டு எந்த வஸ்துவை யாவர் செய்ய வல்லவரோ அவரிடமிருந்து அவ் வஸ்துவைப் பெறலாயினர்.

ஆஸ்டிரேலியர்களும் தங்களது தேசத்தில் ஒரு பாகத்தில் பாய் செய்யவேண்டிய சௌகரியங்களில்லாவிடின் அப் பாகத்தி லுள்ளவர்கள் தங்களால் ஆக்கப்பட்ட ஆயுதங்களைக் கொடுத்துப் பாய்களை வாங்கிக் கொள்கின்றனர். இம்மாதிரிப் பல உதாரணங்கள் எல்லா தேசங்களினின்றும் எடுத்துரைக்கலாம்.

இதனால் கைத் தொழில்கள் விருத்தியாக இடமுண்டாவதுமல்லாமல் ஒவ்வொரு தொழிலைச் செய்வதில் சாமர்த்தியமும் தேர்ச்சியும் புத்திசாலித் தனமும் ஏற்படும். சீனப் பட்டு, காசிப் பித்தளைப்பாத்திரம், துருக்கிஸ்தானக் படாம், டாக்கா மஸ்லின் என்றவைகள் வெகு காலமாய்ப்

பிரசித்தி பெற்றதற்குக் காரணம் கைத்தொழில் தான். இங்ஙனமே ஆயிரம் ஆயிரமாகக் கணக்கிடக் கூடிய சாமான்கள் இப்பிரபஞ்சத்தில் கைத்தொழிலின் பயனாய்த் தோன்றி யிருக்கின்றன.

கைத் தொழிலில் தேர்ந்த மனிதர்களுக்குக் கௌரவ மதிகம். பாசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள ஸாமாய்த் தீவுகளில் கப்பல் முதலிய மரவேலை செய்கின்ற தச்சர்களுக்கு மரியாதை யதிகம். அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் ஜனங்களால் அளிக்கப் படுகின்றன. இங்ஙனமே அனேக தீவுகளில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தொழிலுக்கு மேன்மை ஏற்பட்டிருக்கின்றது. நாகரிக மற்றவர்கள் எனச் சொல்லப் படும் பல ஜாதியார்களும் அவரவர் கட்குரிய தொழிலுக்கு வேண்டிய பொருள்களைத் தாமே செய்து கொண்டாலும் தமக்குள் அப் பொருளைச் செய்யத்திறமை வாய்ந்தவர்களை நன்கு மதிக்கின்றனர். பண்டைக் காலத்தில் வசித்தவர்கட்கும், இப்பொழுதும் அநாகரிக நிலைமையில் தங்கியிருப்பவர்கட்கும், அன்றாடம் தேவையான பொருள்கள் சுவல்ப அளவுக் குட்பட்டவைகள். நாள் செல்லச் செல்லப் பொருள்களின் உபயோகத்தைத் தெரிந்துகொண்டு அவைகளை வழங்குவதில் ஜீவனத்திற்கு வழிகள் அதிகரிக்கத் தொடங்கின. அக்கம்பக்கத்திலுள்ளவர்களின் சம்பந்தம் ஏற்பட்டாலன்றி தனித்தீவுள்ளவர்கள் முன்னேற்ற மடைவது வெகு கஷ்டமாயிருக்கும். அல்லது அவர்களின் தொழில்கள் நின்ற நிலையில் தண்ணீர்க் குட்டைபோல் தங்கிவிடும்.

பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள நூற்றுக்கணக்கான தீவுகளில், சிறந்த சோலையாய்த் திகழும் இயற்கையா



லளிக்கப்பெற்ற ஸ்தாவரஜங்கம வஸ்துக்களைப் புசித்துக் கொண்டு தாம் வசிக்குமிடந்தான் பூலோகம் என்று எண்ணிக்கொண்டு அதற்குப் பக்கத்தில் என்ன இருக்கின்றதென்கிற யோசனையுமின்றி வசிக்கின்ற அண்டமன் தீவிலுள்ளவர்களைப் போன்ற பலர் இருக்கின்றனர். ஐரோப்பியர்கள் அவ்விடங்களிற் சென்று பலவிதமாய்ப் பிரயத்தனஞ்செய்தும் அவர்களை முன்னேற்றத்தின் வழியில் திருப்பிவிடுவது கஷ்டமாயிருக்கின்றது. இவர்களது செல்வாக்கினால் மாற்றப்பட்ட சில இனத்தார் தவிர இதரர்கள் நலிந்து போகின்றனர். தீவுகளிலுள்ளவர்கள் சுலபமாய் வெளிநாடுகளுக்குப் போகக்கூடாமையால் தங்கியவிடத்தைவிட்டு நகராமல் நின்றவிடத்தில் உறைந்த நடையுடைபாவனைகளில் ஊறிப்போனதால் புதிய வழக்கங்களுக்கும் பழக்கங்களுக்கும் ஈடுபடார்கள்.

வேட்டையாடுந் தொழிலையே பிரதானமாயுடையவர்களும் தங்களுக்கு வேண்டிய தற்காப்பு ஆயுதங்களையும் சில கருவிகளையும் பாத்திரங்களையும் செய்துகொள்ளவேண்டியதவசியமாகும்.

இரும்பு முதலிய தாதுவர்களினுபயோகம் சுவல்பமாக இவர்களுக்குத் தட்டுப் பட்டிருக்கின்றது. ஆபிரிக்காவில் காங்கோ காடுகளிலுள்ள “பிக்மி” களுக்கும் இரும்பு வேலை சிறிது தெரியும். ஆயினும் கைத் தொழில் நிலைமையை அவர்கள் அடைந்தவர்களெனச் சொல்வது சரியல்ல. கோரைகள், நார்கள், முதலியவைகளால் முரட்டுத்தனமான உடைகள் நெய்து கொண்டாலும் இவைகளிலும் கைத் தொழில் நிலைமையை அவர்கள் அடைந்தனரென்று சொல்வது சரியல்ல.

மக்கட்பூண்டு ஆதியில் ஜாவாவில் உற்பத்தியாயிற்றென்ற கொள்கைக்கிணங்க அத்தீவின் கண் பஞ்சு நூல் நெசவுத் தொழில் வெகு காலமாய் விருத்தியடைந்திருக்கின்றதென்பது சரித்திரத்தால் தெரிகின்றது. ஆனால் அத்தீவைச் சுற்றிச் சில தீவுகளைத் தவிர பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள இதர தீவுகளில் இக்கைத்தொழில் பரவவில்லை. ஒருகால் பர்மா, சீனா, இந்தியா, முதலிய நாகரிகம் பெற்ற நாடுகளுக்கருகிலிருக்கின்றமையால் ஜாவாத்தீவில் இக்கைத்தொழில் விருத்தியாயிற்றென்றும் கூறலாம்.

பிறகு வியவசாய தசையை யடைந்த மனிதர்கள் பயிர்த்தொழிலுக்கு வேண்டிய கலப்பை, அரிவாள், முதலிய கருவிகளைச் செய்து கொண்டனர்கள். அங்ஙனஞ் செய்து கொண்டவர்களும் தற்காலத்தில் ஏராளமாய்ச் செய்யப்படுவதைப் போல் செய்யாமல் வேண்டிய வளவு மட்டில் செய்துகொண்டனர். யாதாமொரு பொருளை வேண்டியதற்குமேல் அதிகமாய்ச் செய்வதின் பலன் என்னை? என்றால் அதன் விலை சரசமாகும் என்பதே. சாமான்கள் எவ்வளவுக்கெவ்வளவு சுலபமாய்க் கிடைக்கின்றனவோ அவைகளை அவ்வளவுக்கவ்வளவு அதிகமாய் உபயோகிக்க ஜனங்களுக்கு ஆவலுண்டாகும். ஜனங்களுக் காவலுண்டானதற்குமேல் சாமான்கள் விருத்தியாக இடமுண்டு. இங்ஙனமே மேனாடுகளிலும் ஜப்பானிலும் அமெரிக்காவிலும் மாந்தர்கள்போட்டியிட்டுக்கொண்டு கைத்தொழில்களைப் பெருக்குகின்றார்கள்.

கைத்தொழிலுக் குபயோகப்படும் பொருள்களைப் பயன்படுத்துவதற்குச் சக்தி சாதனம் யாதேனும் தேவை.



மனிதனுக்குப் பிறவியில் ஏற்பட்டது கைகளே. அவற்றின் வலுமையினால்தான் வியவசாயம் முதல் சகல தொழில்களும் நடப்பதாயினும் சில தொழில்களை மாத்திரம் கைத்தொழில் என வியவகரிப்பது காரண இடுகுறி என்னும் பெயரின் இலக்கணம்பற்றியாகும். இந்தச் சக்தி சாதனம் பல ரூபமாய்ச் சென்ற இரண்டு நூற்றாண்டுகளுக்குள் விருத்தியாயிருக்கின்றது. வாயுசக்தியாலும் ஜலசக்தியாலும் மாவு அரைக்கும் இயந்திரங்களை யோட்டுவதும், வேறு சில்லரைக் கைத்தொழில்களைச் செய்வதும், பதினாறாவது நூற்றாண்டு முதல் மேனாடுகளில் வழங்கிவந்திருந்தாலும் பதினெட்டாவது நூற்றாண்டிலும் பத்தொன்பதாவது நூற்றாண்டிலும் ஏராளமாய்க் கைத்தொழிலுக்குச் சக்தி சாதனங்கள் பெருகலாயின. ஆறுகளின் பக்கங்களில் ஜலயந்திரங்கள் முற்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டவாறே சிலவற்றை இன்றைக்கும் ஐரோப்பாவில் காணலாம்.

ஜனங்கள் விருத்தியானகாலத்தில் இவைகள் போதாமல் முக்கியமாய்த் துணி நெய்யும் தொழிலை விருத்தியாக்க வேண்டிய இயந்திரங்களும் சக்திசாதனங்களும் இங்கிலாந்தில் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றலாயின. ஆர்க்ரைட் என்பவர் நூல் நூற்குமியந்திரத்தைச் சீர்திருத்தஞ் செய்தார். ஹார்க்ரீவ்ஸ் என்பவர் ஒரே மனிதன் பல நூல் இழைகளை ஒரே சமயத்தில் நூற்குமாறு ஒரு இயந்திரம் கல்பித்தார். இவ்விருவர்களின் யுக்தியை ஒன்று கூட்டிக் கிராம்டன் என்பவர் ஒரே இயந்திரத்தில் அதிக நூல் வெகு சீக்கிரத்திலுண்டாகும்படி செய்தனர். நூல் அதிக முற்பத்தியாக்குவதற் கிணங்கத் துணி நெசவுத்

தொழில் பெருகுமாறு கார்ட் ரைட் என்பவர் ஒரு இயந்திரத்தை யுண்டாக்கினார்.

இப்படி யேற்பட்ட புதிய இயந்திரங்கள் எல்லாம் ஜலத்தின் வன்மையினால்தான் நடத்தப்பெற்றன. ஆனால் நீர் ஆவியைக்கொண்டு அதிக சக்திபுற்ற இயந்திரங்களை சிருஷ்டிக்க ஜேம்ஸ்வாட் என்ற புத்திமான் கிளம்பினான். இதனிடையில் நிலக்கரி யுற்பத்தி யதிகமானதால் ஜான் ரோபக் என்பவர் இரும்பை யுருக்க உபாயம் கண்டுபிடித்தனர். ஆகலால் நிலக்கரியும் இரும்பும் புதிய யந்திரங்களமைக்க உதவியாயின. நிலக்கரியும் இரும்பும் அருகில் கிடைத்த விடங்களில் தொழிற்சாலைகள் ஏற்படலாயின. அவ்விடங்களில் தொழிலாளிகள் கூடலாயினர். இங்ஙனமே இன்னும் வேறு சிலவகைத் தொழில்களும் விருத்தியாயின. ஜோசையா வேட்ஜ்வுட் என்பவரது மட்பாண்ட உற்பத்தி மேன்மையை முக்கியமாய்க் குறிப்பிடலாம்.

பத்தொன்பதாவது நூற்றாண்டி னிறுதியில் மின்சார சக்தி யுபயோகம் பலவிதமாய்க் கிளம்பலாயிற்று. கைத்தொழிற் சாலைகளில் மின்சார சக்தியினால் முன்னினும் பதின்மடங்கு வேகமாய்த் தொழில்கள் புரிய வழி ஏற்பட்டது. கைத்தொழிற் சாலைகள் போட்டியிட்டுக் கிளம்பின. மின்சார சக்தி யுற்பத்தி செய்யும் மார்க்கம் அதிகரிக்க அதிகரிக்கப் புதிய தொழில்கள் தோன்றின. இப்பொழுது நீர்வீழ்ச்சிகளி னின்றும் மின்சாரம் உற்பத்தியாக்கப்படுவதால் காடுகளும் நகரமாய்விடுகின்றன. மத்திய ஆப்பிரிக்காவி லுள்ள காடுகளில் மின்சாரம் உற்பத்தியாகின்ற தென்றால் மானிடர் முன்னேற்றத்துக்கு



வேறென்ன சாக்ஷி வேண்டும். நைல் நதிக்கரைகளில் ஆங்காங்கு மின்சார சக்திச் சாலைகள் தோன்றி யிருக்கின்றன. அமெரிக்காவில் நையாக்கிரா ஜலவீழ்ச்சியில் உண்டாக்கப்படும் மின்சாரத்தினால் உலகத்தையே ஆளலாம்.

கைத்தொழில்களில் கடைசி நிலைமையி லிருக்கும் இந்தியாவிலும் மைசூர் ஸம்ஸ்தானத்தில் சிவசமுத்திரம் ஜலவீழ்ச்சியில் மின்சாரசக்தி உற்பத்தி யாக்கப்படுவது சந்தோஷத்திற் கிடமாகும். இவ்வாறு இத்தேசத்தில் சில விடங்களிலாவது இன்னும் ஏற்பட இடமுண்டு.

மின்சார சக்தியினால் செய்யப்படக் கூடாத காரியமில்லை யெனலாம். உஷ்ணத்தைத் தருவதிலும் வெளிச்சத்தைத் தருவதிலும் இதைப்போல் சக்தியுடைய வஸ்துக்கள் வேறு சில கண்டுபிடிக்கப்பட் டிருப்பினும் இதைப்போல் தொழி லுபயோகத்திற் குரியதாய் அவைகள் கண்டுபிடிக்கப்படும் வரையில் மின்சார சக்தியே உலகை யாளும். வண்டித் தொடர்களை யிழுக்கவும் இயந்திரங்களை யோட்டவும் பளுவான வஸ்துக்களையும் வெகு சுலபமாய்த் தூக்கவும் மின்சார சக்தி உபயோகப்படுகின்றது. அது அனேக குதிரைகளின் சக்தியை யுடையது. அதன் உதவியால் பீரங்கிகளும் குண்டுகளை அநேக மைல்கள் பாயும்படி வெளித்தள்ளுகின்றன. அத னுதவியால் சமாசாரங்களும் உலக மெல்லாம் வெகு சீக்கிரத்தில் மின்னலைப்போல் பரவுகின்றன. அதன் சக்தியால் உயிரில்லாத சித்திரப்படங்களும் உயிருள்ளவைகளைப் போல் நடிப்பதை ஸினமா (Cinema) க்களில் காண்கின்றோம். விவசாய இயந்திரங்களும் அதனால் நடத்தப்பட்டு

வருகின்றன. இவ்வாறு கைத்தொழில் முன்னேற்றமடைந்திருக்குஞ் செய்தியை மறுக்க வல்லார் யாவர்?

ஆனால் கைத்தொழிற்சாலைகள் ஏற்பட்டதனால் விளைந்த தீமைகள் மறத்தற்பாலனவல்ல. கைத்தொழில்களால் உற்பத்தியாக்கப்படும்பொருள்களின் மேன்மையைக் கண்ணுறும் நமக்கு அவைகளால் உண்டாகுந் தீமையைக் குறிப்பிடவுந் தோன்றுது. ரஸ்கின், டால்ஸ்டாய் முதலிய அறிஞர்கள் மேனுடுகளில் கைத்தொழிலைக் குறைகூறிக் கண்டித்திருக்கின்றனர். நூலுண்டாக்கும் கைராட்டினத்தின் இனிமையான சங்கீதம் குறைந்து, கைத்தொழிற் சாலையில் கோரமான கூக்குரல் மேலிட்டதை வொர்ட்ஸ்வொர்த் (Wordsworth) போன்ற கவிவாணர்கள் நிந்தித்திருக்கின்றனர். இந்தியாவிலும் இதே கொள்கையை முன்விடுத்துவரும் மகாத்மா காந்தி கைராட்டினத்தின் மகிமையையே விளக்குகின்றனர். ஏனெனின் பழையபடித் தொழில் முறைப்படி முதலாளிகள் தொழிலாளிகள் என்ற சண்டை சச்சரவு கிடையாது. தொழிற்சாலைகளில் ஏற்படும் அவிவேகமான ஸ்திரீபுருஷ சம்பந்தம், சிறுவர் சிறுமியர் துர்வாடிக்கைகள், கொடூரமான கைத்தொழிற் சேவகம், வேலைநிறுத்தம், இயந்திரங்களினல் அவயவங்களுக்கும் அங்கங்களுக்கும் ஆபத்து, ஆகிய பற்பல சங்கடங்கள் தோன்றியிருப்பதை அறிவோர் கூறுவர். இந்தியாவிலுள்ள ஜாதிவித்தியாசங்கள் தொழிற் போராட்டத்தை நீக்குவதற்கான உபாயங்களென்றும் புகலலாம். மேனுடுகளில் ஏற்பட்டிருக்கும் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நேரிடும் போராட்டங்கள் நம் நாட்டிலும் நுழைந்துவிடுமென்றும் பயப்படுவதற் கிடமுண்டு.



ஆயினும் நாம் கவனிக்கவேண்டிய விஷயமொன்றுண்டு. அஃதாவது கைத்தொழில்களினல் ஏற்படும் நன்மைகளதிகமா? தீமைகளதிகமா? என்கிற கேள்வி வருங்கால் இக்காலத்திய இடம் பொருளேவலுக்குத் தக்கவாறும் மனோபாவத்திற்குத் தக்கவாறும் ஜனசங்கியைகளுக்குத் தக்கவாறும் கைகளினல் சாமான்கள் செய்வது சாத்தியமா? ஜனசமூக வாழ்க்கைக்கு வேண்டிய சௌகரியங்கள் இயந்திரங்களினலன்றி வேறுவிதமாய்ச் செய்வது சாத்தியமா? தற்காலத்திய நாகரிக நிலைமைக்குப் பழைய ஏற்பாடுகள் எம்மட்டும் சாத்தியமாகும்? என்கிற பதில் கேள்விகள் தோன்றும்.

கைத்தொழில் விஷயமாய் இந்நாட்டின் நிலைமையைக் கவனிக்குங்கால் தற்காலத்திற்கு வேண்டியவளவு சாமான்களை நம் நாட்டார் செய்துகொள்ளாமல் பிறநாடுகளை எதிர்பார்க்கும் ஸ்திதியிலிருக்கின்றனர் என்பது பளிங்குபோல் தோன்றும். நம் நாட்டினர் ஏன் இந்நிலைமையிலிருக்கின்றனர் எனின் காரணங்கள் பலவுள. முக்கியமாய் நீண்டகாலமாய் அன்னிய நாட்டார்களுக்கு அடிமைபாய்விட்டதையும் பிழைப்புக்குரிய பழைய வழிகள் மாறிவிட்டதையும் நாட்டுச் செல்வங் குறைந்துவிட்டதையும் கல்வி முறையின் குறைகளையும், தேசத்தவர் ஊக்க[illegible]யையும், [illegible]நாட்டுச்சலுகைகளையும் ஒற்றுமையின்மையையும், ஆகிய இவைகளைக் கூறலாம். எங்ஙனமாயினும் இந்நாடு பல [illegible]தனிப் பொருள்களைமட்டில் கைக்கொண்டு அவைகளை வெளிநாடுகளினின்று அடைகின்றமையால் இந்நாட்டுச் செல்வம் குறைந்து வருகின்ற [illegible]. இங்ஙனமின்றி நாமே நம் நாட்டிற்கு வேண்டிய வஸ்துக்களைச் செய்ய வேண்[illegible]

ஒற நோக்கம் இப்பொழுது தோன்றியிருக்கின்றது. உலகத்தார் செய்வதைப்போல் நாமும் நமக்கு வேண்டியவைகளைச் செய்து கொள்ள வேண்டுமென்று கிளர்ச்சி செய்வது நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடையாளமென்பதற் கையமில்லை.

மேனாட்டு முறைகளில் குறைகளைக் காணும் இத்தேசம் அவைகளை நீக்கிக் காலத்திற்குத் தக்கவாறு கைத்தொழிலை யபிவிருத்தி செய்தால் முன்னேற்றமடைவதற்குச் சந்தேகமில்லை. அதன் குறைகளை மட்டில் கூறிக் கைத்தொழிலை நீக்குவது தவறாகும். கைத்தொழில்களுக்கு வேண்டிய கருவிகளைத் தேடி அவைகளை விருத்தி செய்ய வேண்டிய வழிகளைக் கண்டுகொள்வதைத் தடை செய்வதும் தவறாகும். நவீன சாஸ்திர ஆராய்ச்சியினால் நூதன உபாயங்களைக் கண்டுபிடித்து நம் நாட்டிலேயே இயந்திரங்களை யுண்டாக்கவும் அவைகளை யுபயோகப் படுத்தவும் அவைகளுக்கு வேண்டிய மூலதனத்தைச் சேகரிக்கவும் அவைகளால் ஆக்கப்படும் பண்டங்களை வியாபாரமூலமாய் உலகில் பரவச்செய்யவும் இந்தியர்களுக்கு புத்தி ஊக்கமும் முயற்சியும் சுறுசுறுப்பும் தைரியமும் தோன்றுவ தவசியமாகும். கைத்தொழி லபிவிருத்திக்கு வேண்டிய கல்வி முறையைப் பரவச்செய்வது நமது மேன்மையான கடமையாகும். இவ்விஷயத்தில் அரசாங்கத்தினரும் வித்தியாபிவிருத்தியைக் கோருகின்றவர்களும் அவர்களது கடமையைச் செலுத்தினாலன்றி இந்தியா முன்னேற்றமடையாது.

---

## (12) வியாபாரம்.

இந்நிலவுலகினது இயற்கைக் குணங்கள் பலவற்றுள் பூசாரம், சீதோஷ்ணஸ்திதி, விளைபொருள், தாதுவர்க்கம் ஆகிய இவைகள் எக்காலத்திலும் எல்லா விடங்களிலும் ஒரே மாதிரியாயின்றி வித்தியாச மடைந்திருப்ப தொன்று. இதனால்தான் இப் பூவுலகின்கண் மனிதர்களின் நாகரிகம் வித்தியாசமடைந்து நிற்கின்றது.

பூமியின் ஒருபாகம் கடினமாயும், மற்றொருபாகம் மிருதுவாயும் ஓரிடம் கருமையாயும் வேறோரிடம் சிகப்பாயும் இருக்கின்றமையாலும் சில விடங்களின் அடிப்பாகத்தில் தாதுவர்க்கங்களும் சில விடங்களில் கற்பாறைகளும் இருக்கின்றமையாலும், சில தலங்கள் உஷ்ண மண்டலத்திலும் வேறு சில சீதமண்டலத்திலும் இன்னும் சில சமசீதமண்டலத்திலும் இருக்கின்றமையாலும், ஓரிடத்தின் கண்ணே சில மாதங்கள் வெப்பமுற்றனவைகளாயும் சிலமாதங்கள் மழை பெய்பவனவாயும் சில மாதங்கள் பனி பெய்பவனவாயும் நிற்கின்றமையாலும், பூமியின் விளையுஞ் சக்தி வேற்றுமைப் படுகின்றது. பூமிக்குள் ஒருபாகத்தில் இரும்பும் இன்னுமொரு பாகத்தில் நிலக்கரியும், ஒருபாகத்தில் தங்கமும் இன்னுமொரு பாகத்தில் வெள்ளியும், ஓர் பாகத்தில் கந்தகமும் இன்னுமோர் பாகத்தில் உப்புக் கட்டியும், ஓர் பாகத்தில் குண்டுக்கற்களும் இன்னுமோர் பாகத்தில் வைரக் கற்களும் தோன்றி யிருக்கின்றமையாலும் ஒவ்வொரு தேசத்தின் நிலைமையும் தாதுவர்க்கங்களுக்குத் தக்கவாறும் வித்தியாச மடைந்திருக்கின்றது.

பூசாரத்திற்குத் தக்கவாறு பயிர்கள் தோன்றும். சில பூபாகம் சுலபமாய் உழவுக்கிடங் கொடுக்கும். ஆனால் சில விடங்களில் கலப்பை பதியாது. சில நாடுகள் நீர்வளம் பொருந்தியன. ஆனால் சில சீமைகள் மானம் பார்த்தவைகள். சில தேசங்களில் காடுகள் அதிகம். சில விடங்களில் பாலைவனங்க ளதிகம். ஆகையினால் அநேக சௌகரியங்களைக் கொண்டே வியவசாயத் தொழில் விருத்தியாகும்.

எகிப்திலும் அமெரிக்காவிலும் பஞ்சு ஏராளமாய் விளைகின்றது. கங்கை, காவேரி, ஐராவதி, முதலிய நதிக் கரைகளில் நெல் விசேஷமாய்ப் பயிரிடப் படுகின்றது. கானடாவில் கோதுமை ஏராளமாய் உற்பத்தியாகும். மேற்கிந்தியத் தீவுகளிலும், மோரிசு, ஜாவா முதலிய இடங்களிலும் கரும்பு உற்பத்தி விசேஷம். சிலபயிர்களுக்கு உஷ்ணம் தேவை. சில பயிர்களுக்கு மழை தேவை. ஆகையினால் பருவங்களுக்குத் தக்க வாறும் பயிர் உண்டாகும்.

இரும்பும் நிலக்கரியும் இங்கிலாந்தில் பலபாகங்களில் அக்கம் பக்கங்களில் கிடைக்கின்றன. ஆஸ்டிரேலியாவிலும் தென் ஆபிரிக்காவிலும் தங்கச் சுரங்கங்கள் அதிகமாயிருக்கின்றன. அமெரிக்காவில் வெள்ளியும் தங்கமும் கிடைக்கின்றன. வைரக்கற்கள் கணக்கில்லாமல் தென் ஆபிரிக்காவில் வெட்டி யெடுக்கப் படலாம். ஒரு கால் தானியம் முதலியவைகளை எங்ஙனமாயினும் கஷ்டப்பட்டு எப்பிர தேசத்திலும் விளையச் செய்யலாம். ஆனால் தாதுவர்க்கங்களைப் பூமியின் கர்ப்பத்தில் தோன்றச் செய்வது தற்காலத்தில் நவீன சாஸ்திரஞர்களுக்கு கஷ்ட



வில்லைபோலும். ஆகையினாலேதான் மானிடரது வாழ்க்கை வகைகளும் வித்தியாச மடைந் திருக்கின்றன.

இவை இங்ஙனமிருக்க, தமது வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் எவ்விடத்தில் தோன்றினும் அவைகளை எங்ஙனமாயினும் அடையவேண்டுமென முயல்வது மக்களியல்பு. யாதாயினும் ஒரு பொருளைப் புதிதாய்க் கண்டவுடன் அதினுபயோகத்தைத் தெரிந்துகொண்டு அதைத் தம் நாட்டிலேயே உற்பத்தியாக்கியாவது அல்லது அது கிடைக்குமிடங்களைத் தேடி வேறு பொருள்களைக்கொண்டு மாற்றியாவது அதைக் கைப்பற்றுவது மக்களியல்பு. இவ்வுணர்ச்சியினால்தான் வியாபாரத் தொழில் தோன்றலாயிற்று. வியாபாரந்தான் ஓரிடத்திலுள்ள மனிதர்களைப் பிரபஞ்சம் முற்றிலும் உள்ள மனிதர்களுடன் சம்பந்தப் படுத்துகின்றது. அதன்வாயிலால்தான் நமது நல்வாழ்க்கைக்குரிய சௌகரியங்கள் பெருகிவருகின்றன; செல்வம் அதிகரிக்கின்றது; சௌக்கியம் உண்டாகின்றது. இவ்வுலகம் இக்கணத்திலிருக்கும் நிலைமைக்குக் காரணம் வியாபாரமே. வியவசாயமும் கைத்தொழிலும் வியாபாரத்தைப் பின்பற்றியே பெருகுகின்றன. இம்மூன்றும் ஒன்றோடொன்று போட்டியிட்டுக்கொண்டு வளர்ந்துவருகின்றமையால் மேனாட்டார்கள் மேன்மை யடைந் திருக்கின்றனர்.

வேளாண்மைத் தொழிலாளர்களுக் குரிய கருவிகளை யுதவிசெய்யவும் அவர்களுக்கு வேண்டிய துணி முதலியவைகளை உண்டாக்கவும் கைத் தொழிலாளர்கள் தேவை. கைத் தொழிலாளர்களுக்குப் பயிர் செய்யும் வியவசாயத் தொழிலாளர்களது சகாயம் தேவை. இவ்விருவர்களுக்கும் உபகாரிகள் வியாபாரிகள் என்பதும் ஐயமில்லை.

வியாபாரத்திற்குச் சகாயங்கள் பலவேண்டும். அவைகளில் முக்கியமானவை போக்கு வரத்துக்குச் செளகரியங்களும், மாற்றுப் பொருள்களுமாம். ஆதிகாலத்தில் ஓரிடத்திலிருந்து அடுத்த இடத்திற்கும் போவதற்கு நல்ல வழி இருந்திராதென்பதைத் தற்காலத்தில் நம தேசத்திய சில கிராமாந்தரங்கள் இருக்கும் நிலைமையைக் கண்டே கண்டுகொள்ளலாம். இம்மாதிரி அநேக நாடுகளிருக்கின்றன. அவ்விடங்களில் நடை மிகுதியால் ஏற்பட்ட பாதைகளைத் தவிர வேறுமார்க்கமிராது. அவைகளின் வழியாய்க் கால் நடையாயும் மிருகங்களின் மீதும் போக்கு வரவு செய்திருக்கவேண்டும். இடையில் வெகு தூரமுள்ள இடங்களுக்குக் போக்கு வரவு அதிகம் நேரிட்ட காலத்தில் சக்கரங்கள் பூட்டிய வண்டிகள் தோன்றியிருக்கவேண்டும். அதனால் பாதைகளும் விசாலமாய்ப் பெருகியிருக்கவேண்டும். மேனாட்டுச் சரித்திரங்களைப் படித்தால் பதினெட்டாவது நூற்றாண்டு வரையில் நல்ல வழிகளில்லாததனால் பட்ட துன்பங்கள் வெளியாகும். இங்கிலாந்தில் முதல்முதலில் நல்ல ரஸ்தாக்கள் ஏற்படுத்தப்பட்டதும் பண்டிகள் சீர்திருத்தங்கள் தோன்றியதும் இறுதியில் நீராவிசக்தியினால் இருப்புப் பாதைகள் போடப்பட்டதும் பிறகு மின்சார சக்தியினால் ஓட்டப்படும் டிராம் வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் கண்டுபிடிக்கப்பட்டதும் மானிடர் முன்னேற்றத்தை நன்கு விளக்குகின்றன.

ஆறுகளுள்ள பிரதேசங்களிலும் சமுத்திரக் கரையோரங்களிலும் ஜலத்தில் மிதக்கக் கூடிய சாதனங்களை மனிதர்கள் தேடிக்கொள்வது அநுபவசித்தம். மூங்கில்



களால் பெரிய கூடைகள் கட்டித் தோலையடியிலிட்டு மூடித் தண்ணீரில் மிதக்கும்படி தெப்பம் செய்து அதில் பிரயாணஞ் செய்வதையும் ஆறுகளைத் தாண்டுவதையும் அநேக இடங்களில் இன்றைக்கும் நாம் காண்கின்றோம். இன்னும் வேறு பற்பல முறைகள் உலகில் காணப்படுகின்றன. மரத்தைக் குடைந்து செய்யப்பட்ட படகுகளையும் மரக்கட்டைகளைக் கட்டிய கட்டுமரங்களையும் மரப்பலகைகளால் இணைக்கப்பட்ட கப்பல்களையும் பாய்மரங்களும் சீலைகளும் தாங்கிய மரக்கலங்களையும் நீராவியின் இயந்திரத்தால் ஓட்டப்படும் இரும்புக் கப்பல்களையும் நாம் பார்க்கின் இவ்விஷயத்தில் மானிடர் முன்னேற்றம் சொல்லாமலே விளங்கும்.

போக்குவரவுக்குச் சகாயமானவைகளில் ஆகாயமுமொன்று. பக்ஷிகளைப்போல் பறந்துபோவதற்கு வேண்டிய முறைகள் ஆகாயவிமானங்களெனப்படும். இந்தியாவில் இவ்விமானங்களைப்பற்றி ஆதிகாவியங்களிலும் காணலாம். கிரீஸ் தேசத்திலுள்ளவர்களும் ஆகாயத்தில் பறக்குமுயன்றதாய்ச் சில விருத்தாந்தங்கள் சொல்லப்படுகின்றன. அவைகள் எங்ஙனமாயினுமிருக்க. தற்காலத்தில் ஆகாய விமானங்களை நாம் கண்ணால் பார்க்கிறோம். அவைகளைப் போக்கு வரவுக்குச் சாதனமாகச் செய்து உலகத்திற்குபகாரமாகுமாறு மேனாட்டார்கள் பகீரதப் பிரயத்தினஞ் செய்து ஜயித்து வருகின்றனர்.

போக்கு வரவுக்குரிய சாதனங்களினால் தற்காலத்தில் அனேக மைல்களினிடையிலுள்ள இடங்கள் வெகு சமீபத்திலிருப்பவைப் போலவே தோன்றுகின்றன. பலாச்

செலவுங் குறைவென்றே சொல்லவேண்டும். ஆதிகாலத்திய திருட்டு முதலிய ஆபத்துகள் மிகவாய்க் குறைந்துவிட்டன. ஆனால் இதரவிதமான நூதன ஆபத்துகள் கிளம்பியிருக்கின்றன. புகைவண்டிச் செல்கையில் ஒரு பெரிய பாலம் இடிந்துவிழில் அநேக ரிறந்துவிடுவார்கள். ரயில் பாதையின்மேல் போய்க்கொண்டிருக்குங்கால் வண்டித் தொடர்கள் யாதானுமோர் இயந்திரக் குற்றங்களினாலாவது அஜாக்கிரதையினாலாவது தவறி விழுந்துவிடின் அநேக சேதங்கள் உண்டாகின்றன. ஆயினும் சௌகரியங்களையும் அசௌகரியங்களையும் சீர்தூக்கிப்பார்க்கின் சௌகரியங்க ளதிகமான படியால் இதுவும் மானிடர் முன்னேற்றத்தைக் குறிப்பதென்றே சொல்லவேண்டும்.

இம்மாதிரி போக்குவரவு சாதனங்கள் முன்னேற்றமடைய அடைய ஜனங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகவரச் சௌகரியமுண்டாவதுமன்றிச் சாமான்களின் போக்குவரவுக்குரியதான சமாசாரப் போக்குவரவுக்கும் அனுகூலம் ஏற்படலாயிற்று. ஆதிகாலத்தில் ஓரிடத்திற்கு மற்றோரிடத்திலிருந்து ஏதாவது ஒருபொருள் தருவிக்க வேண்டியிருந்தால் ஒரு ஆள் நேரில் சென்றே காரியமாகவேண்டும். வியாபாரிகளும் அங்ஙனமே நேரில் சென்று வரவேண்டும். வழியில் திருட்டுப் பயத்தினாலும் மிருகங்களின் பாதைகளாலும் பலர் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்தே செல்லவேண்டியிருந்தது. மேலும் தனித்தனி அரசாங்க முறைகளுள்ள நாடுகளின் வழியாய்ப் பண்டங்களைக் கொண்டுபோகும் சமயங்களில் சுங்கவரிகள் அதிகமாய்ச் செலுத்தவேண்டியிருந்தது. தற்காலத்தில் வியாபாரிகள்மட்டுமல்லாமல் யாவரேனும் எவ்விடமிருந்தாயினும்



காகிதமூலமாய்ச் சாமான்களைத் தருவித்துக் கொள்ளலாம். இது தபால், ரயில்வே ஆகிய இரண்டினாலும் உண்டான சௌகரியமாகும்.

மேலும் மின்சாரசக்தியினுதவியால் வெகுசீக்கிரத்தில் சமாசாரங்கள் பறக்கும்படியான தந்தியென்பது பத்தொன்பதாவது நூற்றாண்டிலேற்பட்டது. அதே நூற்றாண்டில் அநேக மைல்களிடையிலுள்ள இரண்டிடங்களிலுள்ளவர்கள் ஒருவர்க்கொருவர் நேராய்ப் பேசிக்கொள்ளக் கூடிய டெலிபோன் என்பதும் ஏற்பட்டது. அந்நூற்றாண்டின் இறுதியில் கம்பியில்லாத தந்தியென்பது தோன்றலாயிற்று. அது சாதாரணத் தந்தியைக் காட்டிலும் அநேகவிதத்தில் முன்னேற்றமடைந்தது. ஆகாய விமானத்திலும் தபால் கொண்டு போக ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இங்ஙனம் தபால்களினாலும் மானிடர் முன்னேற்றம் அடைந்திருக்கின்றனர் என்பதற்குச் சந்தேகமில்லை.

மேனாட்டு முறைப்படி சுவல்ப செலவில் உலகம் முழுமையையும் சம்பந்தப் படுத்தக் கூடிய ரயில் தபால் மார்க்கம் ஏற்படு முன் ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்குச் சமாசாரம் அனுப்பும் பழைய முறையில் அநேக கஷ்டங்களிருந்தன. காலதாமதம், பணச்செலவு, அபாயங்கள் முதலிய சகலவிதமான இடையூறுகளினால் மானிடர்களுக்குள் சம்பந்தம் ஏற்படாமல் இருந்தது. அதனால் அவரவர்களது நிலைமை அவரவர்கட்குரிய சௌகரியங்களுக்குத் தக்கவாறே நின்றது. ஒருவர்க் கொருவர் தாராளமாய்ச் சம்பந்தப் பட்டாலன்றி நாகரிகம் விருத்தியாகாது. தற்காலத்தில் இரண்டிடங்களுக்கு இடையிலுள்ள தூரம் எத்தனையோ குறைந்து விட்டதுபோல்

காணப்படும். நாள் செல்லச் செல்லத் தபால் மார்க்கம் குறுகிக்கொண்டு வருவதுபோலும். ஆகாயக்கப்பலின் வாயிலாய்த் தபால்மார்க்கம் ஏற்படின் கடிதமூலமாய் இரண்டு வாரத்தில் கிடைக்கக்கூடிய சமாசாரம் இரண்டு நாட்களுக்குள் கிடைக்கும். இனி, தந்தி எவ்வளவு சீக்கிரமாய்க் கிடைக்கின்றதோ அவ்வளவு சீக்கிரமாய்க் கடிதத் தபாலும் கிடைக்கப் பெறலாம், இப்பிரபஞ்சம்.

வியாபாரத்தை விருத்தி செய்வதற்கு மாற்றுப் பொருள் ஒன்று தேவை. தற்காலத்தில் நமக்கு யாதாமோர் பொருளைக் கொள்ளவேண்டுமெனின் நாணயம் என்ற திரவியத்தைக் கொண்டு அதை வாங்குகின்றோம். நாணயம் என்பது அரசாங்கத்தாரால் செய்யப்பட்ட செலாவணிக்குரிய ஓர் வஸ்து. நாணயங்கள் தாதுவர்க்கங்களினாலும் காகிதத்தினாலும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இத்தகைய ஏற்பாடு எக்காலத்திலும் எல்லாத் தேசங்களிலும் உள்ளதாவெனின் "இல்லை" எனலாம். ஏனென்னின் இன்றைக்கும் இவ்வுலகில் வசிக்கும் சில மாந்தர்கள் தங்களுக்கு வேண்டிய பொருளை வேறோர் பொருளைக் கொடுத்தே பெறுகின்றனர். அஃதாவது வாங்குகின்றவர்களும் விற்கின்றவர்களும் ஒருவர்க்கொருவர் சம்மதப்பட்டு எந்தப் பொருளுக்கு எந்தப் பொருளை மாற்றிக்கொள்வது என்று நிச்சயித்துக்கொள்வதுதான். இவ்வாறு செய்வது சில ஜனங்களிருக்கின்ற இடங்களிலும் சில பொருள்களே உபயோகப்படுத்தப் படுகின்ற இடங்களிலும் சாத்தியமானது. ஜனங்கள் அதிகமாய் வசிக்குமிடங்களிலும் பொருள்கள் அதிகமாய் உபயோகப்படுத்தப் படுமிடங்களிலும் ஒவ்வொரு வஸ்து வேண்டிய போழ்தும் அதற்குத் தகுதியான மாற்றுப்பொருளைத் தேடி நிச்ச-



யிப்பது மிக கஷ்டமான காரியமாகும். ஆனதினால் பொதுவாய் ஒரு வஸ்துவை நிர்ணயஞ் செய்துகொள்வது சகஜம். இத்தகைய வஸ்துக்கள் பலவிருக்கின்றன. பலகரை, தந்தம், முதலிய அநேக பொருள்கள் கூறப்படலாம்.

வேட்டையாடும் நிலைமையிலுள்ளவர்களுக்கு ஆபரணங்களுக்குதவியான சிறகுகளும், பற்களும், எலும்புகளும் சில மிருகங்களின் தோல்களும், மாற்றுப்பொருள்களாக இருக்கின்றன எனத் தெரிகின்றது. வியவசாய தசையை யடைந்திருப்பவர்கள் ஆடுமாடுகளை மாற்றுப் பொருளாக ஏற்றுக்கொள்வது சகஜம். ஆடுமாடுகள் அழியக் கூடியவைகளானாலும் அவைகளின் மதிப்பு அடிக்கடி மாறக் கூடியதானாலும் தானியங்களை உபயோகப் படுத்துவது சௌகரியம் என நார்வே முதலிய சில இடங்களில் கருதப்படுகின்றது. ஒருகாலத்தில் வட அமெரிக்காவில் புகையிலையே மாற்றுப் பொருளாக வழங்கி வந்தது. ஆஸ்டிரேலியாவில் ஒருவிதப் பளபளப்பான நிறமுள்ள கல்லை மாற்றுப்பொருளாக வைத்துக்கொண்டிருக்கின்றனராம் சில காட்டு மனிதர்கள். பிறகு அபிஸீனியா மெக்ஸிகோ, முதலிய சில இடங்களில் உப்பு, கந்தகம் முதலிய தாதுவர்க்கங்கள் நாணயங்களாக வழங்கிவருகின்றன. இவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குறையுண்டு. ஆனதினால் மானிட வாழ்க்கை பெருகப் பெருக உலோகங்களின் மேன்மையினால் இரும்பு, தாம்பிரம், வெள்ளி, தங்கம் முதலியவைகள் உபயோகத்திற்கு வரலாயின.

இதனால் மாற்றுப்பொருள்கள் மானிடர்களது நாகரிக தசைக்குத் தக்கவாறு மாறிவருகின்றன என்பதும் ஒவ்வொரு வஸ்துவின் குறைகள் இன்னதென்று அனுபவத்-

தால் தெரிந்துகொண்டு அதற்குமேலான பொருளைத் தேடிக்கொண்டனர் என்பதும் தெரிகின்றன.

வியவசாய நிலைமையை யடைந்தவர்களுக்குள் ஆடு மாடுகள் மாற்றுப் பொருள்களாய் விளங்கினவெனச் சரித்திர மூலமாய்த் தெரிகின்றது. ஆங்கிலத்தில் "பிகூனியரி (Pecunsary) என்ற மொழி "தனசம்பந்தமான" எனப் பொருள் கொடுக்கின்றது. அம்மொழி ரோமன் பாஷையிலுள்ள "பிகூனியம்" (Pecunium) ஆடு மாடு என்ற பொருள் கொண்ட மொழியினின்று மருவியது. கோதனம் என்கிற ஸம்ஸ்கிருதபதமும் இத்தகையதே என்றுக் கூறலாம். ஆதலால் ஒரு காலத்தில் கோவே மாற்றுப் பொருள் அல்லது திரவியமாய் நடைபெற்று வந்ததெனச் சொல்வர் பதனியலாசிரியர்கள். ஆனால் ஆடுமாடுகள் உயிருள்ளவையானபடியால் அவைகளைக் கொண்டு அளவு ஏற்படுத்திக்கொள்வதில் பல குறைகளான மாடுகளின் வயது, அளவு, பருமன், வர்ணம், முதலியவைகளின் பேதங்களினால் கிரய விக்கிரயஞ் செய்வோர்களது அபிப்பிராயம் நிச்சயமாக வேண்டும். மேலும் அவைகள் பிராணிகளா கையால் நசிக்கக் கூடியவைகள். அவைகள் ஜீவராசியானபடியால் ஆகாரத்தை அபேக்ஷிக்கின்றவைகள். ஆதலால் அசேதன வஸ்துக்களைத் தேடிக் கொண்டனர் போலும்.

உலோகங்களினுபயோகம் மனிதர்களுக்குத் தெரிந்த காலம் முதல் அவைகள் நாணயங்களாக வெளித்தோன்றலாயின. இரும்பை முதலி லுபயோகிக்கையில் இரும்பு துருப்பிடித்து அழுக்கைத் தருவதாலும் அது ஏராளமாய்க் கண்டுபிடிக்கப் பட்டகாலத்தில் மதிப்பு குறைந்து



விட்டதாலும் அதைவிட மதிப்பதிகமான வெள்ளியும் தங்கமும் உபயோகப்படுத்தப் படலாயின. ஏனெனில் வெள்ளியும் தங்கமும் சுபாவத்திலேயே பளபளப்புற்றவை. இயற்கையில் சுலபமாய்க் கிடைக்கப்படுவன. ஆகையால் அவற்றிற்கு மதிப்பதிகம். இவ்விரு வஸ்துக்களுக்குள்ளும் தங்கம் வெள்ளிக்கு மிக மேலானபடியாலும் குறைவாய்க் கிடைக்கிறபடியாலும் அதற்கு விலையதிகம். உலோக நாணயங்கள் செய்யப்பட்டகாலம் முதல் மாற்றுப் பண்டம் சுலபமாய் விட்டபடியால் வியாபாரம் அதிகரிக்க இடமுண்டாயிற்று. இந்நாணயங்களைச் செய்வதில் மோசஞ் செய்ய நேரிடமுண்டானதால் அரசாங்கத்தவரே நாணயங்களின் சட்டதிட்டங்களைக் கைப்பற்றலாயினர். அரசாங்கத்தினர் நியாயமாய் நாணயங்களை வெளிப்படுத்தும் வரையில் வியாபாரத்திற்குக் குறை வேற்படாது. இந்நாணயங்களில் உண்டாகும் சில மோசடிகளால் தான் சிலநேரங்களில் நாணயத்திற்குக் குறைவுண்டாகின்றது. வியாபாரம் நலிவடைகின்றது.

நாணயங்கள் விருத்தியான காலம் முதல் வியாபாரத்திற்கு உபயோகமான தனநிதிகளும் தோன்றலாயின. தனநிதிகளால் இன்று உலகத்திலுள்ள எல்லாப் பாகங்களிலும் நடக்கும் வியாபாரங்கள் கட்டுப்பட்டு நிற்கின்றன. அவைகளின் வாயிலால் தான் எக்ஸ்சேஞ்ச் "Exchange" எனப்படும் வியாபார நாணய மாற்று முறை நடைபெற்று வருகின்றது.

## (12) ஊழியம்.

அநேக ஜீவனோபாயங்களுள் ஊழியஞ் செய்து ஊதியம் பெற்று வயிர்வளர்ப்பது மிகத் தாழ்ந்த முறை என்பது நம் நாட்டினரது மனப்பான்மை என்று "அதமம் சேவகாவிருத்தி" என்கிற பழமொழியினால் தெரிகின்றது. ஆனால் மேனாட்டார்கள் ஊழியத்தின் கௌரவத்தை வெகு விமர்சையாய்ப் புகழ்கின்றனர். இவ்விரண்டு அபிப்பிராயங்களின் உண்மையைக் கவனித்திடின் மானிடர் முன்னேற்றம் வெளியாகு மென்பது நம் கருத்து. பிறவி வறுமை நிலைமையி லிருப்பவனுக்குப் பிறரைத் தொழுது ஊண் தேடுவதையல்லால் வேறு கதி இங்கெங்கிருக்கின்றது? தொழுதூண் சுவையின் உழுதூணினிது என்பது அதற்கு ஆதாரமான பூமி பயிரிடாமல் ஏராளமாய்த் தங்கி நின்றகாலத்தில் உண்மையேயாகும். ஆனால் குடிகள் அதிகமாய்ப் பெருகிட மூலைமுடுக்கிலுள்ள புலன்களையெல்லாம் பயிரிட்டும் உணவு போதாவிடின் ஊழியஞ் செய்யாது வேறென் செய்வது? ஒருகால் வியவசாய சம்பந்தமான ஊழியம் சேவகாவிருத்தியில் சேர்க்கப்படாவிடின் மேற்கண்ட வசனம் உண்மையாகும். வியவசாயத்திற்குச் சாதகமான கைத்தொழில்கள் சில உள. அவைகள் நம் தேசத்தில் வெகுகாலமாய்த் தனித்தனி ஜாதிக்குரியவைகள் என ஏற்பட்டுவிட்டன. ஆதலால் ஜனங்கள் மிகுதியானகாலத்திலும் தம் ஜாதித் தொழிலையே நடத்தவேண்டி யிருந்ததனால் அதில் ஊதியம் கிடைக்காவிடில் ஊழியஞ் செய்துதான் ஜீவிக்கவேண்டும்.

முற்கூறிய தொழில்களைத் தவிர, மத சம்பந்தமான தொழில்கள் நமது நாட்டில் அதிகமாய்ப் பரவி வந்தன.



ஆனால் அவைகளும் ஒரு ஜாதித் தொழில்களாய் விளங்கலாயின. ஆகையாலே பிராம்மணர்கள் என்பவர்களுடைய புரோகித விருத்தி சேவகாவிருத்தியில் சேர்க்கப்படுகின்றதில்லை. ஆனால் இந்த விருத்திக்கு வேண்டிய கல்வியும் பயிற்சியும் பெறாதவர்கள் ஊழியஞ் செய்யவேண்டியவர்கள்தான். அல்லது அந்த விருத்தியை இழிவாய்க் கருதுகின்றவர்களும் வேறு தொழில் செய்யவேண்டியவர்கள்தான். இதனால் பரிசாரகம் முதல் எத்தொழிலையும் நாளடைவில் புரியலாயினர் போலும். நமது நாட்டின் பண்டைக்காலத்திய முறைப்படி கல்விகற்பிக்கும் ஆசிரியர்களுக்குச் சிஷியர்கள் பணிவிதொண்டுசெய்ததனாலும் அவர்களுக்கு வேண்டிய பொருள்களைத் தேடிக் கொடுத்தமையாலும் ஆசிரியர்களும் சுவல்பபொருள்களைக் கொண்டே திருப்தியடைந்தமையாலும் உபாத்தியாயர்களது தொழில் சிறந்ததாயிற்று. ஆனால் இத்தொழிலையும் அநேகமாய்ப் பிராம்மணர்களே வெகு காலம் புரிந்துவந்தனர். திராவிடபாஷைகள் பேசப்பட்ட நாடுகளில் பலஜாதியார்களும் ஆசிரியர்களாய்த் தோன்றியிருந்தனர் என்பதைப் பலவிதமாய்க் கண்டுகொள்ளலாம். யாவரேயாயினும், குருகுலம் பெரும்பாலும் முற்கூறப்பட்டது போலவே ஓங்கினின்றது. ஆனால் உபாத்திமைத் தொழில் எக்காலம்முதல் ஊழியத் தொழிலென மதிக்கப்படத் தொடங்கியதோ வென்பதை யார் அறிவார்?

நம் நாட்டில் பிச்சை யெடுப்பதும் ஒரு தொழிலாய் வளர்ந்து வருகின்றது. இதற்குக் காரணம் நமது நாட்டினர் பாத்திரம் அபாத்திரம் என்கிற விசாரணையின்றி "ஐயமிட்டுண்" என்று ஆன்றோர்கள் கூறியிருக்கின்றனர் என்று

சருகிப் பண்டாரம் முதல் "குடுகுடுப்பாண்டி" வரையுள்ள பிச்சைக்காரர்களை ஆதரித்துவந்தனர். இப்பொழுதும் அவ்வழக்கம் தொடர்ந்து வருகின்றது. நமது ஆசியா கண்டத்திலேயே இம்மாதிரியான தர்மம் அதிகம். ஆதலால் பிச்சைக்காரர்களிற் சிலர் அதிகாரஞ் செய்வது கௌரவமென நினைக்கின்றனர். ஐரோப்பாவில் ஓர்காலத்தில் பிச்சையெடுப்பது சாதாரணமாயிருந்ததாயினும் சில நூற்றாண்டுகள் முன்னரே இத்தொழிலை நிறுத்துவதற்கான சட்டங்களையும் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்திக் கொண்டனர்.

ஐரோப்பாவிலும் மத சம்பந்தமான குருமார்கள் தொழில் ஏற்பட்டிருப்பினும் அது ஒரு ஜாதியைப் பற்றினதல்ல. ஆகையால் அதுவும் ஒரு உத்தியோக முறையாய் நிற்கின்றது. மேனாடுகளிலும் தொழில்களிற் சிலவற்றைக் கௌரவமானவை எனவும் சிலவற்றை அகௌரவமானவை எனவும் நினைக்குந் தன்மை நீண்டகாலமாய்த் தொடர்ந்து வந்தபோதிலும் அத்தொழில்கள் ஜாதியைப் பின்பற்றாததனால் நாள் செல்லச் செல்லத் தொழிலின் கௌரவம் என்கிற எண்ணம் அதிகமாய்ப் பரவிநிற்கின்றது. ஆதலால் பழைய எண்ணங்கள் பெரும்பான்மையாய் மாறிவிட்டனவெனலாம். நமது நாட்டிலும் சற்றேறக்குறைய இந்த விஷயத்தில் சீர்திருத்தம் தானாய்த் தோன்றிக்கொண்டு வருகின்றது. ஊழியஞ்செய்வது சாலவுநன்று என்ற எண்ணம் முற்றிலுந் தோன்றுவது மானிடர் முன்னேற்றத்திற் கறிகுறியாகும்.

ஊழியஞ்செய்வது இழிவென்னும் எண்ணம் உலகில் எங்ஙனம் தோன்றியிருக்க வேண்டுமெனின் அது "அடிமை" என்பது உலகில் தோன்றியகாலம் முதல்



தோன்றியிருக்க வேண்டும் என்னலாம். மானவர்கள் தத்தமக்கு வேண்டிய வேலைகளைத் தாமே செய்து கொண்டிருக்கும் மனிதக் கூட்டங்களில் அடிமைகளாவது ஊழியஞ் செய்கின்றவர்களாவது கிடையாது. வேட்டையாடுஞ் ஜாதர்கள் அந்நிய வகுப்பார்களுடன் சண்டையிட நேரிடின் அச்சண்டையில் ஜயித்தவர்கள் தோல்வியடைந்தவர்கள் பக்கத்து ஸ்திரீகளையும் புருஷர்களையும் அடிமைகளாக்கி அவர்களிடமிருந்து வேலைவாங்க ஆரம்பித்தது ஊழியத் தொழிலுக்கு முதற்படியென்று தோன்றுகின்றது. ஆபிரிக்காவில் அடிமை ஸ்திரீகளை ஊழியத்திற்காளாக்கி வைத்துக்கொண்டிருப்பதை இன்றைக்கும் பார்க்கலாம். அவர்கட்குச் சுவதந்திரமே கிடையாது. அவர்களை ஆடுமாடுகளைப்போல் துன்பத்துக்காளாக்கி அவர்களிடமிருந்து ஊழியம்பெறுவதனால் ஊழியமும் அடிமைத் தொழிலும் சமமென நினைப்பது சகஜமேயாகும்.

சமூக வாழ்க்கையையடைந்த மனிதர்கள் அடிக்கடி யுத்தஞ் செய்ய நேரிட்டக்கால் போரில் பிடிக்கப்பட்டவர்களில் சிலர் அடிமைகளாக்கப்படுவது வழக்கம். மேலும் அராபியர்கள் போன்ற சில ஜாதியார்கள் சிறுவர்களையும் சிறுமியர்களையும் ஆண்மக்களையும் பெண்டிர்களையும் பலவிதமாய்க் கைப்பற்றி ஆடுமாடுகளைப்போல் அநேக நூற்றாண்டுகள் வியாபாரஞ் செய்யலாயினர். வறுமையினால் வருந்தும் மாந்தர்கள் தாமே தம்மை விற்றுக்கொள்வதும் அல்லது தங்குழந்தைகளை விற்றுவிடுவதும் உண்டு. இவ்வாறு அடிமைத் தொழில் விருத்தியாக விருத்தியாக ஊழியஞ் செய்பவர்களுக்குக் கஷ்டமேற்பட்டது. ஏனெனின் ஊழியஞ் செய்து ஜீவனஞ் செய்யவும் தொழில் கிடைக்

காது. பண்டைக்காலத்திய ராஜ்யங்களில் அடிமைகள் என்பவர்கள் அதிகமாயிருந்தனர் என்பது நமக்குத் தெரியும். எகிப்து, ரோம், அசைரியா முதலிய நாடுகளில் எண்ணிறந்த அடிமைகள் இருந்தனர். ஆனால் இந்தியாவில் அடிமைகள் நன்கு நடத்தப்பட்டு வந்தனர் என்பதற்கு ஆங்கிலேயர்களே சாக்ஷியாவர். சரித்திர மத்தியகாலத்தில் கிறிஸ்தவர்கட்கும் மகம்மதியர்கட்கும் நடைபெற்ற "க்ரூஸேட்ஸ்" என்ற போர்கள் ஏற்பட்டகாலத்தில் ஐரோப்பாவில் பல நாடுகளிலும் அடிமைகள் விக்கிரயங்களுக்கு யோக்கியமாயிருந்தனர். ஆயினும் அக்காலத்தில் கிறிஸ்தவ மதசம்பந்தத்தால் அடிமை வியாபாரம் சற்று அடங்கியிருந்தது. பிறகு அமெரிக்காகண்டம் கண்டுபிடிக்கப்பட்டு ஐரோப்பியர்கள் குடியேற்றநாடுகளை நாடினதுமுதல் அவர்கள் சென்ற விடங்களில் வேலை செய்வதற்கு அடிமைத் தொழிலாளர்களை அதிகமாய் வாங்கலாயினர். அடிமைகளது ஊழியம் அவசியமானதால் உலகம் முழுவதையும் அது ஆக்கிரமிக்கலாயிற்று. ஆனால் கருணைக்கடலான வில்பர்போர்ஸ் (Wilberforce) என்பவரைப்போன்றவர்கள் அடிமைகள் படுங் கஷ்டத்தையும் அவர்களது ஈனதசையையும் கண்டு மனமுருகி அடிமை வியாபாரத்தையும் நிறுத்தி அடிமைகளையும் யதேச்சையாய் நடக்கும்படி விடுதலை செய்ய ஏராளமான பொருள் செலவிட்டு அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் சட்டங்கள் செய்யலாயினர். ஆயினும் இங்குமங்கும் மேனாட்டார்களது மேற் பார்வையில்லாத விடங்களில் இன்றைக்கும் அடிமை வியாபாரம் நடந்துவருகின்ற தென்னலாம். அடிமைத் தொழில் நின்றாலும் ஊழியத்தின் இழிவு. அதைவிடாமல்



இன்றைக்கும் பிரசித்தமாயிருக்கின்றது. எங்ஙனமாயினும் மேனாடுகளில் ஊழியத்தொழில் கௌரவமடைந்து வருகின்றதென்பது நிச்சயம். வீட்டுவேலைக்காரனும் வேலைக்காரிகளும் கடமையைச் செலுத்தும் பொழுதுமட்டில் எஜமானனுக்குக் கீழ்ப்படிந்திருந்து பிறகு தனக்குத்தான் எஜமானராய்த் திரிகின்றனர் எனச் சொல்லப்படுகின்றது.

இதுவரை ஊழியம் என்பதற்கு சேவகா விருத்தியென்ற அடிமைத் தொழிலையே முக்கியமாய்க் கவனித்தோம். ஆனால் அது பலபாகு பாடுகளுடைய தென்பதற் கையமில்லை. வீட்டுவேலைக்காரன் முதல் மந்திரி வரையில் எல்லோரும் ஊழியக்காரர்கள் தான் என்பது மேனாட்டாரது கொள்கை. அஃதாவது ஒவ்வொரு தொழிலும் அவரவரது சாமர்த்தியத்திற்குத் தக்கவாறும் அனுபவத்திற்குத் தக்கவாறும் வேலைக்குத் தக்கவாறும் ஊதியம் பெறுகின்றார்களே யன்றிக் கடமையைச் செலுத்தும் விஷயத்தில் எல்லோரும் அவரவர்கடமைக் குட்பட்டவரைச் சுவதந்தர முடையவர்களென்று சொல்லப்படுகின்றது. இஃது உண்மையாயின் இவ்விஷயத்திலும் மானிடர் முன்னேற்றம் அடைந்துளர் என்பதில் ஐயமில்லை. ஊழியம் செய்கின்றவர்களும் எஜமானர்களும் தம்தம் கடமையைச் செலுத்தினால் சேவகன் எஜமானன் என்கிற வித்தியாசம் காலவளவிலற்று விடலாம்.

ஆட்சி முறை தொடங்கிய காலம் முதல் ஒவ்வொரு ஜன சமூகத்திலும் ஊழியக்காரர்கள் பலர் தேவையாயினர். தலைவனாவது அரசனாவது ஒருவனே எல்லா வேலையுஞ் செய்தல் சாத்தியப்படாது. சிறிய ஜனசமூகத்திலும் ஜன

ரக்ஷகர்களும் நியாயாதிபதிகளும் அவசியம் வேண்டும். குடிகள் குற்றஞ்செய்யாமலிருக்குமாறு சரியான ரக்ஷகர்கள் தேவை. அல்லது குற்றஞ் செய்பவர்களைக் கண்டு பிடித்து அவர்களைத் தண்டிப்பதற்கு நியாயாதிபதிகள் தேவை. தலைவனே நியாயாதிபதியாயிருந்திடினும் ஆனாசுதர்கள் அவசியம் வேண்டும். சத்துருக்களை அணுகவொட்டாமல் தளவாடங்களுடன் கூடிய சைனியம் தயாராயிருக்கவேண்டும். இவ்வூழியக்காரர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டிய பொருளைக் குடிகளிடமிருந்து வசூல் செய்ய உத்தியோகஸ்தர்கள் தேவை. இங்ஙனம் சமூக வாழ்க்கை பெருகப் பெருக வேலை செய்ய ஆட்கள் அதிகம் வேண்டும்.

ராஜ்ய தந்திர விஷயங்களில் அரசனுக் குதவிசெய்ய அமைச்சர்களும் ஒற்றர்களும் அவசியமானவர். அவர்களுக்குத் தக்க உதவி உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட வேண்டும். இவ்வாறு அனேக வேலைக்காரர்களை ஒரு ராஜாங்கத்தில் ஏற்படுத்த வேண்டியிருக்கின்றது.

சோட்டி முதல் தொண்டமான் வரையில் படிப்படியான ஒரு நிலைமையும் சம்பளமும் பெற்ற உத்தியோகஸ்தர்கள் அநேக நூற்றாண்டுகளாய் ஒவ்வொரு ராஜ்யத்திலும் தோன்றியிருக்கின்றனர். அவர்களது பதவியும் அந்தஸ்தும் எக்காலத்தும் மதிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் மேற்கூறியவாறு தொழில் வித்தியாசங்கள் தற்காலத்தில் மாறிக்கொண்டு வருவதுடன் மேனாட்டார் துரைத்தனத்தில் அமர்ந்திருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு வேலை நிரந்தரமாயிருப்பதுடன் வயதுசென்ற காலத்தில் வேலையை விட்டு வீட்டுக்குப் போகுங்கால் உபகாரச் சம்பளமும் கிடைக்கின்றது. வேலை வாங்கும்



உத்தியோகஸ்தர்கள் கொடுமை செய்திடினும் துராகிருதமாய் வேலையை விட்டு நீக்கிவிடினும் துரைத்தனத்தாரிடம் மனுசெய்து நியாயம் பெறலாம். ஆனால் துரைத்தனத்தாருடைய சேவகத்தைத் தவிர வேறு சேவகாவிருத்தி செய்தால் அநேக ஆபத்துகள் உண்டு. இஷ்டப்படி வேலையை விட்டு நீக்கப்படலாம். மாற்றப்படலாம். இங்ஙனமே அநாகரிக நிலைமையிலுள்ள ராஜாங்கங்களில் நடைபெறும்.

நாகரிகத்தை யடைந்தவர்களது ஆக்ஷியில் சட்டம் (Law) என்பது முதல்தரமான காப்பு. அரசன் சட்டங்களின் முறைபாகவே அமுல் செலுத்தவேண்டும். தாழ்ந்த வேலைக்காரனாயினும் உயர்ந்த அதிகாரியாயினும் அவன் கடமையிற் குற்றம் புரிந்திடின் சட்ட விதிகளின்படி சிக்ஷிக்கப்படுவான்.

நாகரிக துரைத்தனத்தில் ஊழியஞ் செய்பவர்களுக்குச் சில சுவதந்திரங்களுண்டு. கேவலம் அடிமைத் தொழில் என்பது அநேகமாய் ஒத்துக்கொள்ளத் தக்கதல்ல. மானிடவாழ்க்கை குறைவுற்றதனால் இவ்விஷயத்திலும் குறைகளுள வென்பதைத் தவிர வேறில்லை.

பொதுவாய்ப் பார்க்குமளவில் பிறரிடத்தில் தொழில் புரிவது கஷ்டந்தான்; ஆனால் பண்டைக்காலத்திற்கும் தற்காலத்திற்குமுள்ள வித்தியாசங்களைச் சீர்தூக்கிப் பார்க்கின் வேலை செய்பவர்களுக்குத் தற்காலத்தில் சுவதந்திரம் அதிகமாய்க் கொண்டுவருகின்ற தென்பதை மறுக்கமுடியாது. ஊழியஞ் செய்பவர்கள் தமது சுவதந்தரத்தை எவ்வளவுக் கெவ்வளவு மதிக்கின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு அது விருத்தியாவதற்கிடம் இக்காலத்திலுண்டு.

தன் கடமையை ஒழுங்காய் நடத்தி, பின்னர் அதனால் கெடுதி வந்தாலும் அதை யனுபவிக்கத் தயாராய் நிற்கின் தர்மம் தலைகாக்கும். ஊதியம் பெற்று ஊழியஞ்செய்திடினும் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றிக் கடமையைச்செலுத்துவது மானிடர் மேம்பாட்டுக் கல்திவாரமாகும். ஊதியத்திற்காகவே உழைப்பதென்பது அறிவீனமாகும். நாம் எவ்வித ஊழியத்தையும் சரிவர நடத்தி அப்படி நாம் செய்வதனால் நம் நாட்டினது நிர்வாகத்தை நிறைவேற்றச் சகாயஞ் செய்யும் கருவி நாம் என்கிற எண்ணம் ஒவ்வொருவருக்கு மிருக்கின் அதுவே ஊழியத்தின் கௌரவமாகும்.

நிற்க, பிரதி பிரயோஜனத்தை எதிர்பாராமல் ஜன சமூகத்தின் பயனைக் கருதி செய்யும் பொதுநல ஊழிய உணர்ச்சி தோன்றி நிற்பதும் மானிடர் முன்னேற்றமே. ஆரியர்களது இந்திய வாழ்க்கையில் இந்த உணர்ச்சி யிருந்ததென்பதைப் பஞ்சாயத்து சபைகளின் அங்கத்தினர், சத்திரம், ஆலயம் முதலியவைகளின் தர்மகர்த்தர்கள், பொது தர்மமியற்றுவோர் என்பவைகளால் தெரிந்து கொள்ளலாம். ஆதிகாலத்தில் கல்வியைப் பிரதிபிரயோஜனமின்றி தானஞ் செய்ததாய்த் தெரிகின்றது. இதனாலன்றோ உபாத்தியாயரது தொழில் மேன்மையுற்றதா யிருந்தது. மேனாடுகளில் பிரதி பிரயோஜனத்தை எதிர்பாராமல் செய்யும் பொதுநல ஊழியம் எண்ணிறந்த வழியாய்ப் பரவி வருகின்றது. இங்கிலாந்திய மகாஜனசபை (Parliament) ஏற்பட்ட காலம் முதல் அங்கத்தினர்கள் எல்லோரும் கௌரவ ஊழியக்காரர்களாகவே யிருந்து வருகின்றனர். [ஆயினும் சென்ற சில வருஷங்களாய் ஊதியம் பெற்றுக்



கொள்ளலாம் என்கிற முறை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் இங்ஙனம் ஊதியம் பெறுபவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ளவர்களே.] தேச ஆக்ஷி நிர்வாக சபைகளில் அங்கத்தினராய் நின்று தம் தேசத்திற்கு வேண்டிய நன்மைகளைச் செய்வது சிறந்த பொதுநல ஊழியமாம். அல்லது வேறெவ்விதமாகச் செய்திடினும் சரியே. ஆனால் நாம் கௌரவமடையவேண்டுமென்றும் கௌரவப் பட்டங்களுக்காகவாவது வேறெவ்வித பலத்தை யுத்தேசித்தாவது ஊழியஞ் செய்வது இரண்டாம் பக்ஷந்தான்.

இத்தகைய ஊழிய உணர்ச்சியினால்தான் நமது தேசத் தொண்டர்கள் சிலர் தமது வருவாயையும் ஆஸ்தியையும் சௌகரியத்தையும் இனையவற்றையும் பாராட்டாமல் அனேக அவமானங்கள் நேர்ந்திடினும் அவைகளையும் பாராட்டாமல் கஷ்ட நிஷ்டூரங்கட் குட்பட்டுப் பாடுபட்டு வருகின்றனர். அன்னோரது பொதுநல ஊழியத்தினாலன்றோ தேசத்தின் பெருமை வெளிக் கிளம்புகின்றது. இவ்வுணர்ச்சியுடையோர் உலகில் அதிகமாகி வருவது மானிடர் முன்னேற்றத்திற் சரிகுறியாகும். மேலும் தனவான்கள் தம் பொருளுதவியால் தேசத்திற்கு ஊழியஞ் செய்வது பாராட்டத்தக்கது. பள்ளிக்கூடங்கள் ஆஸ்பத்திரிகள் ஆலயங்கள் முதலியன ஸ்தாபிக்கவேண்டிய தனத்தை யளித்து சாசுவதமாய்த் தர்மம் நடைபெறுமாறு செய்வது பெரும் பொதுநல ஊழியமாம். உலகில் தம் உயிரைக் கொடுப்பினும் பொருளைக் கொடுக்க மனம் வாராதவர்கள் பல ரிருக்கின்றமையால் பொருளுதவியால் ஊழியஞ் செய்வதும் ஒரு தேசத்திற்கு முக்கியமானது. தனக்கு மிஞ்சித் தர்மம் என்பதோர்

பால் நிற்க உடல் பொருள் ஆவி மூன்றையும் உலகத்திற்கே உபயோகப் படுத்துவது சிறந்த ஊழியமுறை யாகும்.

எல்லாவற்றிற்கு மேலாய் தம் இனத்திற்கு மட்டிலாவது தன் தேசத்திற்கு மட்டிலாவது ஊழியஞ் செய்ய வேண்டுமென்கிற நோக்கமின்றி உலகத்திலுள்ள எல்லோரையும் சகோதரபாவமாய் நினைத்து எல்லா ஜாதியார்களுக்கும் எல்லா தேசத்தாருக்கும் எல்லா மதஸ்தர்களுக்கும் ஊழியஞ் செய்யவேண்டுமென்பதும் மானிடர் முன்னேற்றமே. ஏனெனில் சிலர் தம் இன அபிமானம் தம் தேச அபிமானம் தம் மத அபிமானம் முதலிய குறுகிய நோக்கத்துடன் வேறு யாருக்கும் உபகாரஞ் செய்யக்கூடாதென்கிற எண்ணம் ஓர் காலத்தில் அதிகமாயிருந்தது. முக்கியமாய் நம் நாட்டில் சைவர்களுக்கு மட்டுமென்றும் வைஷ்ணவர்களுக்கு மட்டுமென்றும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பல தர்மங்களைக் குறிப்பிடலாம். பிராம்மணர்களுக்கு மட்டும் தர்ம அன்னசத்திரம் என்பதையும் குறிப்பிடலாம். இம்மாதிரியான பல உதாரணங்கள் அன்னிய நாடுகளிலிருந்து எடுத்துரைப்பது அவசியமன்று என இவ்விஷயத்தை ஈதுடன் நிறுத்திவிடுவோம்.

---

## (14) சமூக வாழ்க்கையும் ஆட்சி முறையும்.

மானிடர்கள் சமூக வாழ்க்கைக்குரிய குணங்களை யுடையவர்கள் என்றும் அவர்கள் அத்தகைய வாழ்க்கையினால்தான் நாகரிக நிலையை அடையக் காரணமாயிற்றென்றும் மானிட சாஸ்திரிகள் கூறுகின்றனர். யானை முதலிய சில மிருகங்கள் கூட்டங் கூடி வாழுந் தன்மை



யுடையனவென்றாலும் மானிடர்கள் ஒன்றுகூடி சமூக வாழ்க்கையில் வசிப்பதினாலாய பயனை யடைவதைப்போல் அவைகள் அடைவதில்லை. மிருகங்கள் மந்தைகளாய்த் திரிவது சத்துருக்களிடம் அகப்படாமல் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவே. மாந்தர்களும் ஒருகால் ஆதியில் அதே நோக்கத்துடன் ஒன்றுகூடி யிருந்திருக்கலாம். ஆயினும் மானிடர் படிப்படியாய் மிருகபாவங்களை யொடுக்கிப் பொதுநலத்தைக் கோரி சுகவாழ்வைத் தேடிக்கொள்வதே அவர்கள் சமூக வாழ்க்கைக்கு இறுதிப் பயனாகும். அவர்கள் சமூக வாழ்க்கையைத் தேடுமுன் அநேக நூற்றாண்டுகள் வெவ்வேறு தனித்தனி நிலைமையில் தங்கிக் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு வாழ்நாட்களை ஒற்றுமைப்படுத்திக்கொண்டு அனுபவத்தால் முன்னேற்றமடைந்துவந்தனர் என்று நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

பக்ஷிகளாயினும் மிருகங்களாயினும் மானிடர்களாயினும் எல்லா ஜீவராசிகளும் ஆணும் பெண்ணும் ஒன்றாய்ச்சேர்ந்து சற்று நேரமாயினும் நீண்டகாலமாயினும் வசிப்பது இனப்பெருக்க இச்சையினால்தான். ஆனால் இதர ஜீவராசிகளைப் போலன்றி மானிடர்கள் குடும்பப்பற்றுள்ளவர்களாவர். ஆபிரிக்காவில் சில குரங்கு ஜாதிகளும் குடும்பப் பற்றுள்ளவைகளாய் வசிக்கின்றன வென்றும் சொல்லப்படுகின்றது. ஆனால் அக்குரங்கு சாதி சற்றேறக்குறைய மானிடவினத்தைச் சேர்ந்ததேயெனக் கூறலாம். மேனாட்டுப்பரிணாம வாதிகளின் கொள்கைப்படி குரங்குசாதி மனிதனுடைய பூர்வ சன்மங்களின் ஒன்றே. அக்குரங்குசாதிக்கும் மனிதனுக்கு மிடையில் ஒருவித ஜீவராசி இருந்திருக்க வேண்டுமென்றும், அந்த ஜீவராசி

யானது ஆசியாவில் சந்தத்தீவுகளில் ஒன்றாகிய ஜாவாவில் ட்ரினில் (Trinil) என்ற விடத்தில் டூபாய் (Dubois) என்பவரால் 1891-வது ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்ட அஸ்திகளுக்கு ஆதாரமான மனிதனைப் போன்றதென்றும் ஜாவாப்பிரதேசத்தில் தான் மக்கட்பூண்டு உற்பத்தியாயிருக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகின்றன. மேலும் ஆதியில் இவ்விடத்திலிருந்தே மனிதர்கள் உலகம் முற்றிலும் பரவினர்களோ அல்லது உலகில் பலவிடங்களில் ஆங்காங்கு மனிதர்கள் தோன்றி வளர்ந்தனர்களோ என்பதை மக்கட் பூண்டு என்ற நூலில் வெளியாக்க உத்தேசித்து அதை நிறுத்திவிட்டு சமூகவாழ்க்கையின் முன்னிலைமையையும் அதன் அபிவிருத்தியையும் ஈண்டுக் கவனிப்போம்.

சரித்திர பூர்வகால மனிதர்களைப் பற்றி நமக்குத் தெரிந்தவரையில் பொதுவாய்ப் பார்க்குமளவில் அவர்கள் ஆதியில் வெகுகாலம் இயற்கை நடவடிக்கையில் வாழும் விலங்குகளைப் போல் உணவு உறக்கம் முதலிய ஜீவாதிகளுக்குச் சாமானியமான தொழிலைப் புரிந்து, தற்காலத்திலும் சில விடங்களிற் காணப்படும் மாக்களைப் போல் குகைகளிலும் மரங்களின் நிழல்களிலும் வசித்துக்கொண்டிருந்து, சிலகாலம் சென்றபிறகு தங்களுக்கு வேண்டிய கற்களாலும் உலோகங்களாலும் ஆயுதங்களைச் செய்து கொண்டு, கிராதர்களாய் அநேக காலத்துக்குப்பின் தங்களிடமிருக்குங்கால் மனிதர்களுடன் பழகுவதற்கு யோக்கியமான மிருகங்களை மேய்த்துக் கொண்டு ஆயர்த் தொழிலை நடத்தி நாடோடிகளாய்த் திரிந்துவந்தனர் என்று அறிஞர்களால் ஊகிக்கப்படுகின்றது. அதன்மேல் வியவசாயத் தொழிலை



யும் கைத்தொழில்களையும் விருத்தி செய்தனர் என்றும் ஊகிக்கப் படுகின்றது. இதனிடையில் பாஷைகள் எழுத்து மூலமாய்க் குறிப்பிடப்பட்ட காலத்தில் கல்வி அபிவிருத்தி யாய்க்கொண்டு வந்தது.

இவ்வாறு ஒவ்வொரு இடத்திலும் மனிதர்கள் தனித்தனியே படிப்படியாய் முன்னேற்ற மடைந்தனர்களா? அல்லது பல விடங்களி லுள்ள மனிதர்கள் ஒருவர்க்கொருவர் சம்பந்தத்தினால் முன்னேற்ற மடைந்தனர்களா? என்பதைப் பரிசோதிக்க நாகரிக மாலை என்ற வேறோர் நூலைப் பகுதிகளாய் வெளியாக்கத் நிர்மானித்து இவ் விஷயங்களைப் பற்றியும் இவ்விடத்தில் விசாரிக்க வில்லை.

ஆனால் இவ்விஷயங்களில் மானிடர் முன்னேற்றத்தைப் பற்றி, பொதுவாய்ப் பேசிக்கொண்டு வருகின்றமையால் நாம் அறிந்தவரையில் கவனிக்கவேண்டியவை சமூக வாழ்க்கையின் நோக்கங்களும் பயன்களுமாம். இதுகாறும் அடிக்கடி மானிடர்களது வாழ்க்கை அவர்களது தொழிலுக்கனுகுணமான செயல்களையுடைத்தென பொருட்டுமாறு சொல்லிவந்திருக்கிறோம். அஃதாவது வேடர்த் தொழிலை யனுசரிப்போர் யாதொரு ஸ்திரமான நிலையுற்ற வாழ்வை யடையவில்லையென்றும் ஆயர்த் தொழிலை நடத்துவோர் நாடோடிகளாய்க் காலங் கழிக்கின்றனர் என்றும் ஆயர்த் தொழிலையும் வியவசாயத் தொழிலையும் புரிகின்றவர் நிலையுற்ற வாழ்வையடைய ஆரம்பிக்கின்றனர் என்றும் வியவசாயத் தொழிலை யாரம்பித்தவர்கள் நிலையாய்த் தங்கிடஞ் சேரிகின்றதென்றும் அதனால் சமூக வாழ்க்கையுந் தொடங்குகின்றதென்றும் அதன் பயன் பொதுநலமென்

றும் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றோம். இதற்கு மாறுபாடான அநுபவங்கள் எவ்விடத்திலாவது இருந்தால் அது பொது விதிக்கு விலக்காகும். உதாரணமாய் ஆங்கிலேயர்களுக்கு மூலபுருஷர்களான டியூடன்கள் ஜெர்மனியின் வடபாகத்திலிருந்த காலத்தில் அநாகரிக நிலைமையிலிருந்தாலும் வேட்டையாடுதலும் பயிர்த் தொழில் சில சமயங்களில் செய்தாலும் பிறகு இங்கிலாந்தில் இடங்கிடைத்தவுடன் அவர்களில் பெரும்பான்மையோர் தங்கள் நாட்டைவிட்டு அவ்விடத்திற்கு ஓடும் நிலைமையிலிருந்தாலும் சமூக வாழ்க்கையின் முதற்படியிலிருந்தனர் எனலாம். ஏனெனில் சமூகவாழ்க்கையின்குறிகளான தலைவன், கிராமசபை, பொதுஜன சபை, முதலிய அங்கங்களை உடைத்தாயிருந்தனர். ஆப்ரிக்காவில் அநாகரிக நிலைமையிலுள்ள சில நீக்ரோக்களுள் சமூகவாழ்க்கையென்பது இருப்பதாய் விசதமாய்த் தெரியாவிடினும், அவர்கள் தலைவன் ஒருவனுக்குக் கட்டுப்பட்டிருக்கின்றனர் என்பதற்கையமில்லை. நாடோடிகளாய்த் திரியும் மங்கோலியர்களும் சமூகவாழ்க்கையின் சில அம்சங்களை யுடைத்தாயிருக்கின்றனர். முக்கியமாய் அவர்கள் கூடாரமிட்டுக்கொள்ளும் ஸ்தல பாத்தியத்தைக் குறித்து வியவகாரம் நேரிடின் வயது சென்ற பெரியோர்கள் கூட்டத்தால் நிச்சயிக்கப்படுவதை அவ்வினத்தார் ஒத்துக்கொள்வதே சான்றாம்.

சமூகவாழ்க்கைக்கு முதற்குறி தலைவன் ஒருவனை யேற்றுக்கொண்டு அவனதாணைக்குக் கட்டுப்படுதலாம். ஒரு குடும்பம் என்று ஆரம்பிக்கின் அதற்குத் தலைவன் தகப்பன் அல்லது குடும்பத்தில் பெரியவன் அல்லது மூத்தவன் என்று ஏற்படுவதுபோல் ஜனங்கள் கூடியிடத்



தில் அவர்களுக்குள் ஏற்படும் ஒழுங்கீனங்களைத் தடுத்துக் குற்றங்களைக் கண்டித்துப் பரிபாலனஞ் செய்யத்தலைவன் ஒருவன் அவசியமேயாகும். வேடர்களும் வேட்டையாடுவதற்குக் கும்பலாய்ப் போகுஞ் சமயத்திலாவது அல்லது சண்டை சச்சரவுகள் ஏற்படுங் காலத்திலாவது தங்களுக்குள் பெரியவனும் பலவானுமுள்ள ஒருவனை முன்னிட்டுச் செல்கின்றனர். ஆயர்த்தொழிலிலுள்ள நாடோடிகளும் அநுபவத்தில் முதிர்ந்த பெரியவனைத் தலைவனாய் ஒப்புக்கொள்கின்றனர். வியவசாய தசையை யடைந்தவர்களுக்குத் தலைவன் அத்தியாவசியம். ஏனெனின் வேளாண்மைக்குத் தாளாண்மை வேண்டும். வியவசாயம் என்பது நீடித்த காலத்தில்தான் பலனைத் தரக்கூடியது. பயிரிட்ட வஸ்துக்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய சௌகரியங்கள் தேவை. வேளாண்மைத் தொழிலி லுள்ளவர்களுக்குச் சத்துருக்கள் பலர் உளர். பலன் கிடைக்குஞ் சமயத்தில் நாடோடிகளாய்த் திரியும் கூட்டத்தார் திடீரென மாடுகளைக் கொள்ளையடித்துப் போவது சகஜம். அக்கம்பக்கத்திலுள்ள காட்டுமிருகங்கள் பயிரை அழித்துவிடக்கூடும். ஓரிடத்தில் பொதுவாய் எல்லோரும் பயிர் செய்கின்ற காலத்தில் அவரவர்கள் தம் கடமையைச் சரிவர நடத்துவதை மேன்பார்வை பார்க்க அதிகாரி ஒருவன் அவசியம். வியவசாயத் தொழில் நிலைத்துக் குடிகள் தனித்தனி சொத்து உடையவர்களாயும் தத்தம் பாகத்தைப் பயிரிடுங்காலத்திலும் அக்கம்பக்கத்தவர்கள் திருட்டு முதலியவைகள் செய்யாதிருக்குமாறு காப்பாற்றத் தலைவன் தோன்றுவது நியாயம். வேளாண்மைத் தொழிலி லமர்ந்தவர்களுக்கு வேண்டிய கால்நடைகள் முதலிய உபகரணங்களையுங் காப்பாற்றுவதற்கு ஒரு தலைவனே தகுதியானவனாம்

வியவசாயத்திற்கு வேண்டிய கருவிகளைச் செய்து உதவி செய்யவேண்டிய ஏற்பாடுகள் ஒரு தலைவன்கீழ் செவ்வனே விளங்கும். இந்தியாவில் கிராமங்களில் தச்சன், கருமான், நாவிதன், குயவன் முதலிய தொழிலாளர்களுக்கு மானியம் ஏற்படுத்தியது ஒருதலைவனது நியமனத்தினாலன்றி வேறுவிதமாய் சாத்தியப்பட்டிராது. அதனால் இந்தியாவில் வியவசாயத் தொழிலுக்குக் குறைவில்லாமலிருந்தது.

இவை தவிர, வியவசாயத்திற்குச் செய்யப்படவேண்டிய ஜலசௌகரியங்கள் (ஆறு, ஏரி, முதலியவைகள்) சமூக வாழ்க்கையில்தான் சாத்தியமானவை. தற்காலத்திலும் நமது கிராமாந்தரங்களில் சில விடங்களில் குடிமாராமத்து என்பது குடிகளினாலேயே செய்யப்படுகின்றது. அஃதாவது கிராமத்திலுள்ளவர்கள் தத்தம் புலத்தின் விஸ்தீரணத்துக்குத் தக்கவாறு ஆட்களைக் கொண்டேயாயினும் தாமேயாயினும் ஜலதாரங்களைப் பழுதுபார்க்கவும் சீர்திருத்தஞ் செய்யவும் ஏற்பட்டால் வேலை சுலபமாய் முடியும். இத்தகைய வேலை சமூகவாழ்க்கைக்குத் தான் சாத்தியம்.

மானிடர்களில் அநேகர் சுவபாவ குணங்களினாலும் மிருகத்தன்மையாலும் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக்கொள்வதும் ஒருவருடைய சொத்தை வேறொருவர் அபகரிப்பதும் கொலை முதலிய தீயகுற்றங்களைப் புரிவதும் இயல்பு. இவ்வகிருத்தியங்களை நிறுத்துவதற்கு வேண்டிய உபாயங்கள் செய்வது சமூக வாழ்க்கையில்தான் கூடும். காட்டு மனிதர்களாய்த் திரிகின்றவர்களுக்குள்ளும் வேடர்களாய் நிற்கின்றவர்களுக்குள்ளும் நாடோடிகளாய் நடமா



டும் பல ஜாதியார்களுக்குள்ளும் விதிவியவஸ்தையின்றி குற்றம் புரிந்தவர்கள் அவ்வவ் இனத்தின் கண்ணுற்ற பலவான்களினால் தண்டிக்கப்படுவது வழக்கம். தண்டனைகள்வெகு ஆச்சரியமானவை. கொலை செய்தவனெனத் தீர்மானிக்கப்பட்ட ஒருவன் தனக்குப் பதிலாய் ஒருவனைத் தண்டனைக்குள்ளாக்கலாம். கொலை செய்தவன் தன்னிடமுள்ள பொருள்களில் சிலவற்றைக் கொடுத்துவிட்டால் அவன் இஷ்டப்படி திரியலாம். மறுபடியும் கொலையும் செய்யத் துணியலாம். கொலை செய்தவன் இனத்தார் எவரையும் கொல்லலாம். இரத்தப் பழிக்குப்பழி வாங்குவதற் கெல்லையில்லை. மேலும் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டவன் குற்றவாளியல்லவென விலக்கிக்கொள்வதற்கு விசித்திரமான முறைகளுண்டு. அதியுஷ்ணமான ஜலத்திலாவது குளத்திலாவது சிலநாள் தங்கி உயிருடன் வெளிவந்தால் குற்றவாளியல்ல. பழுக்கக் காய்ச்சப்பட்ட வஸ்துவைக் கையிலேந்தி புண்படாவிடில் குற்றவாளியல்ல. பலிஷ்டனான ஒருவனுடன் ஆயுதபாணியா யுத்தஞ்செய்து ஜெயித்துவிட்டால் குற்றவாளியல்ல. அல்லது இன்னும் யாதாயினும் சில அமானுஷியமான செயல்களால் குற்றவாளியல்லவென்றும் ஏற்பட விடமுண்டு. இத்தகைய தீர்மானங்கள் தெய்வீக சாசனங்களெனக் கருதப்பட்டன.

ஆதியில் யுத்தம் நேரிடுங்காலத்தில் சேனாதிபதியின் பதவியை வகிக்கத் தக்கவனே சாதாரணகாலத்தில் தலைவனானான். சமூகவாழ்க்கை, பெருகப் பெருகத்தலைவனே யுத்தஞ் செய்யக்கூடாமையால் யுத்தத் தலைவர்களை ஏற்படுத்த வேண்டியதாயிற்று. சமூகவாழ்க்கையி னாரம்பதசையில் ஒவ்வொருவரும் யுத்த வீரனாய்ப் போர்செய்ய வேண்டும்.

ஆனால் குடிகள் விருத்தியானதும் சமூகவாழ்க்கைக்கு வேண்டிய இதர தொழில்களைச் செய்யவேண்டியதனால் தனியாய்ச் சைனியம் என்பது எற்படலாயிற்று. யுத்த மடிக்கடி நேரிட்டக்கால் யோதர்கள் யுத்தப்பயிற்சி கொடுக்கப்படலாயினர். யுத்ததளவாடங்கள் புதியன புதியனவாய்த் தோன்றியகாலத்தில் தனித்தனிப் படைப்பாகுபாடுகள் செய்யப்பட்டன. உதாரணமாய் விற்படை, கத்திப்படை, காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை துப்பாக்கிப்படை, கப்பற்படை, ஆகாயவிமானம் என்றவைகளைக் கூறுவாம்.

மீண்டும், ஜன சமூகவாழ்க்கை யாரம்பத்தில் அதன் தலைவனே மத சம்பந்தமான சடங்குகளையும் நடத்திவந்தான். இத்தொழிலும் நாளடைவில் குருமார்களிடம் ஒப்புவிக்கப்பட்டது.

மேலும் அனேகமாய் ஒவ்வொரு இனத்திலும் தலைவன் இதர ஜனங்களைக் காட்டிலும் உயர்ந்த நிலைமையிலமர்ந்திருக்க லாயினன். அவனதிருப்பிடம், அவனுக்கு வேண்டிய பரிசாரகர்கள், சபை கூட்டுமிடம், உத்தியானவனம் முதலிய பல அந்தஸ்துக்கள் கிளம்பலாயின. அத்தலைவனது வல்லமைக்குங் குணத்திற்குந் தக்கவாறு கௌரவங்கள் அதிகரித்தன. இங்ஙனம் அநேக நூற்றாண்டுகள் சென்றுகொண்டிருக்க, ஒரு தலைவனை அடிக்கடி தேடிக்கொள்வதைவிட தலைவன் மகனையே தலைவனாய்க் கொள்ளத், தலைவன் பதவி வம்ச பாரம்பரியமாயிற்று. அக்காலம் தலைவன் அரசனெனப் பெயரிடப்படலாயினன். ஒவ்வொரு பாஷையிலும் அரசனுக்குப் பிரதிபதங்களே அவனது கடமைகளையும் மாக்ஷிமையையும் விளக்குகின்றன.



ஆங்கிலத்தில் கிங் (King) என்பதற்குத் தலைவன் என்பது பொருளாம். பிறகு வேறு சில பிரதிபதங்கள் தோன்றலாயின. அவைகள் அவன் வல்லமைகளைக் குறிக்கின்றன. ஆனால் இந்தியாவில் உபயோகப்படுத்தப்படும் ராஜா வென்கிற மொழி குடிகளைச் சந்தோஷிப்பிக்கின்றவன் எனப் பொருள் தரும். "ராஜா பிரகிருதி ரஞ்ஜனாத்" என்ற காளிதாச மகா கவியின் கூற்றே இதற்குத் தக்க சான்றும். இம்மாதிரி பொருள் தரக்கூடியபதம் இதர பாஷைகளி லிருப்பதாய்த் தெரியவில்லை. தகப்பன், ரக்ஷிப்பவன், எஜமானன், சர்வவல்லமை யுள்ளவன், வல்லாளன், எனப் பொருள்படக்கூடிய பதங்கள் இருக்கின்றனவே யல்லாமல் குடிகளின்சுகத்தைக் கவனிப்பவன், அவர்களைப் பிரியப்படுத்துவோன் என்கின்ற பதங்களைக் காணோம்.

அரசனுக் குதவியாளர்களான மந்திரிகளும் ஆலோசனை சபைகளும் நாளடைவில் எங்ஙனம் ஏற்பட்டதென்பதைப் பலதேச சரித்திரங்களில் காணலாம். ஒரு ராஜ்யத்தில் அரசும் மந்திரிசபையும் ஆலோசனை சபையும் ஜனங்களதபிப்பிராயத்திற் கிணங்க நடைபெறின் அது இராமராஜ்யமெனப்படும். அஃதாவது அயோத்தியையில் இராமன் எங்ஙனம் துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனஞ்செய்து நிஷ்பக்ஷபாதமாயும் குடிகளுக்குப் பிரியமாயும் செங்கோல் செலுத்தினனோ அங்ஙனமே நடைபெறும் ராஜ்யமெனப் பொருளாகும். இவ்வாறே இங்கிலாந்தில் ஆல்பாட் (Alfred) அரசனது ராஜ்யம் புகழப்படுகின்றது. ஆனால் ராஜ்யம் கொடுங்கோன் மன்னன் பால் தங்கின் குடிகளுக்கு நலியுண்டாம். ஆனதுபற்றியே ஆங்கிலேயர்களது அரசாட்சி ஜன

பிரதிநிதிகளடங்கிய மகாஜன சபையின்கண் விளங்க
கிறதென்பதை இங்கிலாந்தின் சரித்திரம் பறையறைகி
றது. கொடுங்கோலரசனை நீக்கமுயன்ற பிரஞ்சுக்காரர்
மன்னனையே விலக்கிக் குடியரசாக்கிக் கொண்டனர். இ
விரண்டு உதாரணங்களால் மானிடர் முன்னேற்றம் செ
வ்வனே விளங்கும். அரசாட்சிவரை முறைக்குட்பட்டுச் சட்
திட்டங்களைப் பின்பற்றினால் தலைவன் வல்லரசனாயிருக்
முடியாது. சென்ற ஐரோப்பிய யுத்தத்தின் பயனு
அதற்கு முன்னிருந்த ரஷியா தேசம்போன்ற சில வல்
ரசுகள் நசித்து விட்டன. பிரபஞ்சத்தில் தற்காலத்தி
வல்லரசன் எவ்வூரிலிருக்கிறான் என்று கண்டு பிடிப்ப
தாகும்.

இப்பிரபஞ்சத்தில் ஜன சமூகவாழ்க்கை தோன்றிய
முதல் ஆட்சிமுறையென்பது யாதாமொருவிதமாய் எல்
நாடுகளிலும் தோன்றி, கால தேசத்துக்குத் தக்கவா
கடலின் திரைகளைப்போல் புரண்டு புரண்டு மோதி
கொண்டிருக்கின்றது. ஆயினும் ஒரு தலைவனாட்சி ஆ
பித்தது முதல் இன்றுவரை ஏற்பட்டிருக்கும் அ
ஆட்சி முறைகளின் மாறுபாடுகளை ஆராய்ச்சி செய்திடி
அவைகளெல்லாம் சுழன்று சுழன்று ஏறும் படிகளையுடை
தீபஸ்தம்பம்போல் புலப்படுகின்றன. ஜனங்கள் சட்
திட்டங்களுக்குட்பட்டு வரைமுறை மீறாமல் சமூகவாழ்
கையில் தங்கியிருக்கவேண்டுமென்பது முக்கிய நோக்
இதை நிறைவேற்றுவதில் காலதேசங்களுக்குத் தக்கவா
ஆட்சிமுறை வேற்றுமைகள் ஏற்பட்டிருக்கின்றன.
முறைகள் மானிடர் முன்னேற்றத்தை நன்கு விளக்
கின்றன.



ஆதியில் அரசுமுறை ஏற்படுவதற்குக் காரணங்கள் சிலவற்றை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றோம். கிரீஸ், உரோம், இரண்டு நாடுகளிலும் மன்னனது ஆட்சிமுறை மாறிக் குடியரசென்கிற முறைதோன்றி மறுபடி மன்னனாட்சி வல்லரசாட்சி முதலிய மாறுபாடுகளை உலகசரித்திரத்தில் காணலாம். மன்னனாட்சி ஓங்கிவளர்ந்திருக்கும் இங்கிலாந்திலும் சில ஆண்டுகள் குடியரசுபோன்ற ஆட்சி முறை பதினேழாவது நூற்றாண்டில் பரீக்ஷை செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஆங்கிலேயர்கட்கு மன்னனாட்சியே மேன்மையுற்றதெனப் புலப்படும். மன்னனுடைய அதிகாரங்கள் யாவும் மகாஜன சபையாரால் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அரசன், மந்திரி சபை, மகாஜன சபை ஆகிய இம்மூன்று அம்சங்களும் தனித்தனியே ஒன்றும் செய்யமுடியாது. ஜனநாயகமே வன்மை பொருந்தியதாய் விளங்குமாறு சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அரசனாட்சி ஏற்பட்டிருக்குந் தேசங்களில் அநேகமாய் இம்மாதிரியான முறையே பின்பற்றப்பட்டிருக்கின்றது.

அரசனாட்சியை விட்டு விலகிக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நாடுகளிலும் குடியரசுக்குத் தலைவன் ஒருவனும் அவனுக்குதவி செய்யக் காரிய நிர்வாக சபையும் ஜனப்பிரதிநிதி மகாசபையும் ஆகிய மூன்றம்சங்களே ஏற்பட்டிருக்கின்றன. அரசனாட்சிக்கும் குடியரசுக்கும் உள்ள தாரதம்மியங்களை ஆராய்ச்சி செய்து எது மேலானதென்பதைப்பற்றிய தீர்மானஞ் செய்ய இவண் யாம் தயாராயில்லை. மானிடர் முன்னேற்றத்தை ஊடாடிப் பார்க்கும் நாம் கவனிக்க வேண்டியதியாதெனின் ஜன சமூக வாழ்க்

கையினது பொது நலத்தைக் கோறி குடிகளது அபிப்பிராயத்திற்கிணங்க சட்டங்கள் செய்து அவைகளைப் பக்ஷபாதமின்றி நடத்தும் எம்முறை கொண்ட ஆட்சியும் வல்லரசுக்கு மேலானதென்றும் ஜனங்களுக்கு அவர்களது பிறவியுரிமையை யுணர்த்தக்கூடிய கல்வியை யளித்து அவர்களுக்கு ஆட்சி முறையின் மேன்மையை யுணர்த்தி, சமூக வாழ்க்கைக்குரியவர்களாய் நடத்திவரும் எம்முறையும் இலாக்கியமானதென்றும் மானிடர் நினைப்பதுதான் முக்கியமான விஷயம். ஒவ்வொரு தேசத்தாரும் தமது ஆட்சிமுறை தம் கையி லடங்கியிருக்கவேண்டும் என்றும் அவ்வாட்சியில் சட்டதிட்டங்கள் குடிகளின் பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்திற்கிணங்க ஏற்படவேண்டுமென்றும் அச்சட்டதிட்டங்களை நிறைவேற்றும் அதிகார வர்க்கத்தினர்குடிகளுக்கு ஜவாப்தாரியாகநிற்கவேண்டும்என்றும் இன்று மானிடர்கள் கருதுவது அவர்களது முன்னேற்றத்தை நன்கு விளக்குகின்றது.

---

## (15) பாஷைகளும் எழுத்துக்களும்.

மானிடர்கட்கும் இதர ஜீவராசிகட்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை வெளியாக்கக் கூடிய விஷயங்களுள் பாஷை என்கிற பேச்சுக்குரிய சாதனம் முதன்மையானது. சற்றேறக்குறைய ஆயிரம் * பாஷைகளும் (Languages) உப பாஷைகளும் (Dialects) உலகத்தில் உற்பத்தியாயிருக்கின்றன எனச் சொல்லப்படுகின்றது. சில பாஷைகள் தோன்றி வளர்ந்து விரிவடைந்து பிறகு பேச்சு நிலைமையை விட்டு நழுவி எழுத்துமூலமாய் நூல் உருவம் மட்டில் கொண்டு தங்கியிருக்கின்றன. அவைகளை மரித்த பாஷை யென்பர் மேனாட்டார். மரித்த பாஷைகளையும் உயிருள்ள பாஷைகளையும் கற்றுணர்ந்த பாஷா ஞானிகள் ஒவ்வொரு பாஷையினது மொழிகளின் வரலாற்றை யறிந்து அதனால் அவைகளின் மூலத்தை யொருவிதமாய்க் கண்டுகொண்டு தனித்தனி பாஷைக் குலங்களாகப் பாகுபாடுகள் செய்து, தமக்கெட்டிய மட்டில் சுமார் பன்னிரண்டு தலைமைப் பாஷைகளைக் குறிப்பிடுகின்றனர். ஸம்ஸ்கிருதம், பெர்ஸியன், கிரீக், லாடின், பழைய ஜர்மன் முதலிய பல பாஷைகட்குத் தாய்ப்பாஷை எனக்கூடிய ஆரியம் முதலாவது. இரண்டாவது திராவிடம் என்பது நமது தென்னாட்டில் முக்கியமாய் வழங்கி வரும் பாஷை. ஹிப்ரு பினீஷியன், முதலிய சில பாஷைகளுக்குத் தலைமைப் பெயர் வகித்த ஸெம் குலத்தைச் சார்ந்த ஸெமெடிக் (Semetic) மூன்றாவது. இது வடமேற்கு ஆசியாவிலுள்ள பாகங்களில் வழங்கிவருவது. எகிப்து முதலிய இரண்டொரு தேசங்களில் ஹாம் வம்சத்தைச் சார்ந்த (Hemetic) ஹெமெடிக் நான்காவது. ஐந்தாவதாய் ஆசியாவின் தென் கிழக்கிலுள்ள சீனர் முதலிய சில குலத்தோர் பேசும் பாஷையைக் குறிக்கலாம். ஆறாவது மலாயர்களது பாஷை. ஏழாவது யூரல், ஆல்டாய் மலைப்பிரதேசங்களுக் கிடையில் மத்திய ஆசியாவில் பேசப்படுவது. காக்கஸஸ் மலைக்கருகில் காக்கேசி

* உலகத்தில் மொத்தம் 3424 பாஷைகள் பேசப்படுகின்றனவென்றும் இவைகளுள் அமெரிக்காவில் 1624 ம் ஆசியாவில் 637 ம் ஐரோப்பாவில் 587 ம் ஆப்பிரிக்காவில் 276க் என்றும் ஒரு கணக்குக் குறிப்பிடுகின்றனர் சிலர்.

யர்களது பாஷை எட்டாவதாம். பசிபிக் மகா சமுத்திரத்தினுள்ள சிறு சிறு தீவுகளனேகங்களில் பேசப்படுவது ஒன்பதாவது குலமெனப்படலாம். ஆபிரிக்காவின் தென் பாகத்திலும் மத்திய பாகத்திலும் இரண்டு பாஷைக்குலங்கள் பரவியிருக்கின்றன. பன்னிரண்டாவதாய் அமெரிக்க இந்தியர்களது பாஷையைக் குறிப்பிடலாம்.

இப் பன்னிரண்டு குலங்களின் இலக்கணங்களைக் கொண்டும் மொழிகளின் உருபுகளைக் கொண்டும் பாஷா ஞானிகள் ஊகிப்பதியாதெனின் ஒவ்வொரு பாஷைக்குலமும் ஓரிடத்தில் தோன்றி அதற்கு நாலாபக்கங்களிலும் பரவி வருங்கால் காலவளவில் பலரூபங்களை யடைந்திருக்க வேண்டும் என்பதே. ஒருகால் எல்லா பாஷைகளும் ஓரிடத்தினின்றே தோன்றி உலகத்தில் வெவ்வேறு குலங்களாயும் ஒவ்வொரு குலத்திலும் பல பாஷைகளாயும் பிரிந்தனவா வென்பதைப் பல பாஷைகளறிந்த அறிஞர்கள் தீர்மானிக்க வேண்டும். அத்தாய்ப்பாஷை எதுவென்பதை எப்புண்ணியவான் வெளியிடுவானோ யாமறியோம்.

பாஷை யென்பது ஒருவருக் கொருவர் தத்தம் கருத்தை வெளியிட்டுக்கொள்ள யத்தனஞ் செய்யும் முறையாகும். பிறந்தவுடன் ஒரு குழந்தையை நிர்மானுஷியமான இடத்தில் விட்டு மனிதன் குரலையே கேட்க வொட்டாமல் வைத்துப் பாதுகாத்துவரின் அது பேசுமா? பேசின் எப்பாஷை பேசும்? எனக் கண்டுபிடிக்கலாமென்று பரீக்ஷை செய்வதற்குப் பல ஆக்ஷேபங்களும் இடையூறுகளும் உள்ளன. முதலாவது நிர்மானுஷியமான விடத்தில் விட்டுவிடின் அதை எங்ஙனங் காப்பாற்றுவது? அதற்காகாரங் கொடுக்க அதனருகில் போகின்றவர்கள் மூச்சும்



விடாமலிருக்கவேண்டுமே! மனிதர்கள் குரல் கேட்காமல் இது மிருகங்கள் பட்சிகள் குரல்களைக் கேட்டு ஏதாவது தெரிந்துகொள்ளுமா வென்கிற பரீட்சைக் குட்படுத்த வேண்டும் வேறொரு குழந்தையை. இவைகளெல்லாம் செய்யப்படினும் வெகுகாலமாய்ப் பரம்பரையாய் ஏற்பட்ட வாசனை யொன்று நமது உட்கூற்றில் பற்றி நிற்கின்றதை நீக்குவதற்கு வழி தேடவேண்டும். இவைகளை யெல்லாம் உத்தேசித்து இப்பரீக்ஷையை யாவர் எங்ஙனஞ் செய்யப் போகின்றனரோ, இறைவனே யறிவான்.

இது நிற்க, மிருகங்களும் பட்சிகளும் தமது கருத்தை ஒலியினாலும் ஜாடைகளினாலும் வெளியிடுகின்றனவென்பது நம்மனுபவத்திற் காணற்பாலது. அவைகளில் மாடுகளும் கன்றுகளும் ஆடுகளும் குட்டிகளும் கத்துவது அநேகமாய் "அம்மா" வெனக் கூவுவதுபோல் தோன்றுகின்றது. நம் வீடுகளில் பழகும் நாய்களும் பூனைகளும் பலவித ஜாடைகளால் தமக்கு வேண்டிய காரியத்தை முடித்துக்கொள்கின்றன. நமது நாட்டில் வழங்கி வரும் கவுளி சாஸ்திரம் என்பது பல்லியின் ஒலியினால் கூறப்படுவது. பல்லியின் ஒலிக்கும் மானிடர் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தமென்பர் பலர். ஆனால் அதன் தத்துவம் யாதெனின் நாம் ஒரு விஷயத்தை மனத்தில் கருதுங்கால் பல்லி கவுளி சொன்னால் அக்கவுளி எதற்காகக் கிளம்பியதோ அதையே நாம் நினைத்த காரியத்திற்கும் சம்பந்தப்படுத்துவதுதான் எனத் தோன்றுகிறது. பல்லிகள் தாம் எக்கருத்தை வெளியிட சப்திக்கின்றனவோ அதே நங் கருத்தின் பயனை வெளியிடுகின்றதென்பது எங்ஙனம் நியாயமாகும்? நமது கருத்தை அவைகள் தெரிந்துரைப்ப

தாய்ச் சொல்வது சரியல்ல. ஆயினும் அசரீரவாக்கு ஜோசிய சகுனங்களில் எங்ஙனம் சிலருக்கு நம்பிக்கையோ அங்ஙனமே இதிலும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றதெனலாம்.

காடுகளில் சஞ்சரிக்கும் கொடிய மிருகங்களின் பார்வைகளினாலும் கர்ச்சனைகளினாலும் அவைகளினமிப் பிராயங்களைத் தெரிந்து கொள்கின்றனர் வேடர்கள். பக்ஷிகள் ஒன்றுக்கொன்று பேசி விளையாடுகின்றன வென்பதையும் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொள்கின்றன வென்பதையும் அவைகளின் சப்தங்களினாலே நாம் கண்டு கொள்ளலாம். கிளி, நாணத்தான், என்கிற புள்ளினங்கள் மனிதனைப் போலவே கற்றுக் கொடுத்தவைகளைப் பேசுகின்றன. மனிதர்களுடன் பழகும் விலங்குகள் தமது வியாதிகளையும் துன்பங்களையும் வெளியாக்குகின்றன. ஆப்பிரிக்காவில் குண்டினால் அடிபட்ட வாலில்லாக் குரங்கொன்று பரிதபிக்கும் குரலிட்டழுது தன் புண்ணைத் தன்னைச் சுட்டவனிடம் காண்பித்ததென்று ஒருவர் சமீபத்தில் வெளியிட்டனர். மானிடர் போன்ற ஒரு பெருங் குரங்கு தனக்குண்டான காயத்தை ஒரு வைத்திய சாலையிலுள்ளவரிடம் காட்டி சுவஸ்தமாக்கிக் கொண்டதென்றும் கேள்விப் பட்டிருக்கின்றோம். ஸையாம் தேசத்தில்சில வியாபாரிகள் குரங்குகளைப் பழக்கி நாணயங்களின் குணத்தைப் பரிசோதிக்கின்றனராம். நாணயம் சரியாயிருந்தால் பெட்டியில் போடுமாம். தப்பு நாணயமானால் ஒருவித கிரீச்சு என்ற ஒலமிடுமாம்.

[மனிதர்களைப்போல் தம் நோக்கங்களை வெளியிடுவதுமன்றி, புத்தி, யுக்தி, சாதுரியம், விசுவாசம், நன்றியறிவு, பிரதியுபகாரம், பழிக்குப் பழிவாங்கல் முதலிய குணங்களையுடைய பிராணிகளின் வரலாறு எத்தனையோ காணப்படுகின்றன. பிராணிகளைப் பார்த்தே மனிதன் சில விஷயங்களை அனுசரித்தான் என்று சொல்லவுமிடமுண்டு. உதாரணமாய் சிலந்திப்பூச்சிகள் நெய்வதைக்கண்டு மனிதன் நெசவுத்தொழில்கற்றுக்கொண்டானெனலாம்.]



பாஷையைப்பற்றி நாம் பேசிக்கொண்டு வருங்கால் நாம் அவசியமாய்க் கவனிக்கவேண்டியது யாதெனின் ஜீவராசிகள் யாவும் தங்கருத்தை ஒலியினால் வெளியிடுகின்றன வென்பதே. ஆனால் ஜீவராசிகளுள் மனிதர்கள்மட்டில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றனர். ஒருகால் மானிடர் இப்பிரபஞ்சத்தில் தோன்றிய காலத்தில் சில ஒலிகளினால் மட்டில் தமக்காக வேண்டியகாரியங்களை முடித்துக்கொண்டு காலவளவில் தம் பாஷையை விருத்தியாக்கிக்கொண்டனர் என்பதற்குச் சந்தேகமில்லை. விலங்கினங்களும் பக்ஷிகளும் இயற்கையில் ஏற்பட்டிருக்கும் தமக்குரிய நிலைமையிலே நிற்க மானிடர்கள் தம் நிலைமையை மாற்றிக்கொண்டிருக்கின்றனர். மிருகங்களுக்கு ஆகவேண்டிய உடல் தொழில்கள் சிலவற்றை சுலபமாய் முடித்துக்கொள்கின்றன. மனிதர்களோவெனின் அப்படியில்லாமல் தங்கள் வாழ்நாள்களுக்கு வேண்டியதைப் பெருக்கிக்கொண்டும் வியவகாரங்களை விருத்தியாக்கிக்கொண்டு மிருக்கின்றமையால் பாஷையும் விருத்தியாயிருக்கின்றது.

பாஷையை எழுத்துமூலமாய் எக்காலத்தில் எவ்வினத்தார் முதன் முதலில் ஆரம்பித்தனரோ வென்பதைத் தெரிந்துகொள்ள இன்னும் ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஒருகால் எம்மொழியைக் குறிக்கவேண்டுமோ அம்மொழி குறிப்பிடும் பொருளை வரைந்து காட்டியிருக்கலாம். மாடு

என்கிற மொழியை அதன் உருவப்படத்தால் தெரிவிப்பது ஒரு இயற்கை வழிதான். ஆனால் குதிரையை யுணர்த்த விரும்பி வரையுங்கால் கழுதையைப் போலிருந்தால் பிரயோஜனமிராதல்லால் சித்திரம் நன்றாய் வரையும் விஷயத்தில் ஊக்கம் ஏற்பட இடமுண்டு. அமெரிக்க இந்தியர்களுள் சிலர் இன்னும் இங்ஙனஞ் செய்வதாய்ச் சொல்லப்படுகின்றது.

எகிப்தியர்களுடைய ஹைரொக்ளிபிக்ஸ் (Hieroglyphics) என்கிற சித்திரப்பட வெழுத்துக்கள் பெயர் பெற்றவை. சீனாவிலும் ஜப்பானிலும் ஒவ்வொரு மொழிக்கும் ஒருவிதகுறிப்பெழுத்து இருக்கின்றது. பாபிலோனியாவில் அநேக நூற்றாண்டுகளுக்குமுன்எழுதிய அம்புநுனி போன்ற (Cuneiform) அக்ஷரங்கள்கொண்ட சிலாசாசனங்கள்முதலியன அநேகமிருக்கின்றன. காலவளவில் பலவித அக்ஷரங்கள் தனித்தனி யுருவத்துடன் அந்தந்த பாஷைக்குரியதாய் விருத்தியாயின வெனலாம். ஏனெனின் சித்திரங்கள் எழுதிக்காட்டினால் வினைச்சொல், உரிச்சொல் முதலியவைகளைக் காண்பிப்பது போன்ற கஷ்டங்களால் ஒலியை விபாகஞ் செய்து ஒவ்வொரு ஒலியையும் தனித்தனியாய் எழுதிக் காண்பிப்பது மேன்மை யென்று தெரிந்துகொண்டார்கள் என்று ஊகித்துக்கொள்ளலாம். இவ்வாறு அனேக லிபிகள் உலகில் தோன்றியிருக்கின்றன. ஆனால் அவைகளில் எவை சம்பூர்ணமானவை என்று கேள்வி கேட்கலாம். பொது விதி கூறுமளவில் ஒவ்வொரு ஒலிக்கும் தனித்தனி எழுத்தும் ஒவ்வொரு எழுத்துக்கும் ஓரே ஒலியும் எப்பாஷையில் உளதோ அப்பாஷையின் லிபியே சரியானதென்று சொல்லலாம். இவ்விதியைக்



கொண்டு பரீக்ஷை செய்திடின் சில பாஷைகள் குறைவுற்றனவாயிருக்கலாம். அக்குறைகளை நீக்குவது அவசியமாகும். உலகம் முழுவதும் சம்பந்தப் பட்டுக்கொண்டிருக்கு மிக்காலத்தில் எப்பாஷையில் இதர பாஷைகளின் விசேஷ ஒலிக்குரிய எழுத்துக்கள் குறைவா யிருக்கின்றனவோ அதைக்கைக்கொள்வ தவசியமாகும். இது மானிடர் முன்னேற்றத்திற் கவசியமான முறையாகும்.

எழுத்துக்கள் தோன்றிய காலத்தில் மிருதுவான இலைகளின்பேரிலும் அல்லது மரப்பட்டைகளின்பேரிலும் முள் முதலிய கூரானகருவிகளால் எழுதியிருக்கவேண்டும். எகிப்தில் பெபைரஸ் என்கிற செடியின் பட்டையிலுள்ள உள் பரண்மேல், ஒருவித மைகூட்டி அதைக்கொண்டு நாணல் குச்சியினால் ஜனங்கள் எழுதினதாய் இன்றைக்கும் காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கும் பெபைரஸ் சுருள்களினால் வெளியாகின்றது. அம்மை எங்ஙனங் கூட்டப்பட்டதோ ஒருவருக்குந் தெரியவில்லை. ஆயினும் அநேக நூற்றாண்டுகளாய் எழுத்துக்கள் அழியாமல் இருக்கின்றன. அம்மைக்கூடுகள் சில தற்காலம் கிடைத்திருக்கின்றன. அதிலுள்ள மையை மேனாட்டு சாஸ்திரிகள் பரீட்சை செய்துவருகின்றனர். அதன் கூட்டுப்பொருள்களின்னவை யென்பது இன்னும்தெரியவில்லை. இந்தியாவில் பனையோலையில் இரும்பு அல்லது எஃகினால் செய்யப்பட்ட எழுத்தாணிகளால் எழுதப்பட்டது. மரப் பலகைகளின்மேல் கருப்புமை தடவி வெள்ளைமண்ணினால் சிலதேசங்களில் எழுதப்பட்டதாகவும் தெரிகின்றது. சீனதேசத்தில் அநேக நூற்றாண்டுகளாய் மூங்கிலுக்குள் ளிருக்கும் பாணினால் காகிதம் செய்யப்பட்டதாய் சொல்லப்படுகின்றது. மேலும் கற்பாறை

களின் மேலும் கோவில்களின் சுவர்களிலும் ஸ்தம்பங்களிலும் எழுத்துக்கள் வெட்டப்பட்டிருப்பன பலவற்றை நாம் பார்க்கின்றோம். உலோகப்பட்டயங்களிலும் எழுத்துக்கள் வெட்டப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். ஐரோப்பாவில் காகிதம் செய்யப் பட்டு இறகுகளால் எழுதப்பட்ட காலத்தில் புஸ்தகங்கள் வெளிக்கிளம்பலாயின. பதினைன்காவது நூற்றாண்டில் அச்சு யந்திரங்கள் தோன்றலாயின. எழுத்துக்கள் கட்டைகளில் தனித்தனியாகச்செய்யப்பட்டன பிறகு எழுத்துக்கள் உலோகத்தினால் ஆக்கப்பட்ட காலத்தில் அச்சுவாகனத்தில் புஸ்தகங்கள் ஏறலாயின. இயந்திரங்களிலும் சீர் திருத்தங்கள் பல தோன்றலாயின. நீராவியின் சக்தியினாலும் பிறகு மின்சார சக்தியினாலும் அச்சிடப்படும் இக்காலத்தில் புஸ்தகங்கள் வெகு சீக்கிரமாயும் ஏராளமாயும் வெளியாகின்றன.

புஸ்தகங்களைக் கையால் எழுதியகாலத்தில் ஒரு புஸ்தகத்தின் பிரதிகள் கிடைப்பதே அரிது. அவைகளை வேறு பிரதி செய்வதில் ஏற்படுங் கஷ்டம் அதிகம். புஸ்தகங்களரிதானமையால் கல்வி சிலரிடத்தில்தான் தங்கியிருந்தது. அச்சுப்பதிப்பு ஏற்பட்டகாலம்முதல் நூல்களின் பிரதிகள் பல தோன்றினமையால் கல்வி விருத்தியாயிற்று. இதனாலும் மானிடர் முன்னேற்றம் உலகில் ஏற்படலாயிற்று.

---

## (16) கல்வி.

மானிட ரிவ்வுலகத்தில் தோன்றிய காலத்தில் இதர ஜீவராசிகளைப் போலவே உணவு, உறக்கம், உறைவிடம் முதலியவைகளைத் தொடங்கி யிருப்பினும் காலவளவில்



வாழ்நாட்க ளதனுபவத்தினால் தோன்றிய கல்வி எனும் பெரும்பாக்கிய மொன்றினால்தான் அவர் இன்று தங்கி நிற்கும் நிலைமையை யடையலாயினர் என்று நிச்சயமாய்க் கூறலாம். எக்காலத்தில் மக்கள் பஞ்சினின்றும் நூலை உற்பத்தியாக்கி அதனை ஆடையாய் நெய்து உடலைமூடிக் கொள்ளத் தொடங்கினரோ அக்காலம் முதல் அவர்களது நாகரிக நிலைமை மேம்பாடடைய ஆரம்பித்ததென்பதற்குச் சந்தேகமில்லை. அவ்வாறே எக்கணத்தில் அவர்கள் தம் எண்ணத்தை வரைந்து காட்டமுயன்று அக்ஷரங்களைக் கண்டு பிடித்தனர்களோ அக்கணத்திலேயே நூல்க ளியற்றும் சக்தி அதிகரித்து அதனால் கல்வி சிறப்புற்றோங்கி வருங்கால் நாகரிக நிலைமை நலம் பெறலாயிற்று என்பது சித்தம்.

கல்வி எனப்படுவது மக்கட்கொரு விசேஷமான தனம் இதற்கு மேற்கோள்கட்குக் குறைவில்லை. கல்வி கரையற்றதென்றும் அதன் எல்லையைக் காணமுயல்வோன் வானமும் பூமியும் தொட்டுக் கொண்டிருப்பதைப்போல் காணப்படும் ஆகாயவரை (horizon)யைக் காணப் புறப்படுவோனதுகதியை யடைவானென்றும் அது 'அணையற்ற யாறு, இணையற்ற செல்வம், அள்ள அள்ளக்குறையாதது, கொடுக்கக் கொடுக்க வளரக்கூடியது' என்றும் பலவாறாய்த் துதிக்கப்பெற்ற பொருள். ஆனால் கல்வி இதுதான் என்று குறித்துக் காட்டக்கூடிய விதி இன்னும் ஏற்படவில்லையாயினும் பண்டிதனுக்கும் பாமரனுக்கும் அம்மொழி ஒரே பொருளைப் புலப்படுத்துகின்றது. எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டிருக்கும் புஸ்தகங்களைப் படிக்கவும் படிப்பதையும் நினைப்பதையும் எழுதவும் தெரிந்துகொள்வது

கல்வியெனச் சொல்வதுண்டு. அங்ஙனமாயின் எழுத
தெரியாதிருந்த ஒருகாலத்தில் கர்ண பரம்பரையாயு
வம்ச பரம்பரையாயும் பெற்றுவந்த வேதம் புராண
முதலியவைகளைத் தெரிந்து கொண் டிருந்தவர்கள்
ஞானத்தை என்னென்றுரைப்பது என்றகேள்வி தோன்றி
கின்றது. கணிதம், வானசாஸ்திரம், சங்கீதம், நிருத்திய
சஸ்திரம், அஸ்திரம் முதலிய அநேக வித்தைகள் எழுத
படாமலே விருத்தியாய்க்கொண்டிருந்த காலத்தில் அ
கல்வியல்லவா ! அன்றேல் அஃதென்னை ? என்ற சந்தே
மும் தோன்றுவது சகஜம். எழுதப்படிக்கத் தெரியாதவ
களையே கல்வியற்றவர்களென வியவகரிப்பது உலகவழக்கு
அவர்களை நிரக்ஷரகுக்ஷி யெனப் பகர்வதும் வழக்கம்
சித்திரம் எழுதுவதும் சிலைகள் வார்ப்பதும் கற்சிலையடி
பதும் வேண்டிய பொருள்களை யுற்பத்திசெய்வதும் கட்டி
டங்கட்டுவதும ஆகிய பலவகைத் தொழில்கள் கல்வி
னம்சங்களல்லவா ? என்ற கேள்வியுங் கேட்க இடமுண்டு

மேலும் மேனாட்டார்கள் சாமானிய கல்வி (Gene
ral Education) என்றும் தொழிற்காய கல்வி (Tech
nical Education) என்றும் இருபாகுபாடுகள் செய்
திருக்கின்றனர். சாமானிய கல்வியைக் கலைகள் (Arts)
என்றும் சாஸ்திரங்கள் (Science and Philosophy)
என்றும் பாகுபாடுகள் செய்கின்றனர். கலைகளையும் புத்
தியை யதிகமா யுபயோகித்துச் செய்யக்கூடியவை (Libe-
ral, polite, or fine) அதாவது சாகித்தியம் சங்கீதம்
சித்திரம் என்பவை என்றும், கைகால்களை யதிகமா யுப
யோகப்படுத்திச் செய்யக்கூடியவை (Mechanical or



Industrial) அதாவது துணி, நெய்தல், பாத்திரங்கள் செய்தல், தச்சு வேலை கருமான் வேலைபுரிதல், ஆகிய கைத் தொழில்கள் என்றும் பிரிப்பது வழக்கம். நிற்க, முற்காலத்தில் "ஸையன்ஸ்" என்பது "ஆர்ட்ஸ்" என்பவைகளிலொன்றே என வியவகரிக்கப்பட்டு வந்தமையால் சர்வ கலா சாலை பரீக்ஷைகளில் "ஸையன்ஸ்" படித்துத் தேறியவர்கட்கும் ஆர்ட்ஸ்மாணவன் (Bachelor of arts. B. A.) ஆர்ட்ஸ் புலவன் (M. A.) என்கிற பட்டங்கள் வெகுகாலமாய் அளிக்கப்பட்டு வருகின்றன. இவைகளால் கல்வியென்பது விசாலமான புலத்துக் குட்பட்டதென்றும் அதற்கு விதி கூறுவது கடினமென்றும் ஏற்படுகின்றது.

மீண்டும், எவ்விஷயமும் ஒரு கோட்பாடுக் குட்பட்டதாயும் சில விதிகட்குட்பட்டதாயும் ஒரு வியவஸ்தைக் குட்படுத்தப்படின் அதை "ஸையன்ஸ்" என்ற பெயரிட்டழைப்பது மேனாட்டவர் முறையாகும். ஒருவித கால்நடை நன்றாயிருப்பதாய் ஏற்பட்டால் அதை வர்ணித்து ஒரு நூல் வரைந்து அதற்கு நடைக்கலை எனப் பெயரிட்டு அக்கலையை யப்பியசிக்கவேண்டிய விதிகளைக் குறிப்பிட்டு நடை சாஸ்திரம் என வியவகரிப்பது அவர்கட்கு சுவபாவம். இவ்வாறே பேசுவது உறங்குவதுமுதலிய சாமானிய உடற்றொழில்கள் யாவும் கலைகளாயும் சாஸ்திரங்களாயும் விளங்காநிற்கும்.

தற்காலத்தில் மக்களதறிவைப்பற்றிய ஆராய்ச்சி செய்யும் மேனாட்டு வித்துவான்களுக்குக் கல்வி யாதெனத் தோன்றுவதெனின் அது எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளும் சக்தியைமட்டில் குறிப்பிடுவதன்று. ஆனல்

வாழ்நாளுக்குரிய சகலவிதமான சக்திகளையும் சமாசமமாய்ப் பெருகச்செய்வதுதான். இதனால் சரீரபலத்தைப் பெருகுவதற்காய தேகப்பயிற்சியும் கல்வியின் பிரிவினைதான் என விளங்கும். மேலும் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி சுவல்பமாயும் ஒரு விஷயத்தைப்பற்றி பூர்ணமாயும் அறிவிப்பது கல்வி என்று ப்ருஹாம் பிரபு கூறியுள்ளார். அஃதாவது ஒவ்வொருவரும் பிரகிருதி சாஸ்திரம், பூமி சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், வான சாஸ்திரம், சரீர சாஸ்திரம் முதலிய பல சாஸ்திரங்களின் சாராம்சத்தை ஸ்தூலமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். ஆனால் யாதாமொரு சாஸ்திரத்தைப்பற்றி சாங்கோபாங்கமாய் முற்றிலும் உணர முயலவேண்டும் என்பதே. இதற்குக் காரணம் யாதெனின் பிரபஞ்சம் முற்றிலும் தோன்றியிருக்கும் பொருள்கள் யாவும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு நிற்கின்றமையால் யாதாமொரு விஷயத்தைப்பற்றி முழுவதுந் தெரிந்துகொள்வதற்கு இதர சாஸ்திரங்களுடைய உதவி தேவை. உலக சரித்திரத்தை அறிந்துகொள்ள விரும்புவோன் மானிட சாஸ்திரத்தையும், மானிடர் எங்ஙனம் இப்புவியில் தோன்றலாயினர் என்பதை விசாரிக்கின் பூசாஸ்திரத்தையும், பூமியின் தன்மையைத் தெரிந்து கொள்ளப் பூகோள சாஸ்திரத்தையும், பூகோளத்தின் நிலைமையையறிய வான சாஸ்திரத்தையும், வானசாஸ்திரத்தை யாராயுங்கால் கணித சாஸ்திரத்தையும், கற்கவேண்டியிருக்கின்றது. கல்வி கரையில கற்பவர் நாள் சில. எல்லா சாஸ்திரங்களையும் ஒருவன் தானே ஆராய்ச்சி செய்யப் போதுமான ஆயுளின்மையால் ஒவ்வொரு சாஸ்திரத்தையும் நன்குணர்ந்த பெரியோர்களின் முடிவுரையைக்



கொண்டு தெரிந்து யாதாமொரு சாஸ்திரத்தை நாம் நன்றாய் ஆராயவேண்டுமென்று கல்வியை யப்பியசிக்க ஏதுவது மானிடர் முன்னேற்றத்தை நன்கு விளக்கும். எழுதப் படிக்கத் தெரிந்துகொள்வதுதான் கல்வியென்றும் எழுதப் பட்டதுதான் நூல் என்றும் சொல்வது அவ்வளவு உசிதமன்றேயாயினும் பாஷைகள் எழுத்துக்களைப் பெறுமுன்பே நூற் பெருக்கம் உலகில் உண்டாயிற்றென்பதற் கையமில்லை.

அன்றி, எத்தனை தொழில்களைக் கற்றுத் தேர்ந்தவனாயினும் அவன் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளாவிடின் அவனைக் கல்வியற்றவனென வியவகரிப்பது எங்ஙனும் வழக்கத்தில் தங்கியிருக்கின்றது. பண்டைக்காலத்திலின்று இந்தியாவில் அறுபத்திநான்கு கலைகளும் கல்வியினங்களாகக் கருதப்பட்டிருந்தும் எழுதப்படிக்கத் தெரிந்தவரையே கல்வியாளராகக் கொண்டாடிவந்திருக்கின்றனர். மானிடர் தம் கருத்தை எழுத்து மூலமாய் வெளியிட ஆரம்பித்து, பிறகு நூல்கள் வாயிலாகத் தம் மனோபாவங்களைச் சிறந்த நடையில் வரைந்ததனால் அவர்களது நிலைமை மேம்பாடடையலாயிற்று.

கல்வியின் முக்கிய நோக்கம் அறிவு.

"அறிவுடையாரெல்லா முடையார்
அறிவிலா ரென்னுடைய ரேனுமிலர்"

எனக் குறளாசிரியர் கூறுகின்றனர். அதன்முக்கிய பயன் நல்லொழுக்கம் என்பது அடியிற் குறிப்பிட்டிருக்கும் வேறொரு குறளால் நன்கு புலப்படும்.

"ஒழுக்கம் விழுப்பந்தாலானொழுக்க
முயிரினு மோம்பப்படும்"

இந்தியாவில் கல்வியி னிறுதிப்பயன் ஆத்ம ஞானம் எனப்படும். கல்வி கடவுளது திருவடியைப் போற்றச் சாதகமானது. தெய்வப்புலவரே

"கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவ
னற்றாடொழா அரெனின்" எனச் சாற்றுவதே தக்க சான்றாம்.

நிற்க—சரித்திர மத்தியகாலம் வரை ஐரோப்பாவில் லாடின் கிரீக்பாஷைகளைப் படித்தவர்களே கற்றவர்களெனக் கருதப்பட்டிருந்தனர். நூதனக்கல்வி அல்லது கல்வியினது மறுபிறப்பு எனப் பிரசித்தி பெற்ற கிளர்ச்சியும் சுவதேசாபிமானமும் தாய்ப்பாஷாபிமானமும் தோன்றிய கால முதல் எப்பாஷையைக் கற்றுணர்ந்தவனும் கல்விமானென மேனாட்டார்கள் கருதத் தொடங்கினர். நம் தேசத்திலும் வர்ணாசிரம தர்மங்கள் ஏற்பட்டகாலம் முதல் அவைகட்கு உறைவிடமாகிய ஸம்ஸ்கிருதமே தேவபாஷை யென்றும் அதை யறிந்தவனே பண்டிதன் என்றும் அப்பாஷையே உயர்ந்ததென்றும் இதர பாஷைகள் தாழ்ந்தனவென்றும் எண்ணங்கள் பரவலாயின. மேலும் மகம்மதியர்களது பாஷை மிலேச்சமென்றும் ஆங்கிலேயர்களது பாஷை நீசமென்றும் சொல்லப்பட்டு வந்தன. இவைகளால் பாஷைக்கும் ஜாதி வித்தியாசம் ஏற்படலாயிற்று எனக் கூறலாம்.

ஆனால் உலகிலுள்ள பாஷைகளையெல்லாம் கற்றுணர சௌகரியமிருந்த பிற்காலத்தில் பாஷைகளுக்கு ஜாதி வித்தியாசமும் உயர்வும் தாழ்வும் கூற யாவர் துணிவர்? பாஷைகளின் மூலங்களைக் கண்டுகொண்ட அறிவாளர்கள் பாஷைகள் எல்லாம் பலரூபங்கொண்ட ஒரு பொருளெனவே கூறுகிறார். இவ்விஷயத்தைப்பற்றி "மேனாட்டுக்



கல்வி முறையின் பயன்" எனும் வியாசத்தில் யான் கூறியிருப்பதையே இவண் எடுத்துரைக்கின்றனன். "நாமகள் பாஷைகளெனும் பலரூபங்கள் கொண்டு செய்யுள் வாசகம் என்கிற ஆடைகள் பூண்டு மாசற்ற இலக்கணங்களுடன் பல்வித அணிகளொளித்திட கம்பீர நடைகொண்டு ஜாதிவித்தியாச மின்றி உலகில் உலவிவருகின்றனள்."

இத்தகையவிசால புத்தி மானிடர் முன்னேற்றமேயாகும். கல்வி கற்பதின் பயன் அதனால் கிடைக்கும் ஊதியம் என மேனோக்காய்ப் பார்க்குங்கால் தோன்றுகின்றது. ஆதி காலத்தில் அஃதாவது பாஷை நூல்களாய்க் கிளம்பிய காலத்தில்—அஃது எத்தேசத்திலாயினு மிருக்குக—மனுஷியர்கள் தங்கருத்தை வெளியிடுவதற்கன்றி வேறு பிரயோஜனத்தை நினைத்திருக்கமாட்டார்கள். பக்ஷிகள் சந்தோஷமாய்ப் பாடுவதைப்போல் தங்கருத்தைக் காவியங்கள் மூலமாய்க் கவிகள் பாடினர்களேயல்லாது ஊதியத்தை எதிர்பார்த்தனரில்லை. ஒருகால் கிழங்குக்காக பயிர்வைத்த ஒருவன் அதன் பலனையும் புசிப்பதுபோல் நூல்களால் கிடைக்கும் பொருளையும் அவைகளின் ஆசிரியர்களடையலாம். ஆனால் ஊதியத்திற்காகவே கல்வி கற்பதும் நூல்களியற்றுவதும் அதமமென்பது தவறாகாது. கல்வியைக் கல்வி விழைவினால் கற்கவேண்டுமல்லாது அதனால் கிடைக்கும் பொருளை எதிர்பார்க்கக்கூடாதென்பது உத்தமமான முறையாகும்.

கல்வி கற்பிப்பவர்களும் ஊதியத்தை எதிர்பார்க்கக் கூடாதென்பது ஆரியர்களது கொள்கை. ஆனால் கல்வி கற்பவர்கள் குருவின் சௌகரியங்களைக் கவனித்துவர்தமை யாதும் குருக்களும் கிடைத்ததைக் கொண்டு திருப்தி

யடைந்தவர்களா யிருந்தமையாலும் ஊதியம் என்கிற இழிவான மொழிக்கே இடமில்லாம லிருந்தது. மேனுடுகளிலும் வெகு நூற்றாண்டுகள் இம்முறையே தங்கியிருந்தது. ஆனால் காலவளவில் கல்வி கற்பதற்குச் சம்பளமும் உபாத்தியாயர்கட்கு ஊதியமும் ஏற்படலா யிற்று. ஆயினும், இதர தொழில்களைக் காட்டிலும் எக் காலத்தும் உபாத்தியாயர்களுக்கு ஊதியம் குறைவாகவே யிருந்தது. "எல்லாத் தொழில்களுள்ளும் உபாத்தியாயத் தொழில் மேன்மையுற்றது, ஆனால் வரும்படியில் மட்டும் தாழ்ந்தது" என்பது ஆங்கிலர் வசனம். மேனுட்டுக் கல்வி முறையைப் பின்பற்றிய நம் நாடு வித்தையை விற்கக்கூடா தென்பதை மறந்து ஊதியத்திற்குப் போராடிவருகின்றது. இவ்விஷயத்தில் ஆரியர்கள் கருத்தே நாகரிக முற்றதென் பது போற்றத்தக்கதாகும். ஆயினும் இதர விஷயங்களைப் போல், காலம் மாறிவிட்டபடியால் இதிலும் மாறவேண்டி யிருக் கின்றது என மேனுடுகளில் உபாத்தியாயர்கள் ஊதியத் திலும் முன்னேற்றமடைந்து வருகின்றதைப்போல் நம் நாட்டிலும் ஊதிய விருத்தியைப்பற்றிய போராட்டம் ஏற்பட்டிருக்கின்றது.

கல்விகற்கும் மாணவர்கட்கு இன்று ஏற்பட்டிருக்கும் சௌகரியங்களையும் இதற்கு முந்திய காலங்களில் ஏற்பட் டிருந்த இடையூறுகளையும் நினைக்குங்கால் மாணிடர் முன் னேற்றம் விவரிக்காமலே விளங்கும். முதன் முதலில் நூல்கள் இக்காலத்தில் ஏராளமாய்க் கிடைக்கின்றன. ஏனெனின் அச்சுப் பதிப்புக்கள் ஏராளமாய் வெளித் தோன்றி யிருக்கின்றன. முற்காலத்திலோ நூல்களின் பிரதிகளை ஒவ்வொருவரும் தாமே செய்து கொள்ளவேண்



டியிருந்தது, அதற்கு எவ்வளவோ காலஞ் செல்லும். அப்படி பிரதி செய்வதற்கும் நூல்கள் கிடைப்பதரிது. அவைகள் அபூர்வமாய் யாரோ ஒருவரிடத்தி லிருந்தால் அவருடைய தயவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்து அதைப் பெறுவதற்கு எத்துணையோ கஷ்டப்படவேண்டி யிருந்தது. ஆசிரியர்களின் தயவினால்தான் சில நூல்கள் அவர்களுடைய சிஷ்யர்களுக்கு மட்டும் கிடைக்கும்.

அக்காலத்தில் மந்திரமாயினும் தந்திரமாயினும் ஆசானின் கையிலடங்கியிருந்தது. ஆதலால் இலேசாய் அது வெளிக் கிளம்பாது. ஒரு குருவுக்குத் தெரியாமல் அவருடைய வேதத்தை நகல் செய்த ஒரு பாதிரியின் கதை ஆங்கிலத்தில் கூறப்பட்டிருக்கின்றது. கி. பி. ஆறுவது நூற்றாண்டில் ஐயர்லாந்திலுள்ள மடாலயங்களுள் ஒன்றில் பீனியன் (Finian) என்கிற சந்நியாசியின் சிஷ்யனை கொலம்பா என்பான் சங்கீதம் எனும் வேதத்தின் ஒரு பகுதியை அவருக்குத்தெரியாமல் பிரதி எடுத்துக்கொண்டிருக் கும் நாளில் ஒருகால் கண்டுபிடிக்கப்பட்டவனாய் அரசன் முன்னிலையில் குற்றஞ் சாட்டப்பட்டான். அரசனும் நீர்க்கா லோசனை செய்து "தாயைச் சேர்ந்தது கன்று" எனத் தீர்மானஞ் செய்து அப்பிரதியையுங் குருவினிடமே ஒப்புவித்துவிட்டான்!

இங்ஙன மிருக்கினும் முற்காலங்களில் கல்வி விருத்தி யடைந்த தென்பது போற்றத்தக்கதேயாம். ஆயினும் கல்வி கற்றவர் வெகு சொற்பமே. இக்காலத்தி லென்பதற் கையமில்லை. புஸ்தகங்கள் ஏராளமாய்க் கிடைக்கு மிக்காலத் தில் அவைகளை யுபயோகிக்காதவர்கள் பலரிருப்பினும்

முற்காலத்தை விட இக்காலத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அதிகமே.

இக்காலத்தில் பள்ளிகள் ஏராளமாயிருக்கின்றன. அவைகள் பொது ஸ்தலங்களி லிருக்கின்றன. அவ்விடங்களில் ஜாதிமத வித்தியாசங்கள் பாராட்டாமல் சமானமாய்க் கல்விகற்பிக்க இடமுண்டு. மாணவர்கள் தமக்கேற்பட்ட சம்பளத்தைக் கொடுத்துவிட்டால் அவரவர்கள் சக்திக்கும் உழைப்புக்கும் தக்கபடி வித்தையை யடையலாம். முற்காலத்தில் பள்ளிகள் வெகு சுவல்பம். குருவைத் தேடியே சிஷ்யன் செல்லவேண்டும். அவருக்குத் தொண்டு செய்து அவரது தயவை எதிர்பார்த்து நிற்கவேண்டியிருந்தது. அவர் நல்ல மனமுடையவராயும் இரக்கமுடையவராயு மிருந்தாலன்றி சிஷ்யனுக்குக் கதிகிடையாது. ஒரு குருவினிடமிருந்து ஒரு வித்தையைக் கற்க வெகுகாலஞ் செல்லும். முற்காலத்தில் மிக புத்திசாலியாகவும் நல்ல குணமுடையவனாயு மிருந்தால் தான் ஒருவன் வித்தையை அப்பியசிக்கக்கூடும். இக்காலத்தில் சாமானிய புத்தியுடையவனும் அவனுக்குத் தக்கவாறு கல்வி கற்கக்கூடும். ஒருகால் ஒருவன் அதிப்பிரசங்கியாயிருப்பினும் புத்திசாலியானால் கல்வி யபிவிருத்தி செய்யக்கூடும். ஒரு கலாசாலையில் அநேக உபாத்தியாயர்களிடம் ஒருவன் கற்கின்றமையால் இக்காலத்தில் அநேக அபிப்பிராயங்களைப் பெறலாகலாம்.

மேற்கூறியவற்றால் இக்காலத்திய முறைகள் வெகு நேர்த்தியானவையென்றும் குற்றமற்றவை யென்றும் சொல்வதாய் நினைக்கத்தக்கதன்று. மேனாட்டுக் கல்வி முறையின் பயன்கள் வேறு நூலில் கூறப்பட்டிருக்கின்றன. இஃதோர்பால் நிற்க முற்காலத்தைவிட இக்



காலத்தில் கல்வி கற்கச் சௌகரியங்க ளதிகமாயிருக்கின்றபடியால் மானிடர் முன்னேற்றத்திற் கிடமுண்டா யிருக்கின்றதென்பதை மட்டில் வற்புறுத்துகின்றோம். குருசிஷ்ய சம்பந்தம் முற்காலத்தியதே முற்றிலும் மேன்மையுற்றதென்றும் தற்காலத்தியது முற்றிலும் தாழ்மையுற்றதென்றும் கூறுவாருமுளர். இவ்வபிப்பிராயபேத மெங்ஙனமாயினு மிருக்குக, கல்வி கற்பதற்கு வேண்டிய சுகமான வழிகளிக்காலத்தில் ஏற்பட்டிருப்பது மானிடர் முன்னேற்றமேயாகும்.

மேலும் கல்வி கற்பிக்கு முறையும் முன்னேற்றமடைந்திருக்கின்றது. எங்ஙனமெனின் முற்காலத்தில், அநேகமாய் சிஷ்யனுக்குக் குருவால் சொல்லப்பட்டது பலமுறை சொன்னதினால்தான் அறிந்துகொள்ளப்பட்டது. அதாவது சிஷ்யனுக்குத் தெரியாத ஒரு பொருளைக் கூறவேண்டுமானால் அப்பொருளை வாயினால் தான் வர்ணிப்பது வழக்கம். அப்பொருளின் உருவத்தை வரைந்தாவது சித்திரப்படமாயாவது அல்லது பிரதிமைகளாலாவது காட்டும் முறை பொதுவாய்க் கிடையாது. மேதாவிகளான பிள்ளைகள்தான் மனக்கண்ணினால் விஷயங்களை எளிதில் பாவித்துக்கொள்ளக்கூடும். மத்தியம மதியுள்ள மாணவர்களுக்கு எதுவும் விவரமாய்க் காட்டினாலன்றி விளங்காது. இக்காலத்தில் மந்த புத்திக்கும் விளங்குமாறு பற்பல புதிய வழிகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. வஸ்து பரிசோதனை சாலைகள் (Laboratory) காக்ஷி சாலைகள் (Museum) முதலியவற்றை உதாரணமாய்க் கூறலாம்.

முற்காலத்தில் படிக்காதவர்களைக் கடுமையான தண்டனைகளுக்குட்படுத்தியதனால் பள்ளிக்கென்றால் பிள்ளைக

ளுக்குச் சிறைச்சாலைகளாய்த் தோன்றியிருந்தன. அதனால் சில சிறுவர்கள் பள்ளிகளுக்குப் போகவேமாட்டார்கள். இக்காலத்தில் பாடசாலைகளில் பயமேயில்லாததனால் சிறுவர்கள் அசிரத்தையா யிருக்கின்றனர் என்று சொல்லலாம். ஆயினும் அனுபவத்தினால் நாம் தெரிந்துகொள்ளக்கூடியது யாதெனில் பயத்தைக்காட்டிலும் நயமே சிறுவர்களை யொழுங்குபடுத்த நல்வழியென்பது சித்தம்.

பெண் கல்வியிலும் மானிடர் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றதென்பதைக் கூறவேண்டுவதில்லை. ஆண்மக்களைப்போல் பெண்மக்களும் கல்வியில் தேர்ச்சியடைய வேண்டுமென்ற கிளர்ச்சி ஒவ்வொரு நாட்டிலும் நடந்து வருகின்றதே போதுமான அத்தாட்சியாகும். எக்காலத்திலும் எத்தேசத்திலும் கல்வியில் தேர்ந்த ஸ்திரீரத்னங்க ளிருந்தார்களென்பதை யாமறிவோம். ஆனால் அவர்களது சங்கியை மிகக் குறைவுற்றதே. இக்காலத்தில் அச்சங்கியை வெகுவா யதிகரித்து வருகின்றது. ஒருகால் மேனாட்டுக் கல்வி முறை இந்நாடுகளுக்குத் தகுதியற்றதெனக் கூறலாம். கல்வி கற்பிக்கு முறைகளில் குற்றங்களிருந்தால் அவைகளை நீக்கித் தத்தம் தேசத்திற்குத் தக்கவாறு பெண்மணிகளுக்கும் ஆடவர்களைப்போல் கல்வியளிப்பது மானிடர் முன்னேற்றமேயாகும்.

---

## (17) மதம்.

இப்பிரபஞ்சத்தில் தோன்றி நிற்கும் எல்லா ஜீவராசிகட்கும் உடலும் உடல் தொழில்களும் சாமானிய தர்மங்களாயினும் மனமும் மனத் தொழில்களும் மனிதனுக்கே



விசேஷ தர்மங்களாம். மனத்தினுதிக்கும் கருத்தை வெளியிடக்கூடிய பேச்சு, பாஷை, எழுத்து, முதலியவைகளும், அகம், புறம், என்கிற எண்ணங்களும், இது கெட்டது அது நல்லது என்கிற பகுத்தறிவும், இது நிலையற்றது அது சாசுவதம் என்கிற விவேகமும், காரிய காரணவாராய்ச்சியும், மனிதனுக்கே உரியனவாம். ஆனால் "மிருகங்களும் பக்ஷிகளும் தாம், தமது எனும் அபிமானமுடையன வல்லவா? தமக்குரிய ஆகாரங்களைத் தேடிக்கொண்டு மற்றவைகளை நீக்கவில்லையா? தமக்கு விரோதிகளை ஏமாற்றித் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவில்லையா? தாம் தங்கியிருக்கவும் குட்டியிடவும் முட்டையிடவும் உறைவிடம் அமைத்துக் கொள்ளவில்லையா? தங்குஞ்சுகளைப் போற்றவில்லையா?" அப்படி அவைகள் அத்தொழில்களைச் செய்வதில் தத்தம் இனத்திற்குரிய ஒரேவிதமான இயற்கைச் செயல்களை யுடையனவேயன்றி அவைகளுக்கன்னியமான செயற்கைப் பயனான விசேஷத் தொழில்களைச் செய்யுந் திறமை யுடைத்தானவையல்ல என்பதே விடையாகும். சிலந்திப் பூச்சி நூலிழைத்து வலைகட்டிக் கொள்கின்றது. ஆனால் அந்நூலைக் கொண்டே செய்யப்படும் துணியை நெய்ய முயலுவதில்லை. நீர் நாய்கள் (Beavers) தங்கூர்மையாயான பற்களால் மரங்களையும் அறுத்துத் தள்ளித் தண்ணியில் அணையைக் கட்டிக்கொள்கின்றன; ஆனால் பெரும் மரங்களை அறுக்கக்கூடிய இரம்பங்களைச் செய்துகொள்ளத் தக்கவையல்ல. பக்ஷிகள் கூடுகட்டிக் கொள்கின்றன; ஆனால் தம் இனத்தால் செய்யப்படும் ஒரேவிதமான விடுதியையன்றி வேறுவிதமாய் மாற்றிக்கொள்ள அவைகளுக்குச் சக்தியில்லை. தங்களுக்குத் தற்காப்புக்

குரிய ஆயுதங்கள் சரீரத்தி லமைந்திருப்பவைகளை யன்றி வேறு ஆயுதங்களைக் கற்பித்துக்கொள்ளத் தெரிந்து கொள்ளுந் திறமை யில்லை. மானிடரோவெனின் தம் மறிவுத்திறத்தால் தமது நல்வாழ்க்கைக்கு வேண்டிய சௌகரியங் களைத்தையும் காலதேசங்களுக்குத் தக்கவாறு மாற்றிக் கொள்ளவும் புதிப்பித்துக்கொள்ளவும் நூதனமாய்க் கண்டு பிடித்துக் கொள்ளவும் தெரிந்துகொள்கின்றனர்.

விலங்கினங்களைப் போலன்றி உணவுக்கு வேண்டிய பொருள்களை வியவசாய மார்க்கத்தினால் உண்டாக்கிக் கொள்ள வழி கண்டுபிடித்திருக்கின்றனர் மானிடர். தற்காப்புக்கு வேண்டிய நூதன ஆயுதங்களைக் கண்டு பிடித்திருக்கின்றனர். கைத்தொழில்களால் தமக்கு வேண்டிய பொருள்களைச் செய்கின்றனர். பட்சிகளும் மிருகங்களும் தம் குஞ்சு குட்டிகளை யபிமானமாய்க் காப்பாற்றிடினும் அது சுவல்பகாலந்தான், அப்பால் அவைகள் மறுபடி கர்ப்பந் தரிக்கும் வரைதான். அவைகள் குடும்பமாய் வசிக்கின்றதில்லை. குடும்பமாய் வசிக்கும் சில ஜாதி குரங்குகளும் அறிவுடன் சங்கடமையென்று ஒன் றுஞ் செய்வதில்லை. ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்குச் செல்ல ஒவ்வொரு திரியக் (மானிடரல்லாத) ஜாதியும் ஒவ்வொரு நடையை யுடைத்தாயிருக்கின்றது. அதாவது பட்சிகள் பறக்கின்றன. விலங்கினங்கள் நடக்கின்றன. சில பிராணிகள் நீந்துகின்றன, புழு முதலியனவைகள் ஊர்கின்றன, ஆனால் மனிதனோ வெனின் முற்கூறிய எல்லா நடைகளையு முடைத்தா யிருப்பதுடன் வண்டிகள், படகுகள், மரக்கலங்கள், புகைக்கூண்டுகள், ஆகாயக்கப்பல் கள் முதலிய போக்குவரவுச் சாதனங்களைக் கண்டுபிடித்து



மென்மேல் விருத்திசெய்து கொண்டிருக்கின்றனன். எல்லா வற்றிற்கும் மேலாய் பேச்சு எனும் பெரிய வல்லமை யொன்று மனிதனுக்கு விசேஷமாய் வாய்த்திருக்கின்றது. ஆதலால் மனம் எனும் ஒருசக்தியும் அதன் தொழில்களும் மனிதனை ஒரு விசேஷ பதவிக்காளாக்கி யிருக்கின்றன.

மனம் என்பது வேறுஜீவராசிகளுக்குளதா அல்லது இல்லையா, அது சரீரத்திற் கனியமான நிலைமை பெற்றதா அல்லது எத்தகைத்து என்பவைகளைப் போன்ற பல கேள்விகளுக்கு விடைகூறும் மனவியல் அல்லது மனோ பாவ தத்துவ சாஸ்திரத்தைக்குறித்து இக்கணம் பேசவது அவசியமல்ல. ஆதலால் மனத்தொழில்களைப்பற்றிய மட்டில் இவண் பேசத் தொடங்குவாம்.

மனத்தொழில்கள் என்பவை செயல்களால்தான் கண்டுகொள்ளற்பாலன. ஒருவனது அகத்திலுதிக்கும் விஷயம் யாதாமொரு வினையால் வெளியிடப்பட்டாலன்றி பிறருக்குத் தெரியாது.

“அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்”. அங்க அவயவங்களின் சேஷ்டைகள், ஜாடைகள் முதலியனவற்றாலும் பேச்சு வார்த்தைகளாலும், எழுத்து நூல்களாலும் ஒருவனது கருத்து வெளியாக்கப்படுகின்றது. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்கிற மனத் தொழில்கள் செயல்களால் வெளித் தோன்றுகின்றன. விவேகம் எனும் உத்தமமான மனோசக்தியும் அஞ்ஞானம் எனும் அதமமான மனப்பாங்கும் மானிடரது உயர்வு தாழ்வுகளுக்கு முறையே காரணங்களாம். விவேகந்தான்

மானிடர் முன்னேற்றத்திற்குக் காரணம். அதனால்தான் மானிட வாழ்க்கை மேம்பாடடைந்து வருகின்றது.

சரித்திர வாராய்ச்சிக் கெட்டிய வளவில் தொன்று தொட்டு ஆன்றோர்கள் மானிட வாழ்க்கையி னியல்பைப் பரிசோதிக்குங் குணமுடையோர்கள் என்றே தெரிகின்றது. யாதானும் ஒரு பொருளைக் கண்ணுற்ற ஞான்றே "அஃதென்னை?" என வினவுமாப் பண்பு மனத்தொழிற் களி லொன்று. (இதைத் தகைவது அசாத்தியமே. சாத்தியமே யாயினும் நன்றன்று.) அவ் வினாவிற்கு விடை வருமட்டில் மனம் நிலைபெறாது; அமைதியடையாது; அப்பொருளை யுள்ளும் புறமும் ஐம்புலன்கட் சோதனைகட் குட்படுத்தித் தொட்டு, முகர்ந்து, உற்றுப் பார்த்துக், கடித்து, உறைத்து, உடைத்துக் காய்ச்சி, உருக்கி வார்த்து, அடித்து நீட்டிப் படம்வைத்து, கிளறிச் சின்னாபின்ன மாக்கிப் பரீட்சை செய்து பலாபலன்களைத் தெரிந்துகொள்ளும் வரை, மெய்வருத்தம், பசி, தாகம், தூக்கம் முதலிய உடல் தொழில்களில் மனஞ்செல்லாது.

"அங்ஙனமே, "நான் யார்? இவ்வுலகம் யாது? எனக்கு மிவ்வுலகத்திற்கும் சம்பந்த மென்னை? என்னை யுட்பட இவ்வுலகந் தானாய் வளர்ந்ததோ அல்லது எவராய் சமைந்ததோ?" என்று விவேகியானவன் தொன்று தொட்டுக் கேள்வி கேட்டுக்கொண்டே வருகிறான்; இனியுங் கேட்பான். இதுவரை விடை யேற்பட்டமட்டில், அதிசய மனிதருள்பட உலகத்தை யாக்கி யளித்து, அழிக்க வல்லதாகிய தொன்று (அஃதெத்தன்மைய தாயினுமாகுக) உண்டென்று கூறுவார் பலர். சிலரோ அத்தகையது



யாதொன்று மில்லை. அது எவ்வாற்றானும் அவசியமும் இல்லையென்று திண்ணமாய் நினைக்கின்றனர். ஆனால், மற்றுஞ் சிலரோ, உலகமெல்லாம் ஓராளைக் குட்பட்டிருக்கின்றது: அது அசேதனமோ சேதனமோ, கருமையோ வெண்மையோ, இத்தன்மைய தென்று குறிப்பிட்டு விளக்க முடியாது; ஆயினுமோர் சட்டதிட்டப்படி கட்டளையாய்ச் சூரியோதயமும் அஸ்தமனமும், வளர்பிறையுந் தேய்பிறையும், பௌர்ணமியும் அமாவாசையும், எண்ணிறந்த நக்ஷத்திரக் கூட்டங்களின் யாத்திரையும், அண்ட பிண்ட சராசரங்களி னுற்பத்தியும் நாசமும், மனதுக்கும் வாக்குக்கும் எட்டிப் பெட்டாமலும், நினைக்க நினைக்க வியப்பை யளித்துப் பார்க்கப் பார்க்க மயக்கங்கொடுத்து, சோதனை செய்யச் செய்ய அற்புதக் காட்சிகளை வெளியிட்டுக்கொண்டு நியதமாய் நடந்தேறி வருகின்றன. இவையெல்லாம் சூட்சும புத்தியிருந்தன்றி கொள்ளாற் பாலதேயென உரைப்பார் மற்றோர்" என உலக சரித்திரத்தின் றான் முகத்தில் யான் வரைந்துளேன். இவ்வண்ணங் கூறப்படும் பல்வகை மதக்கோட்பாடுகளில் மானிடர் முன்னேற்றம் யாதென இனி ஆராய்ச்சி செய்வாம்.

மதம், கொள்கை, கோட்பாடு, என்பவை ஒரு பொருட்கிளவிகளே யாயினும் மதம் என்பது நமது ஐம்புலன்கட்குப் புலப்படாத தெய்வ சம்பந்தமான அபிப்பிராயங்களையும் சடங்குகளையும் காரண இடு குறியாகக் காட்டும். ஹிந்து மதம், கிறிஸ்தவ மதம், மகம்மதிய மதம், ஜொராஸ்டர் மதம், என்பவை உதாரணங்களாம். ஆனால் மதம் என்பது எங்ஙனம் தோன்றிற்றென விசாரிக்கப் புகின் அதற்குக் காரணம் இரு பாகுபாடுற்ற தெனத்

தோன்றுகின்றது. மதங்களே கூறுவதொன்று; மற்றொன்று மேனாட்டு நவீன சாஸ்திரங்கள் கூறுவது; இவ்விரண்டாலும் மானிடருடைய ஞானம் விருத்தியாய்க்கொண்டே வருவது குறிப்பிடப்பாலது. மதங்களில் ஒவ்வொன்றும் தனித்தனிக் கோட்பாடுகளை யுடைத்தாயினும் மதங்களை யாராய்ச்சி செய்தவர்கட்குச் சில பொது விஷயங்கள் புலப்படும். "இவ்வுலகம் இவ்வாறு உற்பத்தியாயது, இதற்கு அன்னியமான மறைந்ததோருலகம் உளது, அதில் அமானுஷியமான சக்தியை யுடைய பல பொருள்களோ அல்லது ஒரு பொருளோ அல்லது பல பொருள்களும் அவைகளுக்கு மேலான பரம்பொருள் ஒன்றுமோ இருக்க வேண்டும், அவைகளின் ஆணைகளுக்குட்பட்டது இவ்வுலகம், ஆதலால் நல் வாழ்வைத் தேடுவோர்கள் அவைகளை வழிபடுதல்வேண்டும்." என்கிற விஷயங்களைக் குறிப்பிடலாம்.

நல்வாழ்வென்பது இவ்வுலகுக்கும் அவ்வுலகுக்கும் பொருந்தியதே. இவ்வுலகில் நல் வாழ்வென்பது உடலுக்கும் மனத்துக்கும் உடன்பட்டது. அவ்வுலகில் நல் வாழ்வென்பது ஜீவன் அல்லது ஆத்மாவைக் குறித்தானது. அது மோக்ஷமெனப்படும். மேலும் இவ்வுலகில் நன்னடவடிக்கை யுள்ளவர்களுக்கு சுவர்க்கம் என்பதும் தீயநடையுற்றவர்களுக்கு நரகம் என்பதும் சாதாரணக் கொள்கை. ஆத்மா வென்பதோ மனிதனுக்கு மட்டிலுண்டென்றும் ஜீவராசிகட்கெல்லாம் உண்டென்றும் எல்லா வஸ்துக்களிலும் உண்டென்றும் பலவாறாய்க் கூறப்படும். இதுநிற்க, ஆத்மா எவ்விடமிருந்து எங்ஙனம் தோன்றி இவ்விடந் தங்கி பிறகு எவ்விடம் செல்கின்றதென்கிற விஷயமும் பலவாறாய்க் கூறப்படும். மேற் கூறப்பட்ட பரம்பொருளுக்



கும் ஆத்மாவுக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றியும் பலவித கோட்பாடுகள் உள்ளன. இங்ஙனம் கூறப்படும் மறுமை, பரம்பொருள், ஆத்மா, மோக்ஷம், சுவர்க்கம், நரகம், ஆகிய எண்ணங்களுக்குத் தக்கவாறு மானிட வர்க்கங்களுள் அநேக சடங்குகள் தோன்றியிருக்கின்றன.

இவைகள் ஓர் பாலிருக்க, இவைகளின் உண்மையை யறியவேண்டி ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மதத்திலும் தத்துவ ஞானிகளின் அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மேனாட்டு நவீன சாஸ்திரிகள் தங்களுடைய பரீக்ஷையினால் காணப்படும் பிரத்தியக்ஷ வாதங்களின் படியே மதமென்பதை விளக்கியிருக்கின்றனர். இவ்வாறு உலக உற்பத்தி, அதில் நடைபெறும் உலக யாத்திரை, தத்துவ நிர்ணயம், ஆகிய விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தாலன்றி மானிட ஜன்மம் பயனுடைத்தன்று.

தற்காலத்தில் உலகமெங்கும் காணப்படும் பல நிலைமைகளிலுள்ள மானிட சமூகத்தார்களின் மதக் கோட்பாடுகளில் ஒன்றை மற்றொன்றுடன் ஒப்பிட்டுப் பார்க்குங்கால் "ஆச்சரியம்" என்பதே மதங்களுக்கு மூலகாரணங்களில் ஒன்றாயிருக்கக் கூடுமோ வெனச் சிலர் தர்க்கிக்கின்றனர். கிராமபோன் (Gramaphone) யந்திரத்தைப்பார்க்காமலும் கேட்காமலும் உள்ள மாந்தர்களிடையில் அதை வைத்துப் பாடவும் பேசவும் செய்திடின் கேட்பவர்களில் சிலர் அதனிடமின்று ஓடியே விடுவார்கள். ஒருசால் தைரியமாய்ப் பக்கத்திலிருக்குஞ் சிலர் ஏதோ தெய்வச் செயலென்று நினைக்கலாம், அல்லது அவர்களுக்குத் தெரிந்தவர்களுடைய குரலைக் கேட்டிடின் ஏதோ மந்திர சக்தி என்று நினைக்கலாம். இறந்தவர்களுடைய குரலைக் கேட்

டால் அவரிடம் அவர்களுடைய பிரேதஜீவன் அதற்குட் புகுந்து நிற்கின்ற தெனக் கூறலாம்.

பிராணிகளும் நமக்குப் பழக்கமில்லாத புதியதோர் பொருளைப் பார்க்குங்கால் வியப்படைந்து பிரமிக்கின்றன. ஒருகால் பயமுங் கொள்கின்றன. ஆனால் அதன் காரணத்தைத் தேடுகின்றதில்லை. மாக்களோ மக்களின் ஆச்சரியமான தோற்றங்கள் தமக்கு மேலான சக்தி பெற்றுத் தெய்வத்தன்மையுள்ளவை யென்றாவது அல்லது அவைகளிலுள்ள தெய்வங்கள் தங்கி நிற்கின்றன வென்றாவது எண்ணி அவைகளைக் கண்டு வணங்கி அவைகளின் மூலமாய் நல்வாழ்வை யடைய விரும்புகின்றனர். மலைகள், ஆறுகள், விருட்சங்கள், மரங்கள், விலங்குகள், பட்சிகள், முதலியவைகளெல்லாம் யாதானும் ஓர் ஆச்சரியமான விஷயம் காணப்படின், அவைகள் தெய்வீகத் தன்மை பொருந்தியவைகள் எனக்கருதுவது வழக்கம். நமது நாட்டில் இவைகளுக்கு உதாரணங்கள் எண்ணில. இமயமலை பர்வதராஜனென்றும் கங்கைநதி புண்ணிய நதியென்றும் எந்த நீர்வீழ்ச்சியும் ஆகாசகங்கை யென்றும் அரசமரம் விருக்ஷராஜனென்றும் காமதேனு ஆவினத்திற்கு முதல் தேவதையென்றும் கருடன் விஷ்ணுவுக்கு வாகனமானதால் ஆழ்வாரென்றும் பாம்புநாகராஜனெனவும், ராமகிருஷ்ணாதிகள் கடவுளவதாரங்களென்றும், நம் தேயத்தில் கூறுவது வழக்கம். இங்ஙனம் அன்னிய நாடுகளிலும் காணப்படுகின்றன. இதை விரிக்கின் பெருகுமென விடுத்தனம்.

இவ்வுலகில் காணப்படும் வஸ்துக்கள் யாவும் பஞ்ச பூதங்களின் அம்சங்களாகப் பிரிக்கப்படலாம். அவைகளி



னுதவியின்றி மாந்தர் வசிக்க முடியாததலால் அவைகளும் சிலரால் தெய்வங்களாகக் கொண்டாடப்படுகின்றன. வாழ்வுக்கு உபயோகமான வஸ்துக்கள் தெய்வங்களாகக் கொண்டாடப்படுகின்றன என்பது பல தேசசரித்திரங்களிலும் காணப்படுகின்றது. நில்வுலகுக்குப் பூமாதேவி, ஜலத்துக்கு வருண தேவதை, நெருப்புக்கு அக்கினி பகவான், காற்றுக்கு வாயு, ஆகாசத்திற்கு சூரியன், அதி தேவதைகளென ஆரியர்கள் எண்ணினார்கள். இவைகள் தவிர இடி, மழை, மேகம், புயற்காற்று முதலிய இந்திரன் வசத்தி லிருக்கின்றன. இந்திரன் என்பான் தேவதைகளுக்கரசன். மேலும் மனிதனுக்கு வேண்டிய காரியங்களுக்கு உதவியான மழை மேகத்தினின்று வருவதாலும் மேகம் சூரியவெப்பத்தினா லுண்டாவதாலும் வாழ்வுக்கு இன்றியமையாதது சூரியனே யானதாலும் அச்சூரியனும் ஒரு தெய்வமாய் ஆரியர்களுக்கு விளங்கினான்.

மனிதனுடைய மனத்துக்கு தெய்வம் சந்திரனெனப் படும். சிலசெடிகள் ஆச்சரியமான ஔஷத சக்தி பொருந்தியவை யென அவைகளும் சில தேசங்களில் தெய்வங்களாம். வட அமெரிக்காவிலுள்ள இந்தியர்களில் சிலர் புகையிலையைத் தெய்வமாகக் கொண்டாடினர் என்று கேள்விப்படுகிறோம். பெரு (Peru) வில் கோகோவைப் புண்ணிய வஸ்துவாய்ப் பூசை செய்தனராம். ஸோமலதை யென்பதை யாகங்களில் ஆரியர்கள் உபயோகப்படுத்தினர்.

வியாதிகள் தெய்வங்களுடைய செயல்கள் என்பதற்கு உதாரணங்கள் குறைவன்றி உலகமுழுதும் காணப்படுகின்றன. நமது நாட்டில் ஒவ்வொரு ஜ்வரமும் அம்மையும்

வாந்திபேதியும் மாரியம்மன் செயல்களாம். பைத்தியம் பிடித்தால் யாரோ சூனியம் வைத்துவிட்டார் என்கிற நம்பிக்கை அநேக நாடுகளில் பரவியிருக்கின்றது.

உயிருடன் தங்கி யிருக்கும் காலத்தில் மனிதனை யாட்டிவைக்கும் ஜீவனை என்பதொன்று அவனிறந்தபிறகு பிரேதஜீவனாகப் பல்வித உருவங்களுடன் பல்வித வினைகளைச் செய்வதும் இவ்வுலகிலுள்ள பந்துக்களையும் மற்றுஞ் சிலரையும் காப்பாற்றவும் அவைகளுக்குக் கெடுதல் செய்யவும் சக்தி யுண்டென்னும் நம்பிக்கையும் அவைகட்குத் திருப்தி செய்வதற்காகவும் ஏராளமான சடங்குகள் தோன்றி யிருக்கின்றன. இறக்குந் தருவாயில் சில சடங்குகளும் இறந்த பிறகு சவத்திற்கு உபசாரங்களும் நடத்தப் படுகின்றன. சவத்தைப் புதைப்பவர்கள் அதற்குப் பிரியமான ஆடைகள், ஆயுதங்கள், ஆபரணங்கள், முதலியவைகளை அதனுடன் அடக்கஞ் செய்கின்றனர். சவத்தை எரிப்பவர்கள் அதற்கு உயிருக்குங்கால் கொடுத்துவந்த ஆகாரம்முதலியவைகளை உயிருடனிருக்கும் பிறர்களுக்குத் தானஞ் செய்கின்றனர். மாதச் சடங்குகளும் வருஷச் சடங்குகளும் நடத்தப்படுகின்றன. அதனால் பிரேதஜீவனுக்குத் திருப்தியுண்டாமென நினைக்கப்படுகின்றது. சில ஜாதியார் யாதொரு சடங்குகள் செய்யாமல் பிரேதஜீவனுக்காக ஜபஞ் செய்கின்றார்கள். அதனால் அதற்குச் சுகமுண்டாகுமென நினைக்கின்றார்கள்.

மானிடர்களைப் போலவே தெய்வங்களும் உடலும், அங்கமும், சுகமும் துக்கமும், காமாதி அறுகுணங்களும் சம்சாரமும் பெற்றிருக்கின்றன வெனக்கருதும் மதங்களு மிருக்கின்றன.



இங்ஙனம் கருதி வாழ்நாட்களைக் கழிக்கும் நரர்கள் ஓர் பக்கம் நிற்க, சில ஜாதியார்கள் இம்மாதிரியான கொள்கைகளை யறிவீனமென நினைத்தும் பிரபஞ்சம் யாவும் ஒரே தெய்வத்தினால் சிருஷ்டிக்கப் பட்டதென்றும் அத்தெய்வமன்றி வேறொன்று மில்லையென்றும் கூறுகின்றனர். சில மதங்களில் தெய்வமொன்றே உளதாயினும் அத்தெய்வத்தின் அம்சங்களாகப் பல தெய்வங்கள் தங்கி மானிடர்க்கு வேண்டிய சௌகரியா சௌகரியங்களையும் புரிந்து அத்தெய்வத்திற்குட்பட்டவைகளாக இருக்கின்றன வெனச் சொல்லப்படுகின்றது. அத்தெய்வம் ஒன்று கண்ணுக்குப் புலப்படாமலும் சர்வசக்தியுற்றதாயும் சர்வாந்தர்யாமியாயும் சர்வசாக்ஷியாயும் பிரபஞ்சம் முழுதுமளாவி மனிதருடைய வாழ்நாளை அவரவருடைய கர்மங்களுக்குத் தக்கவாறு நடத்துகின்றது என்று சொல்லுதலும் வழக்கம். மேலும் ஹிந்து மதம் மனிதர்களின் ஜீவன் அல்லது ஆத்மா வென்பது கர்மங்களுக்குத் தக்கவாறு அநேக ஜன்மங்கள் —கல்லாயினுமிருக்குக புல்லாயினுமிருக்குக புழுவாயினு மிருக்குக புள்ளாயினுமிருக்குக மிருகங்களாயினுமிருக்குக மனிதனாயுமிருக்குக—எடுக்கின்றன வெனக் கூறுகின்றது. ஆனால் கிறிஸ்தவ மதம் மகம்மது மதம் போன்றவை ஜீவனுக்கு ஒரேபிறவிதானென்றும் அது மானிடப்பிறவிதானென்றும் ஆத்மா வேறொன்றுக்குமில்லை யென்றும் இறந்தபிறகு வாழ்நாளின் கர்மங்களுக்கிணங்க நியாயத் தீர்ப்பு நாள்—அது எக்காலத்தில் வரினும் வருக—அன்று தண்டனையும் மோக்ஷமுமளிக்கப்படும் என்றும் கூறுகின்றன. தண்டனைகளும் மோக்ஷமும் பலவிதமாய்

வர்ணிக்கப்படுகின்றன. நரகங்கள் எமவாதனை தண்டனைகளை யனுபவிக்க வேண்டிய இடங்கள். அந்த நரகங்களின் குரூரங்களை எடுத்துரைக்கசாவகாசமில்லை. அவைகளை நமது நாட்டில் வழங்கிவரும் கருடபுராணம் முதலிய பல நூல்களின்வாயிலாய்த் தெரிந்துகொள்ளலாம். மோக்ஷஸ்தானமென்பது சுவர்க்கமெனப்படும். அதிலுள்ள சுகங்களை ஒவ்வொருமதமும் ஒவ்வொருவிதமாய்க் கூறுகிறது. இவைநிற்க, மோக்ஷமென்பதற்குப் பொருள் ஜனனமரணமாகிய சம்சார சக்கரத்தினின்றும் வெளிப்பட்டு நித்தியமுக்தரும் நிர்வாண தசையை யடைவதுதான் எனக் கூறும் மதங்களுமிருக்கின்றன. இவைகளெல்லாம் ஒருபுறம் நிற்க, இப்பிரபஞ்சம் என்பது உருவெளித் தோற்றமென்றும் உண்மையில் பார்க்குமளவில் பிரம்மம் என்கிற ஒரே பொருளுண்டென்றும் அதன்வண்ணமே இப்பிரபஞ்சமென்பது மாயா கல்பிதமென்றும் இவ்வுண்மையைத் தெரிந்தவன் ஞானியென்றும் அவனடைவதுதான் மோக்ஷம் என்பர் வேதாந்த சாஸ்திரத்தை ஒருவாறுணர்ந்தவர். இச்சாஸ்திரத்திற்கும் பொருள் வெவ்வேறு விதங்களாய் விளம்பி அந்த ஞானத்தை யுடையவர்கள்தான் மோக்ஷமடைவார் என்பார் வேறு மதஸ்தர்கள்.

இங்ஙனமிருக்க, மத விஷயத்தில் மானிடர் முன்னேற்றமென்ப நிலைகளின் மானிடர்கள் காரியத்திற்குக் காரணத்தேடும் மனோசக்தியினால் ஒவ்வொரு இயற்கைச் செயலையும் பரிசோதித்து அதற்கு மூலகாரணத்தைக் கண்டு இவ்வுலகத்திற்கு ஆதாரம் ஒரு பொருள் உண்டென்று கருதி அதை இனியுந் தேடிவருவதே போதுமான சாட்சியாகும். இவ்வாராய்ச்சியை நடத்திவரும் மேனாட்டு



நவீன சாஸ்திரிகள் இச்சரீரமும் மனமும் எத்தன்மைத்தென பரீக்ஷை செய்யுங்கால் இரண்டும் அழிந்துபோவனவென்றும் ஆத்மாவென்ற அழியாப்பொருளில்லையென்றும் இப்பிரபஞ்சத்துக்குக் காரணமான வஸ்து அசேதனமென்றும் ஒருகாலத்தில் வெளியிட்டிருந்தனர். ஆனால் ஸர் ஆலிவர் லாட்ஜ் முதலாகிய நவீன தத்துவ ஞானிகள் சரீரமழிந்தபிறகும் சரீரத்தில் வாழுங்காலத்திலுள்ள வஸ்துவான யாதோ ஒன்று எஞ்சிநிற்கின்றதெனத் தற்காலத்தில் கருதுகின்றனர். ஆனால் இக்கருத்தை முற்காலத்திலுள்ளவர்கள் வெளியிட்டிருப்பினும் எங்ஙனம் இதனை நிரூபிக்கக்கூடுமென்கிற வழியை நமக்குக் காட்டவில்லை. அவரவர்கள் நாமே கண்டுகொள்ளும்படி யோகம் முதலிய சாஸ்திரங்களை விதித்திருந்தும் இதர்களுக்குப் புலப்படுவது சாமானியமல்ல. நவீன மனவியல் ஆராய்ச்சி பெருகப் பெருக பண்டைக்காலத்தில் மனக் கண்ணினால் கண்டுகொள்ளப் பட்டவைகள் பிரத்தியக்ஷமாயும் வெளிப்படையாயும் இனிக் காணப்படலாம். தற்காலத்தில் நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட முறை விருத்தியாகும்பக்ஷத்தில் உள்ளங்கை நெல்லிக்கனிபோலும் தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாய் நக்ஷத்திரங்களைப் பார்ப்பதுபோலும் ஆத்மா முதலிய மதவிஷயங்களின் தத்துவம் யந்திரமூலமாய் எல்லோருக்கும் வெளியாகுமாறு கண்டுபிடிக்கப்படலாம். ஒருகால் கிராமபோனின் வழியாயும் பயாஸ்கோப் வழியாகவும் இறந்தவர்களைப் பேசவும் பார்க்கவும் முடியும் எனவும் புலப்படுகின்றது. வருங்காலத்தில் எல்லா மதங்களிலுங் காணப்படும் பொது விஷயங்கள் உண்மையானவை என விளக்கும் எனவுந் தோன்றுகின்றது.


எல்லாவற்றிற்கும் மேலாய்த் தம் மதம் ஒன்றே மோக்ஷசாதகமென ஒவ்வொரு மதமும் கூறுவது தவறுடையதானாலும், ஒவ்வொரு மதத்தின் மார்க்கமும் உயர்ந்த நெறிகளை வற்புறுத்துவதாலும், ஒவ்வொரு மதமும் மேலான பரம்பொருள் ஒன்றுண்டெனப் பறைசாற்றுவதாலும், ஒவ்வொரு மதத்தின் ஆசாரங்களும் நடத்தைகளும் என்னவாயிருக்கினும் உலகிலுள்ள மதங்களெல்லாம் நன்கு மதிக்கப்படவேண்டும் என்கிற சமதிருஷ்டி அதிகரித்துக் கொண்டுவருவது மானிடர் முன்னேற்றம். முற்காலங்களில் மதப்பற்றுகளால் நடந்திருக்கும் போர்கள் எண்ணில. அவைகள் இப்பொழுது அநேகமாய் நின்றுவிட்டனவென்றே சொல்லலாம். இன்றைக்கும் இங்குமங்கும் சண்டை சச்சரவுகள் நிகழ்கின்றன. ஆயினும் அவைகள் முற்காலங்களைப்போலன்றி சுலபமாய்ஜன சமூகவாழ்க்கையை பாதிப்பவர்களால் அடக்கப்படுகின்றன. எங்ஙனமாயினும் மதப் பொறாமைகள் நீங்கி, தம் மதமே விசேஷமானதாக வேண்டுமென்கிற துருட்டெண்ணம் விலகி சர்வமத சமரச நன்னிலை பெறுவது மானிடர் முன்னேற்றமாகும்.

---

The Arrow Press, Mount Road, Madras.

சென்னை இராயப்பேட்டை வெஸ்லியன் கல்லூரியில்
சரித்திர போதகாசிரியரான
வை. சூரியநாராயண சாஸ்திரியார் எம். ஏ. எல். டி.
அவர்கள் இயற்றிய

# உலக சரித்திரம்.



விலை ரூ 1-4-0

## சில மதிப்புரைகள்.

திராவிடன்:—(12-2-23) உலகத்திலுள்ள எல்லா நாடுகளின் சரித்திரங்களைப்பற்றியும் ஆசிரியர் தெளிந்த தமிழ் நடையில் எழுதியிருத்தல், தமிழகத்துக்கு நலம் பலன் விளைவிப்பதாகும். ஒவ்வொரு நாடுகளின் அரசியல், நாகரிகம், மொழி, தொழில்; மக்களின் மனப்பான்மை, இயற்கைநிலை முதலிய பலவற்றையும் ஆசிரியர் செவ்வனே ஆராய்ச்சி செய்து வரைந்திருத்தல் பாராட்டற்பாலதாகும். இன்னும் பல அரிய பெரிய பொருள்களையும் ஆசிரியர் ஆராய்ந்தறிந்து கூறியிருத்தல் நமக்கு மகிழ்ச்சி தருகின்றது. இத்தகைய நூல்கள் பல தமிழகத்துக்கு இன்றியமையாதன வேண்டப்படுகின்றன. மேனாட்டு ஆராய்ச்சி முறையைத் தழுவி, தமிழ் மக்கட்கு இந்நூல் எழுதித்தந்த ஆசிரியருக்குத் தமிழ் மக்கள் நன்றிபாராட்டக் கடப்பாடுடையர்.

நவசக்தி:—(9-3-23) சரித்திரங்களில் இப்பொழுது தமிழ் நாட்டவருக்குச் சிறிதளவு ஊக்கம் உண்டாயிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் சரித்திர ஞானம் அதிகமாகத் தமிழ் நாட்டில் பரவுவதற்கு இன்னும் லட்சக்கணக்கான நூல்கள் வெளிவரவேண்டும். இந்நூலில் உலகத்திலுள்ள எல்லா நாடுகளின் சரித்திரமும் சுருக்கமாகவும் அழகாகவும் கூறப்பட்டிருக்கிறது. இந்தியாவைப்பற்றிய சரித்திரம் முதலில் கூறப்பட்டிருப்பதோடு சிறிது விரிவாகக் கூறப்பட்டிருப்பது சாலவும் பொருத்தமுடைத்து. இந்நூலாசிரியர் தமிழ் நாட்டிற்கு ஒரு பெருநன்மையைச் செய்தார் என்று கொள்கிறோம். இதனைத் தமிழர் ஆதரிப்பாராக.

சுதேசமித்திரன்:—(21-4-23) இப்புத்தகத்தில் இவ்வுலகின்கண் தோன்றி வாழ்ந்தழிந்த பல ராஜ்யங்களின் வரலாறுகள் நன்கு எளிய தமிழில் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. தங்கள் தங்கள் நாட்டின் சரித்திரங்களைக் கற்று பிறநாடுகளில் மனிதர்கள் அந்தந்தக் காலங்களில் அடைந்திருக்கும் மேம்பாட்டைப் பெரும்பாலோர் அறிந்து கொள்ளாமலிருப்பதினாலேயே ஜாதி கர்வமும், மதத் துவேஷமும் மிகுந்து பல நாடுகள் பெரும் யுத்தங்களில் பிரவேசிக்கின்றன. இக்கேட்டை நீக்குவதற்காகவே புலவர் பெருமான் எச். ஜி. வெல்ஸ் உலக சரித்திரமென்ற நூலை இயற்றிச் சரித்திரம் கற்பிக்கும் மார்க்கத்தைக் காட்டியிருக்கிறார். அவர் கோட்பாடுகளுக் கிணங்க நம் தாய்பாஷையாகிய தமிழில் சுருக்கமாக இயற்றப்பட்டிருக்கும் இந்நூலைப் பள்ளிக்கூடங்களில் கற்பிப்பது உலக சமாதானத்தை விருத்தி செய்ய ஒரு தகுந்த உபாயமாகும்.

To be had of the Author or S. V. V. Brothers
c/o
CURZON & CO., Mount Road, Madras.
or V. NARAYANA RAO.,
[illegible], Kondichetty Street, Madras.

[illegible] stamp

இந்த நூலாசிரியரால் இயற்றப்பெற்ற

# தமிழ் நூற் பெருக்கம்

விலை அணா 0-4-0 அச்சில் இருக்கிறது.

